# குரு கிருபை



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

ஸ்ரீசத்குரு திருவடி துணை!

# குருகிருபை

அருளியவர்

**தூளி பாபா**

**அன்பின் குடில்**

கோம்பூர்.

**வெளியீடு :**

அன்பின் குடில்,

253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,

கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,

பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,

தமிழ்நாடு - 638 311

போன் : (04256) 227655

முதற்பதிப்பு : ஜூன் (ஆனி) 2009

300 பிரதிகள்

அச்சிட்டோர்:

ஆரித்ரா பிரிண்டர்ஸ்,

பெங்களூர் - 560 003.

தொலைபேசி : (080) 23346025



(ஸத்ய வாக்கை)

ஸத்யம் பேசு. **ஓம்** தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

**பக்தி.**

**"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம்;" ஓம்!!!**

**ஞானம்.**

**"அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம், அகமே எல்லாம்;"**

**"எ ஜகம் பரம் ஜீவர்களும் இல்லை"!!!**

மஹான் பிரம்ம "**ஸ்ரீ சமர்த்த ராம்தாஸ்**" அம்ஸமான
பரம் பூஜ்ய ஸ்ரீ "**பப்பா ராம்தாஸ்**" அவர்களின்
பொன்னான பாத கமலங்களையும்;
பிரம்ம ஸ்ரீ அன்னை "**முக்தாபாய்**" அம்ஸமான
பூஜ்ய ஸ்ரீ "**அன்னை கிருஷ்ணாபாய் மாதாஜீ**" அவர்களின்
பொன்னான பாத கமலங்களையும்,
சாஷ்டாங்க தெண்டனிட்டு நமஸ்காரம் செய்து, அவ்விருவரின்
"**ஸ்ரீ பாத தூளியை**"
எம் சென்னிசூடி, அதி பவ்யமாய் எழுந்து நமஸ்கரித்தவண்ணம்
அந்த அதீதமானவர்களின் ஸத்ஸிஷ்யனையும், "**வால்மீகி**"
அம்ஸ சீலனையும், எம் அருந்தவப்புதல்வனையும், ஸாதுசேவ மைந்தனையும்
அமைந்த எம் குழந்தை "**ஸத்ஸத் ஆனந்தா**"வை
வாழ்த்தி ஆசி கூறியும், இந்த "**குரு கிருபை**" மலரை
பணிவன்புடன் "**அவர்கள் திருவடிகளில்**" சமர்ப்பிக்கிறேன்.

**பாபா.**



பூஜ்யஸ்ரீபப்பாவின் ஸ்ரீகுருதேவர்!

**பரம்பூஜ்ய ஸ்ரீபால கிருஷ்ண ராவ்!**



பரம் பூஜ்ய "ஸ்ரீ பப்பா ராம்தாஸ்"



பூஜ்ய "ஸ்ரீ அன்னை கிருஷ்ணாபாய் மாதாஜீ"



பூஜ்யஸ்ரீ “ஸத்ஸித் ஆனந்தா”



பரம் பூஜ்ய ஸ்ரீ ஸத் ஸித்ஆனந்தாவுடன்,

பிரம்மஸ்ரீ முக்தானந்த மஹராஜ்



(ஸத்ய வாக்கை)

ஸத்யம் பேசு. **ஓம்** தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

# ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓ

ஓஎம் ஸத்ய சொரூபமான அறிவுக் குழந்தாய்!

**"ஸத்சித் ஆனந்தா"!**

உன் பேரன்புக்கும், உன் ஸத்குரு வாக்கியார்த்த சிரத்தா "சேவை"க்கும், உண்மையான பணிவுக்கும், உள்ளக் கனிவுக்கும் சிரம் தாழ்த்தி வணங்குகிறோம். ஜடபரதனின் வாழ்க்கையும் உபதேசமும் பரிபூரணமாக நிறைந்த இந்த நூலின்,

## குரு கிருபையின் பொருளடக்கம்!


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஜனனம் | 1 |
| 2. | தபசின் மாற்றம் | 2 |
| 3. | உணர்ச்சிக்கு அடிமையாகுதல் | 8 |
| 4. | பரதன் மரணம், மானின் ஜனனம் | 9 |
| 5. | ஜாக்ரதையான மானின் ஜன்மா | 10 |
| 6. | ஸத்குரு கிருபையும் சேவையும் | 11 |
| 7. | ஜடபரதனின் பால்யம் | 13 |
| 8. | பைத்தியமாகி செயல்படுதல் | 16 |
| 9. | ரகுகுணனுக்கு உபதேசம் | 25 |
| 10. | ஜடபரதனின் வாக்யம் | 33 |
| 11. | கேள்வி பதில் | 40 |
| 12. | உப கதைகள் | 47 |
| 13. | ரிபுகீதையின் சிறப்பு | 53 |
| 14. | முடிவுரை | 57 |
| 15. | பிறவி ரகஸ்யம் | 63 |
| 16. | ஆனந்தாஸ்ரமம். | 101 |
| 17. | அன்பின் குடில். | 107 |


குருஜி பாபா.





# முகவுரை!

(1)

(ஸத்யவாக்கை)

ஸத்யம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

## "ஸத்ய ஓம் வாசகம்"

ஸத்யம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்!

ஓம் ஞான அமுதங்களே!

அடக்கத்தினால் ஆன்மபலம் பெறுவீர்களாக. குற்றம் குறை பாராதிருந்தால் மனோநாசம் அடைந்து உங்கள் சாதனை முற்றுப் பெறுவதாக. வீண் கற்பனை பண்ணாதிருந்தால் வினைகள் அழிந்து மனோநலம் பெறுவீர்களாக. கோரகுணமேயிருந்திகள் பண்ணாமல் ஸத்வகுணம் ஒன்றுமட்டும் ஏற்றுக்கொண்டீர்களானால் தெய்வநிலை பெறுவீர்களாக!

ஞானமழலைகளே! ஆத்மவித்தையாகிய இந்த ஆத்மஞானமானது லௌகீக தெய்வீக நிலைகளையும் தாண்டிய நிலையாகும். லௌகீகத்தில் கண்டிப்பும் தண்டிப்பும் உண்டு. ஆனால் தெய்வீகத்தில் ரட்சிப்பு அதாவது கருணை ஒன்றே உண்டு. அங்கு கண்டிப்பும் தண்டிப்பும் இல்லவே இல்லை. ஆனால் பரநிலையாகிய இந்த ஆத்மஞானமானது எக்குணமும் அற்று நிர்குணமாகும். அது குணாதீத நிலையாகும். அறுபத்திநான்கு கலைகளையும் அனுபவ நிலையில் சுருக்கி பதினாறு கலைகளாக்கினார்கள். இந்த பதினாறு கலைகளிலும் ஆத்மவித்தை என்ற ஒன்றைத் தவிர மற்றைய பதினைந்து கலைகளும் சக்தி சொரூபமானது. அதாவது ஏதாவது பலன்தருவதாகும். ஆனால் இந்த ஆத்மஞானமானது பலனே தாமானது. வேறு எந்த பலனும் இல்லவே இல்லை. ஆகவே தான் இதை சிரத்தையுடன் ஏற்கும் மானுடம் இல்லையெனலாம். அதைப் போலவே இதை உணர்ந்த ஸத்குருவும் இல்லை. அதை உணர்த்தும் ஸத்குருவும் இல்லவே இல்லை. மூன்று லோகங்களிலும் ஒருவனே உண்டு.



உ

## காரணம் ?

கண்டிப்பும் தண்டிப்பும் இருந்தால் பாடம் ஏறும்.
கண்டிப்பும் தண்டிப்பும் இல்லையானால் அனுபவம் ஏறும்.

சந்தேகமாக இருக்கிறதா?

"பாடம்": உடல், உலக "உணர்ச்சிகளுடன்" பாடம், படிப்பு "ச்ரவணத்துடன்" நின்றுவிடும். அங்கு அவஸ்யம் கண்டிப்பும் தண்டிப்பும் வேண்டும். (இதில் கேள்வி பதில் அடங்கும்)

அனுபவம்:— உடல், உலக, உறவு அற்ற "தெய்வீக உணர்வுடன்" சர்வ சதா "மனனம்" அவஸ்யம் வேண்டும். இங்கு கண்டிப்பும் தண்டிப்பும் அவஸ்யம் இருக்கக் கூடாது. ஆனால் "பரிந்துரை உண்டு".

ஸ்வய அனுபவம்:- இங்கு "தைலதாரை போல்" ஒரே சிந்தனை தான் உண்டு. இதை "நிதித்யாசனம்" எனச் சொல்லலாம்.

"ச்ரவணம்" என்ற கேள்வி, பதிலிலும், பாடம் படிப்பிலும் "ஸம்சயங்கள்" சம்பந்தம் கொள்கிறது. ஆகவே இங்கு கண்டிப்பும் தண்டிப்பும் அவஸ்யம் தேவைப்படுகிறது.

"மனனம்" என்ற அனுபவத்திலும் கண்டிப்பும் தண்டிப்பும் இருந்தால் மனம் அலைவுறும். அங்கு சபலம் சலனம் சந்தேகம் வந்தே தீரும். ஆகவே அங்கு மனனம் என்ற "ஓர்மித்த அனுபவம்" நிலைக்காது. ஆகவே இங்கு பரிந்துரைதான், அதாவது "சாந்தமாகவும் அமைதியாகவும்" தான் விளக்கம் கொடுக்க வேண்டும்.

இங்கு வேகம், ஆத்திரம் அவசரத்துடன் படபடப்பு இருந்தால் மனனம் நிலைக்காது. அது ச்ரவணத்துடன் நின்றுவிடும். அதாவது ஒரு காதில் வாங்கி மறு காதின் வழியாக போய்விடும். ஓர் சுவரில் எறியப்படும் எறி பந்து திரும்பவும் அது நம்மிடமே வருவது போல் அது வியர்த்தமாகும்.

இங்கு கலி தோஷமானது அதிகமாக ப்ரவேசிக்கப்படுவதால் வேகம், ஆத்திரம், அவசரம் கூடி உடனே முடிவு தெரிய வேண்டுமென்ற படபடப்பினால் காரியங்கள் ஏறுக்குமாறாக நடக்கிறது. இது உடல் உலகுக்கு பொருந்தும் தெய்வீகத்திற்குப் பொருந்தாது.

மேலும் உடல் உலக உணர்ச்சிகள் நூற்றுக்கு நூறு அனுபவிக்கப்படுவதால் தெய்வீக உணர்வுக்கு இடமில்லாமல் போய்விட்டது.

"அடக்க நினைப்பதும், அடக்கி இருப்பதும் உடல் உலக உணர்ச்சியாகும்."
"அடங்கி இருப்பதும், அடங்கி உறைவதும் தெய்வீக உணர்வாகும்."





உ

௧ மேலும் சிரவணம் என்றால் படிப்பது கேட்பது ஆகியவையாகும். "இது புறச்செயல்!"

௨ மனனம் என்றால் படித்ததையும் கேட்டதையும் பற்றி சிந்தித்து செயல்படுதல். "இது அகச்செயல்!"

௩ நிதித்யாசனம் என்பது படித்ததையும் கேட்டதையும் பற்றி எண்ணி எண்ணி செயலிவிட்டு அதுவாக இருத்தல். அதுவாக என்றும் நிலைத்த நிலையில் இருத்தல் "இது அக உணர்வாகும்"!

இந்த கலியுகத்தில் விஷயாதி (விஷம்) குணங்களே முழுமையாக இருப்பதால் அகச்செயலுக்கும், அகவுணர்வுக்கும் இடம் இல்லாமல் போய்விட்டது. மேலும் புறச்செயலாகிய படிப்பதும் கேட்பதும் "கோரவிருத்தியாக" இருக்கிறது. சாந்தம், அமைதி, பொறுமை, இல்லவே இல்லை. அப்படி புறவிருத்திகளிலிருந்து விடுபட வேண்டுமானால் அவஸ்யம் அகச்செயலும், அக உணர்வும் அவஸ்யம் வேண்டும்.

ஹே சாதகர்களே!

முன்பு ஓர் ஆனிக்கதையும் அதில் பால்தயிர் என்ற சாந்தி அமைதிக்கும்; கருவாடு என்ற கோரவிருத்திக்கும் ஓர் விளக்கம் தந்தோம். அந்த உணர்வு உங்கள் அனைவரின் உள்ளங்களிலும் பதிவாகி மிகப்பெரிய உண்மையை உணர்த்தியிருக்கும்.

அதேநிலையில் இன்றைய சாதனையில் ஸ்ரீகீதையை மனனம் பண்ணும்போது "ஒருமணி" நேரம்தான் உங்களுக்கு "ஸ்வய அனுபவத்திற்காக ஒதுக்கப்படுகிறது." மீதி இருபத்தி மூன்றுமணி நேரமும் உடல் உலக புற விருத்திக்குச் சென்றுவிடுகிறீர்கள். அதிலும் சில நிமிடங்களே ஆன்ம உணர்வுக்கு வருகிறீர்கள்.

இதில் ஒன்றை உணர வேண்டும்!

இந்த ஒருமணி நேரம் உங்கள் ஸ்ரீகீதையின் ஸத்தியவாசகம் எப்படி அமைகிறது என்றால் "அது நாம்; நாமே அது; அனைத்தும் நாமே" என்றும் ஜகத் ஜீவ ஈஸ்வராதிகள் இல்லவே இல்லையென்றும் திரும்ப திரும்ப வருகிறதேயல்லாமல் வேறு கதைகளோ, கட்டுரைகளோ, கற்பனைகளோ அங்கு இல்லை.

இந்த ஒருமணிநேர மனன, நிதித்யாசன, உணர்வோடு முழுமையாக ஒன்றி கரைந்திருந்தால் மற்றைய காலங்களில் விட்டுவிட்டு வரும் ஆன்ம உணர்வு பலப்படும். உடல் உலக உணர்ச்சிகள் அவஸ்யம் கெடும்.!!!





உ

நீங்கள் எண்ணலாம் "கேட்டபாடல்தானே", "படித்த பாடல்தானே", "நமக்கு மனப்பாடம் ஆனபாடல் தானே", இப்போது கேட்டாலும், பாடலின் நம்பரை சொன்னால் உடனே அப்படியே "ஒப்பித்து விடுவோமே", அதற்கு ஏன் இவர் இத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறார்? என கேட்கலாம்!

உங்களை ஒன்று கேட்கிறோம்!

பள்ளிப்பாடம் எத்தனைபடித்திருக்கிறீர்கள்? சினிமா, நாடகம், கதை கட்டுரையென ஆயிரக்கணக்கில் படித்திருக்கிறீர்களே! அவை உங்களுக்கு இந்த "இவ்வாத வாழ்வுக்கு" (வாழ்கிலே, வீழ்கிறீர்கள், மாள்கிறீர்கள்) பயன்படுகிறதே!

உங்கள் ஆன்மீக வாழ்வுக்காகவடிக்கும் இந்த ஸ்ரீ கீதையின் "ஓர்பாடலை உங்களால் அனுபவிக்கமுடிகிறதா?"

பேதபார்வை விலகிவிட்டதா? கொடூரகுணங்கள் இன்னமும் எத்தனை உங்களை விட்டு விலகாமல் இருக்கிறது? (சில குணங்கள் விலகி வருவதையும் யாம் கண்காணிக்கிறோம்) பணம் (பொன்) பெண் மயக்க வாசனை ஓர் பாதி அளவாவது விலகியிருக்கிறதா? (ஆனால் கொஞ்ச அனுபவத்தில் அவைகளை விலக்கி வைத்திருக்கிறீர்கள்) குற்றம் குறை உணர்ச்சிகள் முழுமையாக நீங்கிவிட்டதா? (இதிலும் ஓர் கால் வாசி உணர்ச்சிகளை நீக்கி வைத்திருக்கிறீர்கள்) இப்படி நூற்றுக் கணக்கில் எழுதிக்கொண்டே போகலாம். இதன் நிலை என்னவென்றால்?

அரைக்கிணறு தாண்டுவேன் என்றும், முக்கால்கிணறு தாண்டுவேன்என்றும், முக்காலே அரைக்கால் தாண்டுவேன் என்றும், முக்காலே மூண்டாணி தாண்டுவேன் என்றும்தான் உங்கள் கணக்கு இருக்கிறது.

"முழுக்கிணறும் தாண்டினால்லவோ கரை ஏற முடியும்"!!

இதைப்படித்ததும் நீங்கள் பயந்து விட வேண்டாம் கலங்கி விடவேண்டாம்! சந்தேகம் கொள்ள வேண்டாம். அவசியம் உங்களால் கரையேற முடியும் என்று சொல்வதை விட கரை ஏறி விட்டீர்கள் என யாம் உறுதியாக சொல்வோம் காரணம்? நீங்கள் எம் குழந்தைகள்!



உ

ஆனால்?

கொஞ்சம் முயற்சி உங்கள் பக்கம்!

மிச்சம் அனுபவம் எம் வசம்!

ஆனால் கவனம் தேவை!

பூனை, பால்தயிர், கருவாடு, மிலேச்சன்

கதையில் என்ன உணர்ந்தீர்களோ, அதை உணர்வு பூர்வமாக கொள்ளவும்.

ஸ்ரீ கீதை பாராயணம் பண்ணும் போது தூக்கம் சோம்பல் வருவது

உலக இயல்பு!

அதை வெற்றி கொள்ள வேண்டாமா?

ஜலத்தில் விழுந்தவுடன் ஜலம் உங்களுக்கு அனுகூலமாக

பிரதிகூலம் பண்ணுது

அதன் இயல்பான குணம் உங்களை தண்ணீர் அழுத்துவதே!

ஆனால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

மூச்சை அடக்கி, கடும் முயற்சியுடன், கையையும் காலையும்

உதறி உந்தித்தள்ளி "முன்னே செல்கிறீர்கள்"!

அதைப் போலவே!

குழந்தைகளே! தினமும் நடைபெறும் ஸ்ரீ கீதை பாராயணத்திலும், பின் எப்போதெல்லாம் வாய்ப்பு கிடைக்கிறதோ அப்போதெல்லாம் அகஉணர்வின் அனுபவ சாரம் சத்தை பருகுங்கள். அக உணர்வை பெருக்குங்கள்.

புற உறவு உணர்ச்சிகளை நாசம் செய்யுங்கள்!


பணத்தை கண்டால் தூக்கம் வருமா? பெண்ணைக் கண்டால் தூக்கம் வருமா? உங்கள் உடைமைகள் பறிபோனால் தூக்கம் வருமா?

அவஸ்யம் வராது!

அதேபோல் உங்கள் அகஉணர்வாகிய ஸ்ரீ கீதை அரிய பொக்கிஷம் அதை பறி கொடுத்து விடாதீர்கள்.

ஆனால் யாம் உங்கள் வசம் தான், ஆனாலும் கவனம் தேவை!

தி [illegible] பாபா.



பக்தாழின் பாததூளி
பாபா.



# "ஸ்ரீ குரு ஓம் கிருபை" (1)

ஸத்யம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம்!!!

தர்மத்தின் தலைவனே, சாந்தம் நிறைந்தோனே,
அடக்கத்தின் சிகரமே, தன்னை அழித்தோனே, தான் தானாய்
நின்றோனே, அருந்தவசீலா! **ஸத் சித் ஆனந்தா**
உன் பணிவின் பாதத்தின் கீழ் இந்த வைத்தியம் சாஷ்டாங்க
நமஸ்காரம் செய்து உன் திருவடித்தாளை எம் சென்னி மிசை
எழுந்து நிற்கிறது. நீ மஹா ஞானியான "**ஜடபரதன்**"
வாழ்க்கை வரலாற்றையும், அவன் உபதேசக் கருத்துக்களையும்
படித்திருக்கலாம், கேட்டிருக்கலாம், உணர்ந்தும் இருக்கலாம்.
ஆனாலும் இந்த வைத்தியம் உணர்ந்ததையும், அவன் நிலை பெற்று
அவன் ஆன நிலையையும் அவனாகவே இருந்து சற்று விளக்கமுடன்
சுருக்கமாக அத்யாயம் அத்யாயமாகத் தருகிறோம். சுவைத்து
நீயும் ஜடபரதன் (ஜடனாக) ஆகுவாயாக!

## "ஜனனம்" (முதல் அத்யாயம்)

(1) கூர்ஜர தேசத்தில் மூன்று அரசகுமாரர்களின் முதல்
குழந்தையாக "**பரதன்**" திருஅவதரித்தான். தன் தம்பியர்கள்
இருவருடன் தான் மூத்தவனானதால் தானே அரசபதவியை ஏற்றான்.
பலகாலம் முறையோடு ராஜ்யத்தை ஆண்டு முடிவில் தம் குமாரர்கள்
நால்வருக்கும் தம் ராஜ்யத்தை பகிர்ந்து கொடுத்துவிட்டு தான்
ஜடாதாரியாய் நாட்டைத் துறந்து கானகம் ஏகினான். அடர்ந்த
காட்டில் ஓர் பர்ணசாலை அமைத்துக் கொண்டு ஓர் சிவலிங்கமும்
பிரதிஷ்டை செய்து அபிஷேக, ஆராதனை, மந்திர ஜபம், முதலிய கிரியைகளை



முறையோடு செய்து "ஸத்கர்மாவோடு" ஈடுபட்டு
தபஸில் ஈடுபட்டிருந்தான். பவமஹான்களுடன்
"ஸத்ஸங்கமும்" கொண்டு ஆத்மவிசாரணையும்
செய்து வந்தான். தான் முக்தி பெறுவதற்குள்
ஓர் நிகழ்ச்சி நடந்தது. அந்நிகழ்ச்சியால் அவன்
தபசும் மாறியது. அதாவது?

## தபசின் மாற்றம்! (இரண்டாவது அத்யாயம்)

௨ ஓர் நாள் மாலை சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தான்
அது சமயம் நம் ஆஸ்ரம அருகில் ஓடும் ஓர் நீரோட்டதில் இடுப்பளவு
ஜலத்தில் நின்று கொண்டு, மந்திரங்களை ஜபித்தவண்ணம் ஓர்
ஸத்கர்மா செய்து கொண்டிருந்தான்.

அது சமயம் அக்காட்டில் உள்ள ஓர் மான் பேடானது
(நிறைகர்ப்பிணி) எதிர் கரையில் வந்து ஜலபானம் செய்து கொண்
டிருந்தது. அதே நேரம் ஓர் சிம்ஹ கர்ஜனையானது சமீபமாக
கேட்டது. இந்த மானானது சிம்ம கர்ஜனையைக் கேட்டமாத்திரத்தில்
மரணபீதியுற்று சற்று தூரம் ஓடி அந்த நீரோடையை ஒரே தாவலாக
தாவிக் குதித்து தாண்டியது. அம்மானினது மரணபீதியினாலும்,
அந்த ஓடையை தாண்டிக்குதித்த வேகத்தினாலும், அதன் கர்ப்பத்திலி
ருந்த குட்டியானது வெளியே வந்து கரை ஓரத்தில் விழுந்து விட்டது.
அந்த தாய்மானும் அதே இடத்தில் தன் பிராணனை விட்டு விட்டது.
அந்த மான் பேடுக்கும் விதி முடிந்து விட்டது போலும்?

இந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஜலத்தில் நின்று
கொண்டு ஜபதபத்தில் ஈடுபட்டிருந்த பரதன் கவனித்து கொண்
டிருந்தான். மான் இறந்து போனதையும் பரதன் உணர்ந்தான்.
மான் குட்டி அப்போது தான் பிரசவமானதால் "பிராண அவஸ்தையுடன்"
உயிருக்கு போராடி துடித்துக் கொண்டிருந்தது! இவைகளை அனைத்தை
யும் கவனித்த பரதனுக்கு "கருணையும்" அதே நேரம் "ஜீவ காருண்யமும்"
அவன் மனதில் தோன்றியது.

"கருணை":- மனதில் தோன்றும் ஓர் இரக்கமான எண்ணம், அதாவது
மனதில் தோன்றும் ஓர் ஈரக் கசிவு, அதாவது ஐயோ பாபம் எனத்
தோன்றும் ஓர் பரிதாப உணர்வு, உடனே ஓர் உபகாரம் செய்யத்
துடிக்கும் ஒரு பேருணர்வு, இவை கருணையாகும்.



உ

(3)

ஜீவகாருண்யம் :- இது மேலே சொன்ன கருணையின்
நிமித்தம் பேருணர்வு உண்டாகி அது "செயல்பாட்டின்"
மூலம் பரிணமிப்பது. அதாவது ஓர் ஜீவனுக்காக இரங்கி
ஓர் உபகார நிமித்தம் செயல்படுதல். இதன் முக்கியம்
என்னவென்றால்?
மேலே சொன்ன எண்ணம் தான் "புண்ணிய பாபகர்மா"
கீழே சொன்ன எண்ணங்களில் "கர்மா செயல்பாடு"
காருண்யமாகும். இதைத் தான் ஸ்ரீமத் கீதையில் எம்பிரான் அழகாகச்
சொன்னான்; "மனந்தன்னிலே செய்ததுவே செய்ததாகும்" /
"மற்றொன்றால் செய்தது எல்லாம் செய்ததாகாது" //
என்றும். இந்த கருணையான எண்ணம் வருவது தெய்வீக இயல்புள்ள
"கருணைமனம்" கொண்டவர்களுக்குத்தான் வரும் மற்றவர்களுக்கு
வாராது. இப்படி கருணை எண்ணம் வரும் போது;
இறைவா! இந்த சந்தர்ப்பத்தையும் சூழ்நிலைகளையும் அவரவர்
வினைவசத்தால் உண்டு பண்ணுகிறாய். அதை எப்படி நடத்த முடியுமோ
அப்படி நடத்தி முடி; என "**சர்வார்ப்பணத்துடன்**"
நீ நின்று விட்டால், அக்காரியம் உன்னால் (உன் தூலத்தால்) நடை
பெற வேண்டிய நியதி இருந்தால் அவசியம்?

1. உன் தூலத்தை இயங்க வைத்து அக்கர்மாவை முடித்திடுவான்.
அல்லது?
2. பிறிதொரு தூலத்தை இயங்க வைத்து அக்கர்மாவை முடித்திடுவான்!!
அல்லது?
3. வேறு எந்த தூல இயக்கங்களும் இல்லாமல் தன் "மாயா கருணை"
வடிவில் அக்கர்மாவை முடித்திடுவான்!!!

இவ்வுலகம் அவனுடையதே; இயக்கமும் அவனுடையதே; ஆதலால் இந்த
பதுமைகள் புண்ணிய பாப வினைகளை வைத்து இயங்குவதால், எந்தெந்த
பதுமைகளை எந்தெந்த சூழ்நிலையில், எந்தெந்த வேளைகளில் எப்படி இயக்க
வேண்டுமோ அப்படி இயங்க வைப்பது இறைவனின் மாயா காரியம்.

இங்கு ஓர் கேள்வி எழலாம்?



உ

(4)

ஒரு ஆபத்தான காரியம் நடைபெற்ற இடத்திலோ? ஒருவன் பசியாலோ பிணியாலோ அவஸ்தைப்படும் இடத்திலோ? ஒரு ஜீவன் கஷ்ட அவஸ்தைப்படும் இடத்திலோ?

மரம்மாதிரி நின்றுகொண்டு இறைவனை மட்டும் எண்ணிக்கொண்டிருந்தால் அது கருணையும் அல்ல. காருண்யமும் அல்லவே? அவன் மனிதனும் அல்லவே என உனக்கு தோன்றுகிறதல்லவா?

எம் அறிவுருவின் ஆனந்த குழந்தாய்!

ஸத்சிதானந்தா! இதில் ஓர் முக்கியம் என்னவென்றால்?

1. அந்த சர்வார்ப்பணத்தை நீ மணிக்கணக்கிலோ நாட்கணக்கிலோ செய்து கொண்டிருக்கப் போவதில்லை.
2. இரண்டொரு வினாடி காலம் தான் உன் எண்ணம் நடைபெறும்!
3. அடுத்த வினாடி உன்னை வைத்தோ பிறிதொன்றை வைத்தோ அல்லது தானாகவோ அது நடந்து முடிந்து விடும்.
4. இப்படி சர்வார்ப்பணத்துடன் நடைபெறும் கர்மாவினால் நீ அந்த புண்ணிய பாவ வினைகளுக்கு ஆட்படமாட்டாய்.
5. அந்த நிகழ்ச்சியால் உன் மனம் "**பாரம்**" ஆகாது!

**கலியுகம்**
அவசரமான உலகம்; வேகமான உலகம்;
ஆவேசமான உலகம்; ஆர்ப்பாட்டமான உலகம்;
ஆடம்பரமான உலகம்; வியாபாரமான உலகம்;
விளம்பரமான உலகம்; விசித்திரமான உலகம்;
உடனே கைமேல் பலன் கேட்கும் உலகம்!!
கம்ப்யூட்டர் காலத்து வேட்டை உலகம்!!!!!

"கெடுவரும் பின்னே, மதிகெட்டு வரும் முன்னே"! என்றபடி அந்த அவசரமும், ஆவேசமும், ஆத்திரமும் உனக்கு வேண்டாம்.

பொறுமையும், நிதானமும், அமைதியும், சாந்தியும் உனக்கு தேவை!

சோம்பலும் மந்தத்தனமும், அசட்டையும், கருமியும் உனக்கு வேண்டாம்!!

மேலே சொன்ன பொறுமையும், நிதானமும் கடைப்பிடித்தால் உன் கர்மா கருணையிலும் முடியலாம். காருண்யத்திலும் நடைபெறலாம். ஆனால் அந்த புண்ணிய பாவ வினைக் கணக்கு உன்னைப் பற்றுதொழியும்

எம் செல்வமே! ஸத்சிதானந்தா! இனி கதையை கேளாய்!



அதாவது, இங்கு பரதனுக்கு கருணை முதலில் தோன்றியது அதை அடுத்து காருண்யமும் வந்தது எப்படி என்றால்?

கருணை :— ஐயோ பாவம்! ஓர் மான் பேடானது மரணபயத்தால் தன் குட்டியை ஈன்று விட்டு மரணமாகி விட்டது. குட்டியோ ஜலத்தை ஒட்டி கரையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டு தன் நான்கு கால்களையும் உதறிக் கொண்டு தாய் ஏக்கத்தினாக ஏங்கிக் கொண்டிருக்கிறது. அதை காப்பாற்ற வேண்டும். என்பது கருணையாகும்.

காருண்யம் :— ஓடிவந்து மான் குட்டியை தம் இருகரங்களாலும் மெதுவாக தூக்கினான்.

1. இம்மான் குட்டிக்கு இனி ரட்சகன் யார்?

"**நானே**" இந்த மான் குட்டியின் ரட்சகன்.

2. இம்மானின் இனி வாழ்நாள் பூராவும் யார் காப்பாற்று வார்கள்?

**என்னால்** இந்த மான்குட்டி ஆயுள் முழுவதும் காப்பாற்றப் படும்.

3. இந்த அனாதையான மான்குட்டி யாருடையது?

"**என்னுடையதுதான்**" இந்த மான் குட்டி.

ஓம் ஐயனே! ஸத்சித் ஆனந்தா! இப்படி அஹங்கார அபிமானங்களினால் பின்னிப் பிணைந்த மனதை உடையவனான பரதன் என்னும் ராஜரிஷி! இதுவே இவனுக்குப் "பிறவியின் வித்து" என ஆகிவிட்டது.

இப்பிறவியின் வித்து அறுபட வேண்டுமாயின் இப்பரதனின் எண்ணம் எப்படி இருக்க வேண்டுமென்றால்?

வினைவசத்தாலும் விதி வசத்தாலும் ஓர் மான் ஓர் குட்டியை ஈன்று விட்டு மரணமாகி விட்டது. இந்த மான்குட்டி இனி ஜீவனோடு இருப்பதும், அல்லது மரணமாவதும் "இறைவன் கருணையே"! நற் காரியமாக இதற்கு உதவுவேன். எந்த ஜீவனும் இல்லாத்தன்மையினால் அந்த ஜீவன் இந்த ஜீவனை காப்பாற்றும் நிலைக்கு எம் இறைவன் ஆட்படுத்தியிருக்கிறான். அவன் ஆணையின்படி இக்கர்மாவை இத்தூலம் செய்கிறது. இதன் புண்ணிய பாவ கர்மா இறைவனுக்கே சாரும். இது அவன் காரியமே!! என சர்வார்ப்பணமாக இவன்

உ





செய்திருந்தால் அதன் வினை இவனைச் சாராத தன்மையினால் எதுவரை அந்த கர்மா பிரவர்த்தியோ அதுவரை அக்கர்மா தொடர்ந்து அது தானே முடிந்து விடும்.

அந்த "நான், என்னால், என்னுடையது" என்ற எண்ணத்தின் செய்கையானது,

சொந்தத்தால் பந்தமும், பந்தத்தால் பாசமும், பாசத்தால் புண்ணிய பாப வினைத் தொடர்பும், வினைத் தொடர்பால் "ஜனன மரணமும்" இப்பரதனைப் பிடித்துக் கொண்டது.

"ஈஸ்வரார்ப்பண கருணையின் நிலையில்" இக்கர்மாவை இவன் செய்திருப்பானாயின் இறைவன் அம்மான் குட்டியை இருநிலைகளில் ரட்சித்திருப்பான். ஒன்று "மறக்கருணை" மற்றொன்று "அறக்கருணை" இது எப்படி நடைபெறும் என்றால்?

"மறக்கருணை":— அந்த (மான்) குட்டிக்கு தாயில்லாத் தன்மையினால் அந்த மான் குட்டிக்கு அந்த தாவத்தை உபாதை இல்லாமல் கழற்றி விட்டு அவ்வினைக்குத் தக்கபடி வேறொரு தாவத்தை (பிறவியை) கொடுத்து ரட்சித்திருக்கலாம். இங்கு "மரணத்தைக் கொடுத்து" அந்த ரட்சிப்பு நடைபெறுவதால் இது "மறக்கருணையாகும்."

"அறக்கருணை":— அந்த மான் குட்டிக்கு தாயில்லாத் தன்மையினால் "அவ்வினைக்குத் தகுந்த" வேறொரு தாய்மானை அனுப்பியோ, அல்லது தம் மாயா காரியத்தினால் அதற்கு "எழவும், நடக்கவும், ஜலபானம் பண்ணவும், பசும்புல் தானே கண்டு உண்ணவும் தம் கருணையினால்" ஓர் காரியம் இறைவனால் செய்ய முடியும். இது அவனுக்கு கொண்டும் பெரிய காரியம் இல்லை. ஆகவே இது மரணம் என்னும் தண்டனையைத் தராமல் ரட்சிப்பு செய்வதால் இது "அறக்கருணையாகும்."

இனி பரதன் நிலையை கவனிப்போம்!

கருணையும், காருண்யமும் பிறந்த உடனே பரதன் தன் "ஸத்கர்மா" வை உடனே விட்டு விட்டு ஜபத்தை விட்டு ஓடி வந்து அம்மான் குட்டியை தம் இருகரங்களாலும் அன்புடனும் பரிதாபத்துடனும் ஈரக் கனிவுடனும் தம் மடியில் போட்டுக் கொண்டு தடவிக் கொடுத்தான். அப்போது அவன் சொன்ன வாசகம்:—





ஏ மான்குட்டியாகிய குழந்தாய்!

உன் நிலை இப்படி பரிதாபமாகவா முடியவேண்டும்? இறைவன் சோதனைக்கு ஓர் அளவில்லை போலிருக்கிறது? ஆனாலும் நீ பயம் கொள்ளாதே! கவலை கொள்ளாதே! துக்கம் அடையாதே! சோர்ந்து போகாதே "என் தாய் இறந்து விட்டாளே என்று"!

1. "**நான்**" இருக்கிறேன் உன்னை ரட்சிக்க! (உன் ரட்சிப்பே இறைவன் கையில் இருக்கிறது.)
2. "**என்னால்**" உன்னை காப்பாற்ற முடியும்! (உன்னை காப்பாற்றவே உன்னால் முடியாதே. பிறிதொன்றை எப்படி காப்பாற்றுவாய்)?
3. "**நீ என்னுடைய**" குழந்தை! (உன் தேகமே உனக்கு "வாடகை தேகம்" மற்றொன்றையும் எப்படி உனதாக பாவனை பண்ண முடியும்"?)

என இம் மூன்று நிலைகளில் நம் "அறியாமையிலான பிரதிக்ஞை"

எடுத்துக் கொண்டான். அவ்வோடை ஜலத்தை சிறிது சிறிதாக தம் மூன்று விரல் கொண்டு எடுத்து எடுத்து அம்மான் குட்டியின் வாயில் இட்டான் பரதன். அம்மான் குட்டியும் பசியின் உந்துதலால் அந்த ஜலத்தை சுவைத்து உண்டது. அம்மான் குட்டியும் தம் தாயைப் பார்க்கும் "நன்றி உணர்வோடு" பரதனைப் பார்த்தது. ஒருநாள் ஜலபானம் கொடுத்தான், மறுநாள் பூந்தளிர் புல்களை சிறிது சிறிதாக ஊட்டினான். வாரம் ஒன்று, மாதம் ஒன்று என காலங்கள் கழிந்தன. மான்குட்டியும் அணு அணுவாக வளர ஆரம்பித்தது. அந்த மான் பெரிதாக பெரிதாக நம் பரதனையே "தாய் பூனையையே சுற்றி சுற்றி வரும் சேய்ப்பூனை (குட்டிப்பூனை) போல்" நம் பரதனையே சுற்றி சுற்றி வரும் அம்மான் குட்டி. நம் ஒருபிடி நேரம் கூட நம் பரதனை பிரியவில்லை அம்மான் குட்டி. நம் பரதனை அடிக்கடி தம் நாவால் நக்கிக் கொடுக்கும். சில சமயம் பசிதாகம் உணர்ந்து நம் பரதனை கொம்பு இல்லாத தலையால் முட்டிக் கொடுக்கும். இரவும் மற்றும் தூங்கும் நேரம் போக மீதி நேரமெல்லாம் நம் பரதனை முட்டவும் நாவால் நக்கவும், சிறு குழந்தை போல் செல்லமாக கொஞ்சிக் கொஞ்சி கூப்பிடவும், நாய்க்குட்டி பூனைக்குட்டி போல் அவன் கால்களை சுற்றி சுற்றி வரவும், அவன் அமர்ந்து விட்டால் அவன் மடி மீது ஏறி படுத்துக் கொள்ளவும், அவன் படுத்துக் கொண்டால் அவன் முகத்தின் மீது தன் முகத்தை வைத்துக் கொண்டு ஓர் குழந்தையென அவனை உரசிக் கொண்டு



உ



பருத்துக் கொள்ளவும், தனக்கு பசியோ, உதவியோ தேவைப்படும் போது பரதனை முட்டி முட்டி சைகை செய்யவும், "அதன் பார்வையும், அதன் ஏக்கமும்," அதன் பிள்ளைப்பாச உணர்ச்சியும், தூங்கும் நேரம் தவிர மற்ற காலங்களில் இடைவிடாது, "**ஓர் குழந்தை**" யென அவனை விட்டுப் பிரியாத்தன்மையாலே?

## (3) உணர்ச்சிக்கு அடிமையாகுதல்! (மூன்றாவது அத்யாயம்)

இந்த பரதனுக்கு "நித்திய ஸத்கர்மானுஷ்டானங்கள்" செய்ய இயலவில்லையென்பதைவிட, பாச உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அனைத்தையும் மறந்துவிட்டான். உணர்ச்சிகளுக்கு அடிமையாகிவிட்டால் மெய்யுணர்வு வரவர குறைந்து மறைந்து கொள்ளும் "அது அழிவதில்லை" அது அழியாதது. மேகம் எப்படி சூரியனை மறைத்து இருள் கவ்வச் செய்கிறதோ அதே நிலையில் பந்த பாச உடல் உறவு சம்பந்த "பாச உணர்ச்சிகள்" மேலோங்கும் போது உண்மையின் உணர்வுகள் மறைபடும்.

அந்த நிலையில் நம் பரதனும் ஆட்பட்ட தன்மையினால் "பூஜை ஜபதபங்களை அறவே மறந்து" விதிவசத்தால் வந்த மானையே மேய்ப்பதும், அதுக்கு ஜலம் காட்டுவதும், புல் இல்லா காலங்களில் புல் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த மானை ஓட்டிச் சென்று மேயவிடுவதுவும், மற்றைய மிருகங்களிடம் இருந்து இந்த மானைக் காப்பாற்றும் நிமித்தம் ஓர் தடியை சுழற்றிக் கொண்டு அலைதல், தன் பசிக்கு காய் கனி இலைகள் உணவாக அருந்தும் போது அந்த மானுக்கும் கொடுத்து அம்மானின் மகிழ்ச்சியில் தானும் பங்கேற்றல் இப்படியாக, ஓர் காட்டுவாசியாகவும், ஓர் வனவேடுவனாகவும், ஓர் "**பாமரனாகவே**" மாறி நாம் ஓர் "தபஸ்வி" என்பதையும் இந்த பரதன் மறந்துவிட்டான்.

ஆனால்?

இவன் இதுவரை செய்த பூஜை மந்திர ஜபம் அனுஷ்டானம் மற்றும் ஸத்காரியங்கள் இவனுக்கு கை கொடுப்பதற்கு இவனுக்காகவே காத்திருக்கின போலும்?



உ

# 4 "பரதன் மரணம்; மானின் ஜனனம்" (9)

(நான்காவது அத்யாயம்)

எம் அன்புருவே!

ஸத் சித் ஆனந்தா! ஓர் பக்த ஆன்மா சாதனை செய்து வரும் போது உலக உடல் பொருள் சம்பந்த "உணர்ச்சிகளுக்கு" சிறு இடம் கொடுத்தாலும் மாடியின் விளிம்பிலிருந்தும் ஓர் பந்து வானது சற்று நழுவிவிட்டாலும் எப்படி படபட என்று ஒவ்வொருபடியாக இறங்கி தரையை வந்து அடைந்து விடுமோ அப்படியே "மெய்யுணர்வை பொய்யுணர்ச்சியானது" கொஞ்சம் அதை மறைத்து விடும் அதே நிலைதான் இன்று பரதனுக்கும் ஏற்பட்டது!

காலச்சக்கரம் வேகமாக சுழன்றது. அச் சுழற்சியினால் பரதன் தூலத்திற்கு அந்திம காலம் நெருங்கியது. பரதன் படுத்த படுக்கை ஆனான். அவனுடைய மானும் அவனை விட்டுப் பிரியாமல் அவன் காலடியிலேயே படுத்துக் கொள்ளும். இரண்டொரு நிமிடம் வெளியில் செல்லும். மீண்டும் வந்து பரதனுடைய காலடியிலேயே படுக்கும்; சிலவேளை நின்று அவனையே கூர்ந்து நோக்கும்; அதுசமயம் மானின் கண்களிலிருந்து கண்ணீர் வடியும்.

இப்படி படுத்து விட்டாயே? இந்த நேரம் உனக்குத் துணையார்? என்று கேட்பது போல் தோற்றும்? அடுத்த க்ஷணம் பயம் கொள்ளாதே உனக்கு நான் துணையாக இருக்கிறேன் என சொல்வது போல் அந்த மானின் முக பாவனை தோற்றும்!!!

இந்த பரதனும் அனைத்து ஸத்கர்மாக்களையும் மறந்தவனாய் அந்த மானின் முகத்தை பார்த்தவனாய் கண்ணீர் விட்டு அவஸ்தைப்பட்டான் எப்படி என்றால் என் பிரியமானே!

உன்னை விட்டு "நான்" போகப் போகிறேனே?

"நான்" போய்விட்டால் உனக்கு ரட்சகன் யார்? "என்னைப்போல்" உன்னை எவர் பராமரிப்பர்? நீ யாருமற்ற அனாதை ஆகி விடுவாயே?

"என்னுடைய" இந்த மான் அனாதையாக விடப்படுகிறதே? இறைவா!

நீ ஸத்ய தெய்வமானால் எனக்கும் ஓர் "**மான் ஜன்மாவை** கொடு. அந்த மான் ஜன்மா எடுத்தாவது இந்த மானை "**நான் காப்பாற்றுவேன்**"!!! என தன் அறியாமையினால் அதாவது கவனக்குறைவினால் கேட்கலானான்?

இதை நோக்கும் போது!





ஏ கேடு கெட்ட மானிடனே!

# "பந்தம், பாசம் பற்று, தால உறவு" அந்த "உணர்ச்சி"

எப்படி ஓர் மயக்கத்தை உண்டு பண்ணி எப்படி பிறவி வலையில் மாட்டி வைக்கிறது பார்! இதிலிருந்து என்ன உணர்கிறாய் என்றால், இந்த மாமிச பிண்டத்தை விட்டு இந்த உயிர் நீங்கும் போது, "உன் வினைக்குத் தக்கபடி" "உயிர் உற்றதோ, உயிர் அற்றதோ" ஒன்றில் உன் மனம் நிலைத்து விட்டால் உன் "**எண்ணத்தின்**" படி கண்டிப்பாக உனக்கு பிறவி வந்தே தீரும்!

உயிர் உள்ள ஒன்றைப் பார்த்து "உயிர்துடிப்பு" உனக்கு வந்தால் அது "பாசம்"!

உயிர் உள்ள ஒன்றைப் பார்த்து "இறைசிந்தனை" உனக்கு வந்தால் அது "அன்பு"!

இதற்கு உன் சாதனை?

ஏ பந்தப்பட்ட ஜீவனே!

இது இறைவன் உலகம். இது இறைவன் பொருள்கள். அனைத்தும் இறைவனுடையதே. அவன் பொருளை அவனுக்கே விட்டு விட்டு நீ சும்மா சுகமாக இருக்கலாமே? சும்மா சுகமாக இருக்கலாமென்றால் "சும்மா சோம்பேறியாக" இருக்கச் சொல்கிறோம் என எண்ணி விடாதே?

"ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு செயலிலும், **ஸ்ரீபகவானை**" எண்ணிச் செய்யலாமே?

இப்படி நீ ஸ்ரீ பகவானை எண்ணிச் செய்யும் போது எதைக் கண்டாலும் உயிர்த்துடிப்பு உனக்கு வராது! அதனால் பாசம் பற்று இல்லை! அதனால் அவசியம் ஜன்மா இல்லவே இல்லை. அந்த ஸ்ரீ பகவத் சிந்தனையால் "அன்பு கருணை" ஆகிய இரண்டு தான் வரும். காருண்யம் அங்கு அவசியம் வராது!

எம் பரதனின் எண்ணத்திலும் அவன் வேண்டுதலிலும் அவனுக்கு ஓர் "மான் ஜன்மா" தரப்பட்டது இங்கு?

பரதன் தாலம் மரணமாயிற்று! ஓர் மானின் தாலம் ஜனனமாயிற்று!

## (5) ஜாக்ரதையான மானின் ஜன்மா! (ஐந்தாவது அத்யாயம்)

ஓம் ஐயனே! ஸத் சித் ஆனந்தா! மானாக பிறந்த பரதன் இந்த மான் ஜன்மாவில் "பூர்வ புண்ணியத்தால்" முன் ஜன்ம (பரதன்) எண்ணம் கெடாமலிருந்தான். விபரம் தெரிந்தவுடன் பரதனாகிய மான் எண்ணுகிறது!





இறைவா! எத்தகைய கேவலமான நிலையை அடைந்து விட்டோம். இப்போது இரண்டு ஜன்மாவும் வீணடிக்கப் பட்டுவிட்டதே? இந்த மான் ஜன்மாவிலும் முக்தி அடைய முடியாதே? இந்த ஜன்மாவும் "அதிஜாக்ரதையாக இருந்தால் தான் அடுத்த ஜன்மாவில் முக்தி பெற முடியும்? சற்று தவறி விட்டாலும் அடுத்த ஜன்மாவும் வீணடிக்கப்படுமே? போன ஜன்மாவில் **கர்மாவையும் பக்தியையும்** முடித்து விட்டோம். இனி ஞானத்திற்கு முக்கியமானது? "**ஸ்ரீ ஸத்குரு**" தர்ஸனமும், அவர் சேவையும். அவர் "வாக்கியார்த்த ச்ரத்தா சேவையும்" அவஸியம் வேண்டும். என்று "ஸத்தான ஸத்ய ஸங்கல்பம்" செய்துகொண்டான் மான்ஜன்ம பரதன்.

## (6) ஸத்குரு க்ருபையும் சேவையும்! (ஆறாவது அத்யாயம்)

இப்போது மானான இந்த பரதன் பச்சை இலை தழைகளையோ, பசும் புற்களையோ ஆகாரமாக உண்ணுவதில்லை. மாறாக தனக்கு உணவாக உதிர்ந்த இலைகளையும், காய்ந்த சருகுகளையும் மட்டும் உண்பான். தன் இன மிருகங்கள் எதனிடத்தும் ஒட்டுவதில்லை. வேறு மிருக இனங்களிலும் எந்த தொடர்பும் கொள்ளாமல் "இறைசிந்தனையோடு" தனித்தே அலைந்து ஓர் "ஸ்ரீமஹானுக்காக" கண்டகீ நதிதீரத்திலேயே அலைந்தான். தெய்வ க்ருபை கைகூடியது ஆகவே அந்த கண்டகீ நதிக்கரையோரமாக ஓர் ஆஸ்ரமம் இருக்கக் கண்டான். மெதுவாக அதன் அருகே சென்று பார்த்தான். அங்கு இரு மஹான்கள் இருக்கக் கண்டான்.

அவ்விரு மஹான்கள் யாவரெனில்? "**புலகர், புலஸ்தியர்**" என இருவராகும். இங்கு இந்த மானான பரதனுக்கு ஆனந்தம் தாளவில்லை! இறைவன் க்ருபையினால் மஹான்களை கண்டு கொண்டோம். இனி இவ்விடத்தை விட்டு வேறு எங்கும் அலைய வேண்டாம். இவர்களே நம் ஸத்குரு. இவர்களுக்கு நம்மால் இயன்ற சேவை செய்வோம். எட்ட இருந்தே அவர்கள் சம்பாஷிக்கும் பாடம் கேட்போம். அதன்படி அடுத்த ஜன்மாவில் அனுபவித்து நடப்போம். இந்த மான் ஜன்மாவையும் இங்கேயே விட்டு விடுவோம். என தம் புகலிடமாகவும் அதுவே முடிவிடமாகவும் அந்த மானான பரதன் உறுதி கொண்டான்.



உ



ஓம் ஆத்மசொரூபமான!
ஸத்சித் ஆனந்தா!

மானாகிய பரதனின் சேவை எப்படி அமைந்ததென்
றால்? அம்மஹரிஷிகள் உணவாக அருந்தும் காய் பழங்
களின் கழிவு பகுதியை வெளியே போடுவார்கள்
அவைகளை உண்பான். அவர்கள் உண்ட மிச்சச்
சாப்பாட்டை "பரமான்னமாக" உண்பான். ஆஸ்ரம
சுற்றத்திலும் மற்றும் சுற்றுப்புறங்களிலும் காய்ந்து உதிரும் இலை
தழை முதலியவற்றை உண்டு அதை சுத்தம் செய்வான். வேறு உண்ண
முடியாத கொடி கொம்புகளை (குச்சி கம்புகள்) தம் வாயால் கௌவி
வெளியே சற்று தூரத்தில் போட்டுவிடுவான். அவ்விருவரும் சம்பாஷணை
செய்யும் போதும், மற்றும் ஒரு சில மஹான்கள் அங்கு வந்து ஸத்சங்
கம் நடத்தும் போதும் ஆஸ்ரம வாசலில் அவர்களை நோக்கி படுத்த
படி மிகவும் கவனமாக கேட்பான். இதில் முக்கியமான வேதாந்த
பாடங்களை அவர்கள் தெளிவாகவும், மற்றும் நிதானமாகவும்
அளவளாவும் போது இருகண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்தோட
மிகுந்த கவனமாக கேட்பான்.

இந்த பரதனாகிய மானின் போக்கு மற்றும் நடவடிக்கைகள்
விசித்திரமாகவும் விநோதமாகவும் இருப்பது கண்டு புலகரும் புலஸ்திய
ரும் ஆச்சர்யம் கொண்டு இது சாதாரண மான் அல்ல. ஓர் மஹானாக
இருந்து தம் தவறினாலோ ஏதோ சாபத்தினாலோ தான் இந்த மான் ஜன்மா
எடுத்திருக்கிறது எனவும் மெய்யறிவினால் உணர்ந்து அவை விரட்டாமலும்,
கடிந்துரைக்காமலும், அதற்கு "**சேவை செய்ய**" வழி
வகுத்துக் கொடுத்தனர். மேலும் அங்கு வரும் மஹான்களிடமும் அம்
மானைப்பற்றி சொல்லி அதற்கு "ஆசி வழங்கச் செய்தனர்"!
புலகரும் புலஸ்தியரும் அந்த பரதனாகிய மானை தலையை தடவி ஆசி வழங்கி
யும். அதன் உடலைத் தடவிக் கொடுத்தும் "ஓர் குழந்தையாக" பாவனை
செய்தனர். ஸ்ரீ ஸத்குரு கிருபையும் அவர்கள் உபதேச கருத்துக்களையும்
மிகுந்த கவனமாக கேட்ட பரதனாகிய மான் அவ் உபதேச கருத்துக்களை
"ஸ்வய அனுபவமாக் கொண்டான்" பிறவிப் பயன் பெறுவோம் என்றும்
அதனால் பிறவாநிலையும் ஆத்மஞானமும் அடைவோம் என்றும் தெரி
ந்து. அதற்கு ஓர் உத்தமமான மனுஷ்ய ஜன்மா "வேண்டுமென இறைவனை
பிரார்த்தித்துக் கொண்டு. அம்மானின் ஜன்மாவின் "முடிவு நாளை"
எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் மானாகிய பரதன்.

உ

(13)



இறைஅருளும், குருஅருளும், அவன் ஸத் சங்கம் பத்திற்கு செய்சாய்த்தது போலும்? ஓர் புனிதமான நினைத்தன்று மாறுதிய பரதன் அந்தமான்நாவத்தை விட்டுவிட்டான். இறைஅருளும் குருஅருளும் இன்றி தனிமையில். அடுத்து ஓர் அக்கினி கோத்திர பிராமண குலத்தில் ஒன்பதாவது குழந்தையாக இந்த பரதன் அவதரித்தான்.

௭

## ஜடபரதனின் பால்யம். (ஏழாவது அத்யாயம்)

எம் கண்ணின் மணியான செல்வக்குழந்தாய்!

ஸத் ஸித் ஆனந்தா!

ஓர் புனிதமான தினத்தில் பரதன் திருஅவதரித்தான். இங்கு ஓர் உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும். என்னவென்றால் பிரசித்தி பெற்ற இப் பரதன் என்னும் நாமம் கொண்டோர் மூன்று பேராகும்.

1. ஸ்ரீராமனுடன் பிறந்த "**பரதன்**" ஒருவனாகும்!
2. துஷ்யந்தன் சகுந்தலையின் மைந்தன் "**பரதன்**" ஒருவனாகும்!
3. சக்ரவர்த்தி பரதனாக இருந்து தபஸ் செய்து. பின் அறியாமையினால் ஓர் மானாகப்பிறந்து. பின் அறிவு சொரூபத்தினால் ஓர் ஆத்ம ஞானியாய் அவதரித்த **பரதன்** ஒருவனாகும்!

ஆரம்பத்தில் இந்தகுழந்தைக்கு அந்தகுடும்ப குல நாமா எதுவோ நாம் அறியோம். இந்த சிசு பசியினால் தாய் அழுது உண்ண அமுதூட்டவில்லை! தாயாக நேரம்பார்த்து பால் கொடுத்தால் அருந்தும். எக்காரணம் கொண்டும் அழுவதில்லை. ஆனால் ஆகாயத்தைபார்த்தபடி சிரித்துக்கொண்டிருக்கும்! பிள்ளைப் பருவத்திலும் தன்னையொத்த குழந்தைகளுடன் விளையாடப் போவதில்லை! தனக்குத்தானே சிரித்தபடி தெய்வீகமாகவிளையாடும். மற்ற குழந்தைகள் விளையாட கூப்பிட்டால் விளையாடப் போவதில்லை. நீங்கள் உங்கள் விளையாட்டை விளையாடுங்கள்; யாம் எம் விளையாட்டை விளையாடுகிறோம். எம் விளையாட்டுக்கு எவரும் தேவையும் இல்லையெனகூறிவிடும். தாயாக இதை குளிக்க வைக்கவோ, துணிமணி மாத்தவோ, உண்ண ஏதேனும் கொடுக்கவோ செய்தால் அன்பாக ஏற்றுக் கொள்ளும் தாமாக எதையும் ஏற்பதில்லை. ஓர் ஐந்து ஆறு வயதுடையனாக இருக்கும் போது அவன்தாவத்திற்கு வைத்த பெயரைச் சொல்லி அழைத்தால் "உள்ளோம் எம் நாமா நீங்கள் கூப்பிடும் நாமா இல்லை எம் நாமா "**பரதனை**" பரதா என்றால் ஏனென்று கேட்போம் உங்கள் நாமா சொல்லி அழைத்தால் ஏனென்று கேட்கமாட்டோம் எனசிரித்துக்கொண்டே சொல்லிவிடுவான். குலவழக்கப்படி அவன் பெற்றோர் உபநயனம் செய்து வைத்தனர். அந்நேரம் அவர்களுக்காக அந்த சடங்கை ஏற்றுக் கொண்டான். பின்பு அந்த முப்பிரிநூலையும் கழற்றி ஓர் மரத்தில் தொங்கவிட்டு விட்டான்.



இந்தபரதனுடைய செயல்கள் பழக்க வழக்கங்கள் கண்டு எல்லோரும் அதிர்ச்சியும் பயமும் அடைந்தனர் அவர்கள் குல வழக்கப்படி குருகுலம் சேர்த்தனர் அங்கு வேதத்திலோ சாஸ்திரங்களிலோ கவனம் இல்லாதிருந்தான். குருவு ஆசிரியர் கேட்டால் இது எல்லாம் "முடிந்த கதை" இதனை தொடராது. என்று விடுவான். எப்படியடா முடிந்தது எனக்கு விளக்கம் சொல்லடா என ஆசிரியர் கேட்டால் அனைத்திற்கும் மூலம் எதுவோ அதுவாக யாம் இருக்கும் போது இப்பாடம் எமக்குத் தேவை இல்லை என்றிடுவான். அசாதரண அமைதி காப்பான். சிரிப்பு ஒன்றைத் தவிர அவனிடம் வேறு எதுவும் கண்டு கொள்ள முடியாது!

இந்தபரதனின் நிலை கண்டு அவர்கள் நிலையில் ஏதேதோ மாற்றங்கள் செய்து பார்த்தனர் பெற்றோர். ஒருபயனும் அளிக்கவில்லை. அவன் மாதா பிதா இருவருமே இவன் நிலைக்கு வருந்தி மனம் உடைந்து ஒருவர் பின் ஒருவராக இயற்கை எய்தினர். உடன்பிறந்த சகோதரர்களும் மற்றும் உறவினர்களும் இவன் நிலை கண்டு இவனை வெறுத்து ஒதுக்கிவிட்டனர். இதைத் தான் பரதனும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். மேலும் இவன் சகோதரர்களும் மற்றும் உறவினர்களும் நம் கண் எதிரில் படாமல் "செத்தொழிய மாட்டானோ?" என்ற வெறுப்பு உண்டாகும் நிலைக்கு தன்னை உண்டாக்குவதற்காக சிலகாரியங்கள் செய்யத் தொடங்கினான். "அதன் காரணம் யாதெனில்?"

அவர்கள் உறவினால் வந்த அன்பு அனுப்பிரமாணம்
இருந்தாலும், அந்த எண்ணமானது தமக்கு பிறவிக்கு
ஏது ஆகிவிடக்கூடாதென்ற ஓர் வைராக்யத்தினால்.

கழனிகளில் (வயல்களில்) சுற்றுதல். களத்து மேட்டில் அனாதையாக படுத்துக் கொள்தல். ஜாதி மதம் இனம் பார்க்காமல் எவர் எந்த வேலை கொடுத்தாலும் அதை மறுப்பின்றி செய்தல். அதற்கு ஊதியமாக அவர்கள் எந்த உணவு கொடுத்தாலும் கழிவின்றி ருசி, அருசி, நறுமணம் துர்மணம் இவைகளை பார்க்காமல் உண்ணுதல். கால்நடைமாடுகள் தின்னும் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, கழுநீர், காடிக் கஞ்சி இப்படி வெறுக்கத்தக்க ஆகாரங்களை பரிவோடு உண்ணல். நீசஜாதியினர் என்று சொல்லும் இழி நிலைக்காரர்களின் தெருவை சுத்தம் செய்தல் அவர்கள் எது கொடுத்தாலும் அவைகளை உண்பது; ஓர் கந்தல் துணியை மட்டும் இடையில் சுற்றிக் கொண்டு, "அனாதையாய் ஆனால் அனைவர்க்கும் ஆதியாய்! பராரியாய் ஆனால் அனைவர்க்கும் உபகாரியாய்! ஓர் பரதேசியாய்



பரத்தையே தேசமாக உடையவனாய்! ஓர் அப்பிராமணனாய்
பிரம்மத்தை உணர்ந்த பிரம்மணனாய்! பஞ்சபூதங்களையும்
உணர்ந்து ஒதுங்கியவனாய், சர்வபூத தயாபரனாய்!
கருவிகரணங்கள் ஒடுங்கியவனாய், ஆனால் அவைகளை
தமக்குதாமே ஆட்படுத்திக் கொண்டவனாய்! தேவதைய்
வங்களை உபதேசித்தவனாய், ஆனால் அனைத்து தேவதெய்வங்களும்

**"தாம் ஆனவனாய்"!! "ஓர் அவதூதனாய்"**

சஞ்சாரம் செய்து கொண்டிருந்தான். இந்நிலையில் இவன் ஓர் "ஜடனைப்போல்
ஜடனைப்போல் சஞ்சாரம் செய்த தன்மையினால் இவனுக்கு

**"ஜடபரதன்"** என்னும் நாமம் பிரசித்தமாயிற்று!

இவன் பிறந்ததிலிருந்தே எந்த வர்ணாஸ்ரம தர்மங்களும்
அனுஷ்டிக்கவில்லை. உலகின் நிலையில் எந்த வேதவேதாந்த
சாஸ்திர நியமனங்களும் இவன் அனுஷ்டிக்கவில்லை. குரு
தீட்சையோ குருஉபதேசங்களோ இவன் பெறவில்லை. நிஷ்
காம்ய கர்மா, நிஷ்காம்ய பக்தி, யோக அனுஷ்டானங்கள்,
கடும் விரதம், வைராக்கியங்கள், ஆத்ம ஞானம், இவைகளை
இவன் முறைப்படி அனுஷ்டிக்கவில்லை.

இத்தன்மையினால் **"அதிவர்ணாஸ்ரமி"** என ஆனான்!

ஆனால்?

அனைத்து நிலைகளையும் முன் இரு ஜன்மாவில் முடித்து விட்டான்!!!
இவன் இப்படி சஞ்சாரம் செய்யும் காலை ஆரம்ப நிலையில் இவன் இவ்வாறு
எண்ணிப்பார்ப்பதுண்டு. எப்படி என்றால்?

"ஓர் மான்குட்டி மீது வந்த **"பாசம்"** பற்றாகி அது முற்றிய நிலையில்,
"நான், என்னால், என்னுடையது" என்ற கோரமான குணதோஷங்களால்
பீடிக்கப்பட்டு, தன்நிலை கெட்டு தட்டுத்தடுமாறி இரண்டு ஜன்மாவை வீணடித்து,
பரம்பொருளின் **"பரகருணையினால்"** இந்நிலையில் அதை
அதுவே தாமாக்கிக் கொண்டது என எண்ணிப் பார்ப்பதுண்டாம்!

உ





எம் அறிவுருவான **வால்மீகி**யாயும்,
எம் அன்புருவான **ஸத்ஸித் ஆனந்த**மயமாயும் அமைந்த செல்ல மகனே! இக்கதையை கருத்துடன் கேட்டு "அது நீ" என்றும் "நீயே அது" என்றும் ஆகி ஸ்ரீபரம்பொருளுடன் இரண்டறக் கலந்து மயமாகுவாயாக!

## (8) வைத்தியமாகி செயல்படுதல்! (எட்டாவது அத்யாயம்)

குழந்தைவடிவே! ஸத்ஸித் ஆனந்தா! இந்த ஜடபரதன் தன்னை ஓர் ஜடமாக்கி பேரானந்தத்திலும், (இறைநிலையிலும்) பிரம்மானந்தத்திலும், பரநிலையிலுமாக சஞ்சாரம் செய்து கொண்டிருந்தான். ஆகையால் இவன் தவமானது "உலகின் நிலையில் பயன்படாது போயிற்று"!! இவனது பிராரத்வ கர்மா எஞ்சி இருந்தாலும், அங்கு மனம் செயல்படாது போன தன்மையினால் ஓர் "பதுமையென சுழன்று கொண்டிருந்தான்"

## "இவன் இறந்தான்" (பிரயோஜனம் அற்ற தன்மையினால்)
## "தன்னை மறந்தான்" (அது நாம் நாம் அது என தெளிந்தான்)

உலகின் ஓர் சிவ பக்குவ ஆன்மாக்களுக்காக இவன் இருந்தான்!
உலகமும் அதன் ஜீவர்களும் இவனுக்குள் இல்லவே இல்லை!!
உலகமும் அதன் இயக்கமும், அதில் இயங்கும் ஜீவர்களும், அச்ஜீவர்களை ஆட்டி வைக்கும் வினைகளும், அவ்வினைகள் சூழ்ந்த கோரமான குண தோஷங்களும், அவைகளை கிரஹிக்கும் மனமும், மனதின் எந்த அசைவுகளும் இவனிடம் இல்லாதொழிந்தன!!!
இங்குதான் ஓர் அன்பர் பாடிய பாடல் இவனுக்கு ஒத்து வந்தது. அதாவது


பேய் போல் திரிந்து! பிணம் போல் கிடந்து
பொன்னையும் பெண்ணையும் மண் ஆக்கும் நிலை பெற்றுவிட்டான்!!



எம் செல்வமே!

ஸத்சித்தானந்தா! ஓர் நாள் ஓர் விவசாயி இவனை தன் சோளக் கொல்லையில் காவலுக்காக இந்த ஜடபரதனை அமர்த்தி இருந்தான் போலும்? தெய்வாதீனமாக ஓர் காட்டரசன் சிலபடர்கள் புடைசூழ ஓர் வனதேவதை கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்தான். அந்த வேடுவ அரசன் அந்த வனதேவதைக்கு ஓர் புருஷனை பலி கொடுப்பதற்காக ஒருவனை இழுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தனர் அக்கூட்டம் ஓர் பதினைந்து பேராவது இருக்கும் எனதெரிகிறது. இவர்கள் வரும் வழியில் ஓர் இரவு ஓர் வனத்தில் தங்கி இருந்தார்கள். அது சமயம் அந்த பலி புருஷன் தப்பி ஓடி விட்டான். மற்றும் படர்கள் சிலர் அந்த பலி புருஷனைத் தேடி வந்து கொண்டிருந்தனர். தெய்வாதீனமாக சோளக் கொல்லையில் ஓர் பரண் மீது அமர்ந்து கண் மூடி தியானம் செய்து கொண்டிருக்கும் இந்த ஜடபரதனைக் கண்டனர் அச்சோர படர்கள். தப்பிச் சென்ற ஆள் கிடைக்காத தன்மையினால் ஜடபரதன் அனாதையாக இருக்கக் கண்டு இவனே நம் பலிக்கு தகுந்தவன் என எண்ணி அவனை கையைப் பிடித்து இழுத்துச் சென்றனர்.





இந்நிலையிலும் நம்பரதன் எம்மை ஏன் இழுத்துச் செல்கிறீர்கள்? என்றோ. எம்மை எங்கு கொண்டு செல்கிறீர்கள்? என்றோ, எம்மை என்ன செய்யப் போகிறீர்கள்? என்றோ, யாம் என்ன தவறு செய்தோம்? என்றோ ஏன்? எதற்கு? எங்கே? என்ற எந்த கேள்விகளும் கேட்காமல் ஓர் ஆட்டுக் குட்டியென அவர்களுடன் சென்றான். அனைவரும் அந்த வனதேவதை கோவிலுக்கு வந்து சேர்ந்தனர். அங்கு நம் பரதனுக்கு மங்கள ஸ்நானம் செய்விக்கப்பட்டது! அவனுக்கு தேவையான உணவு கொடுக்கப்பட்டது! புதிய வஸ்திரம் அவன் உடலில் சுற்றப்பட்டது! மாலைகள் போடப்பட்டது! ஒருவன் பரதனை இழுத்துச் சென்று பலிபீடத்தில் தலையை அதில் படிய வைத்தான்

எம் செல்வமகனே!

சத்சித் ஆனந்தா! இந்நிலையிலும் ஜட பரதனுக்கு எந்த அபிமான அஹங்கார உணர்ச்சிகளோ, உடல் ஸ்மரணை உணர்ச்சிகளோ, என்ன நடக்கப் போகிறதென்ற பய உணர்ச்சியோ, எந்தவித உடல், உலக குணதோஷ உணர்ச்சியற்றிருந்தான்.



ஆனால் அவன் திருமுகத்தில் வேறெந்த உணர்ச்சிகளும் இல்லாமல், "ஆனந்தமான தெய்வீக உணர்வு மட்டும்" இருந்தது. மேலும் அவன் வதனத்தில் ஆனந்த புன்னகை ரேகை மட்டும் பிரகாசித்தது. கோயில் பூசாரி கோரமான மந்திரங்களை மட்டும் அதி ஆக்ரோஷமாய் உச்சரித்தவண்ணம் பரதனின் கழுத்துக்கு நேராகத் தம் கொடுவாளை ஓங்கினன்.

"அந்நிலையிலும் ஜடபரதனுக்கு எந்த சலனமும் இல்லாமல் நடக்கப் போவதையும் உணராமல் ஆனந்தமயமாக இருந்தான்"!

பரிபூரண குழந்தாய்!

ஸச்சித்தானந்தா! சர்வாத்ம பூதனையும் சர்வபூத தயாபரனையும், சர்வசாட்சி சொரூபனையும், சர்வாந்தர்யாமியாயும், அணுமுதல் அண்டம் பரியந்தம் சகலர்க்கும் ஆத்ம சொரூபனையும், பரிபூரணமாயிருக்கும் எம் ஜடபரதனின் நிலைகண்டு,

விக்ரஹ சொரூபத்திலிருந்து அதி உக்ரமான கோபாவேசத்தோடு அந்த அம்பாள் பிரசன்னமாய், அதிவேகத்தோடு அந்த பூசாரியின் கையிலுள்ள கொடுவாளை பிடுங்கி அவன் சிரத்தை துண்டித்து விட்டு அங்குள்ள அனைவரையும் ஒருவரையும் விடாமல் கை, கால், தலை, இவைகளை தாறுமாறாக துணித்து அனைவரையும் சம்ஹரித்து விட்டாள் அந்த அம்பிகை!

எம் அண்ணலே! ஸச்சிதானந்தா! இந்த கோரக் காட்சியை கண்கள் இமை கொட்டாமல் ஆனந்தமாய் கண்டு கொண்டிருந்தான் நம் ஜடபரதன். அந்நிலையிலும் அருவருப்போ! பயமோ! சங்கடமோ! ஜீவகாருண்யமோ! கருணையோ! ஐயோ பாவம் என்ற இரக்கமோ! ஏன் இப்படி செய்ய வேண்டும் என்ற கேள்வியோ! அம்மா அவர்களை மன்னித்து விடு என்ற பட்சாதாபமோ! ஓர் தெய்வம் இப்படியும் செய்யலாமா என்ற கேள்வியோ! கருணையே வடிவான தேவ தெய்வங்களுக்கும் இப்படி ஆக்ரோஷம் வரலாமா என்ற சந்தேகமோ! தவறு செய்வது மனித இயல்பு, அதை இப்படி திருத்தி நடனை மன்னிப்பது தெய்வ இயல்பு, இது இப்படி மாறாக நடக்கிறதே இது பொருந்துமா? என்ற விசாரணையோ அற்றிருந்தான் ஜடபரதன்.





## காரணம்!

இங்கு பெரியோர்கள் நான்கு நிலையைக் குறிப்பிடுகிறார்கள். அதாவது ஜீவ நிலை, தேவதைகள் நிலை, தெய்வ நிலை, பரநிலை என்று நான்காகப் பிரித்தார்கள்.

### இதன் விபரம்!

"ஜீவ நிலை":— புண்ணிய பாப வினை சம்பந்தம்; இங்கு குணபாவங்கள் பின்னிப் பிணைந்து விளையாடுதல்; ஏற்றத்தாழ்வு, இன்பதுன்பம், வரவு செலவு, லாப நஷ்டம், நன்மை தீமை; இவைகளால் நடைபெறும் பாரபட்ச தோஷ விளையாட்டு!

"தேவதைகள் நிலை":— நிலைகண்டு தண்டித்தல்; நீதி வழங்குதல்; கண்டித்தல்; தண்டித்தல்; அழித்தல்; நிலைகண்டு காத்தல்; அராஜகத்தை அராஜகம் கொண்டே அழித்தல்; புண்ணியத்தை புண்ணியம் கொண்டே காத்தல் இங்கும் பாரபட்ச தோஷ விளையாட்டு உண்டு!

"தெய்வ நிலை":— கண்டிப்பும் தண்டிப்பும் அவசியம் இல்லவே இல்லை! இங்கு அன்பு, கருணை, குற்றம் குறைகளை மன்னித்தல்; நிலைகண்டு அருள்தல்; அடாது செய்தாலும் தாங்கிலும் நன்மையே செய்தல்; பக்தனுக்கு எந்த நேரம் என்ன நடக்குமோ என கண்ணும் கருத்துமாக காத்தல்; வினைகண்டு நிலைகண்டு நன்மைகளை வாரி வழங்குதல்; மொத்தத்தில் இது விபரம் அறியாக் "குழந்தை" விளையாட்டு எனவும் சொல்லலாம்!

"பரநிலை":— இங்கு எந்த குண தோஷ விளையாட்டும் இல்லவே இல்லை. சாட்சியையும் (தெய்வத்தையும்) சர்வ சாட்சியாய் கண்டு மௌனானந்தமாய் இருக்கும் மகத்தான நிலை. இங்கு ஓர் நிலை உண்டு; அதாவது "நாம் அதுவாகு"தல் இருக்கிறோம் என்ற "ஒரே இருப்புத் தன்மை". இதுமேலே சொன்ன மூன்றையும் கண்டு கொள்ளாது! கண்டிக்காது! தண்டிக்காது! இதை மொத்தத்தில் அகண்டாகார விருத்தியெனச் சொல்லலாம்

"பரம்":— இங்கு எந்த நிலைகளும் இல்லை. இதை வாக்கியார்த்தமாக சொல்வதென்றால் பரம்பொருள் என்றும் பரப்பிரம்மம் என்றும் அகண்டைக ரஸம் என்றும் பிரம்மானந்த சமுத்திரம் என்றும் சொல்லலாம். இதை "இல்லை" என்றும் "இருக்கிறது" என்றும் சொல்வதற்கில்லை!

இது உண்டு ஆனால் இல்லை!!!



உ



## இதை நன்றாக கவனிக்கவும்

உண்டு என்றும் அதையே இல்லை என்றும் சொன்னால் இது எப்படி யெடுத்துக்கொள்வதென்று கேட்கத் தோணுகிறதா? இது ஒன்றும் அதிசயம் இல்லை. ஓர் ஆத்மாவாகிய ஜீவன் (பந்தப்பட்டதால் ஜீவன்) இறைவன் கிருபையினால் சாதனை பல கடினமாகச் செய்து குண தோஷம் களைந்த நிலையில் இறைவனாகவே ஆகி விடுகிறான்!

அந்த இறைவனை ஆத்மா சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் என்ற முத்தொழிலுக்கும் உடைய மாயையை சிப்பியில் வந்த வெள்ளி யென உணர்ந்து மாயை இல்லாத் தன்மையினால் அது (ஆத்மா) ஆகிவிடுகிறான்!

அந்த ஆத்மாவானது சமுத்திரத்தில் தோன்றி உப்பு என நாமம் பெற்றது போல பரமாத்மாவில் தோன்றிய ஆத்மாவே நாம் என உணர்வு பூர்வமாக உணர்ந்த தன்மையில், உப்பு எப்படி சமுத்திரத்திலேயே கரைந்து சமுத்திரமாகவே ஆவது போல, பரமாத்மாவில் இருந்து தோன்றிய ஆத்மாவாகிய நாம் அந்த பரமாத்மாவே என

## "தன்நிலை பெற்றதால்"?

ஆத்மாவே பரமாத்மா ஆகி விடுகிறது! இங்கு பரமாத்மாவும் மேலே சொன்ன பரம்பொருளும் **"ஒன்றே"** சொல் விளக்கத்திற்காக பரமாத்மா என்றும் பரம்பொருள் என்று விளக்கம் தந்தோம்

## பரமாத்மாவும், பரம்பொருளும் ஒன்றே!!!

விளக்கம் வேண்டுமென்றால் பரமாத்மா என ஒன்று **"உண்டு"**

விளக்கம் தேவை இல்லையென்றால் பரம்பொருள் என ஒன்று **இல்லை!**

ஆகவே தான் முடிந்த முடிவிடத்தில் உண்டு என்றும் இல்லை யென்றும் பேசப்படுகிறதே தவிர உண்மையாக உறுதியாக பிரமாணமாக சொல்வதற்கில்லை சொன்னால் உண்மை!

ஆகவே இது உண்டு ஆனால் இல்லை என பிரம்மஞானிகளின் அனுபவம்!



உ

காலாதீத ஒன்றான நாம ரூபம் குணம் குறி
கால தேச வர்த்தமானம் (வியாபாரம் = பற்று வரவு)
கடந்ததாக இருப்பதாலும் அதிலிருந்து பரமாத்மா
வாகவும் ஆத்மாவாகவும் ஜீவனாகவும் படிப்படியாக
இறங்கி வந்த நாம் எப்படி இறங்கினோமோ அப்படியே
மேலே ஏறி விட்டால் "நாம் அதுதானே"

படிப்படியாக மேலே ஏறிய நாம் பரமாத்மாவாக ஆகும் பரியந்தம்
"நாம் இருக்கிறோம்" என இருப்புத் தன்மை "உண்மைதான்"
அந்த பரமாத்மா தன்மையும் இழந்து பரம் பொருளாகி விட்டால்
அங்கு இருப்பவர் எவர்? அவரை விளக்குபவர் எவர்? எவரை
எவரால் விளக்க முடியும்? ஆகவே அங்கு!

# இருப்பும் இல்லை! சொல்பவரும் இல்லை!!

ஆகவேதான் "இல்லையென்றதில்லையில் இல்லையென்பதும் இல்லையே"
என்றார்கள் "நாம் இங்கு என்றால் உண்டு"!
"நாம் அங்கு என்றால் இல்லை"!!
இங்கு என்றால் விவகாரம் எதுவரையில் உண்டோ அதுவரையில் இங்கு!
அங்கு என்றால் விவகாரம் அற்ற இடம் எதுவோ அது அங்கு!!
விவகாரத்திற்கு இருவர் வேண்டும் அது இங்கு!
ஒருவர் இருந்தால் அங்கு விவகாரம் இல்லை அது அங்கு!!
ஒருவர் இருந்தும் இல்லாதவரே! அது "சுகசொரூபம்" அதை சொல்பவர்
கேட்பாரும் இல்லை! சொல்லுக்கும் பொருளும் இல்லை! இல்லை!

# ஒன்றும் சொல்பவர் இல்லை!!

எம் அன்புச் செல்வமே!
ஸத்சித் ஆனந்தா "உண்டு" என்றும் "இல்லை" என்றும்
சொல்வதற்கு அவன் அருளால் இவ்வளவு விளக்கம் கொடுத்தால்தான்
சாதனை செய்யும் பக்குவ ஆன்மாக்களுக்கு ஓரளவாவது கிரஹிக்க முடியும்.
இனி கதைக்கு வருவோம்.



உ



எம் அன்புருவே! ஸச்சித் தானந்தா! உலகினிலையில்
நடந்த இந்த கோரக்காட்சியை எந்த விகாரமும் விவகாரமும் இல்லாமல் மோனக்கட்டையில் கையை ஊன்றிய வண்ணம் அமைதியின் சாந்தியாய் ஆனந்த புன்முறுவலுடன் நம் ஜடபரதன் "விழி கண் குருடு போலும்." அந்த சோரபடர்கள் ஐயோ அம்மா! அம்மா என்னை வெட்டாதே! இனி தப்பு செய்யமாட்டேன்! என்னை விட்டுவிடு நான் திருந்திக்கொள்கிறேன்! அம்மா தெரியாமல் செய்துவிட்டேன் என்னை இந்த ஒருபோது மன்னித்து விடு! என் கால் போச்சே! என் கை போச்சே! என் தலை போச்சே! நான் இப்படி சாகிறேனே! என்னை காப்பாற்றுவார் இல்லையா? அம்மாவே இப்படி கொலை செய்தால் யாரிடம் சொல்லி முறையிடுவது? என் பாவத்துக்கு பரிஹாரமே இல்லையா? இப்படி ஈவு இரக்கம் இல்லாமல் கொல்றாளே! அம்மா அம்மா என நான் அலறுவது உன் காதில் விழவில்லையா? என இன்னும் அனேக முறையிட்டு அலறுவதையும் நம் ஜடபரதன் கேட்கிறான். ஆனால் அவனிடம் இதை விசாரணை செய்ய மனம் இல்லை. ஆகவே "காது இருந்தும் செவிடனாய்" இவ்விரண்டும் அடைபட்டதால் (கண்களும் காதுகளும் அடைபட்டதால்) "வாய் இருந்தும் ஊமையென ஆகிவிட்டான்!

உடல் உலகம் அதன் உணர்ச்சிகள் அனைத்தும் இறந்து விட்டன!
ஆனால்?
மேலே கூறியவைகள் இறந்ததால் பிரம்மானந்தம் நிறைந்திருந்தன!!

வந்த அந்த வனதேவதை (அம்பாள்) வினை முடிந்த தூலங்கள் அனைத்தையும் காலி செய்து விட்டு, வேறு ஜனனத்திற்கு அவைகளை அனுப்பி விட்டு, வினைமுடியாத தூலமாகிய ஜடபரதனை பார்த்து அதன் உள்ளிருக்கும் தன் சைதன்யமாகிய (ஆத்மா பரமாத்மா ஆன தன்மையாகிய) அந்த பரம் பொருளை மண்டியிட்டு நமஸ்கரித்து விட்டு அவள் பிரார்த்தனை சொன்னாள்.

ஹே மஹாத்மா! உம் தூலத்தை இந்நிலைக்கு ஆளாக்கிய இந்த சோரர்களுக்காக யாம் உம்மிடம் மன்னிப்பு கோருகிறோம்! அவர்கள் இதை அறியாமையினால் செய்தவர்களாகும். "தன் வீட்டு விளக்கானாலும் அதை முத்தமிட அது சம்மதியாது". அதேபோல் அவர்கள் நிலையும் ஆகி விட்டது!

உ



ஆனால்?

அவர்கள் ஜன்மாவும் பழுதாகவில்லை எப்படியென்றால் "உம் தரிசனமும் சரீர ஸ்பரிசனமும்" உடன்

# "ஸாந்தியின் புன்முறுவலும்"

தரிசித்த இவர்கள் அனைவரும் "பதமுக்தியும்" அடுத்து மேலான பிறவியும் பெறத் தகுதி உள்ளவர்களாகி விட்டார்கள். இந்த உபகாரத்திற்கு யாமும் உமக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். உம்மிடம் உபகாரம் செய்ய அடியோமுக்கு தகுதி இல்லை. மேலும் பரமார்த்திகத்தில் உபகாரம் என்ற வார்த்தைக்கு இடமே இல்லை. எம் நிலையில் இவர்களுக்கு "**மறக்கருணை**" என்ற அன்பிற்கு பாத்திரர்களாகி விட்டார்கள்.

இது உலகின் நிலையில் "**கோரம்**"!

ஆனால் எங்கள் நிலையில் "**அகோரம்**"! ஆகும்

எனப்பரிவுடன் கூறிவிட்டு நம் ஜடபரதனின் கைகளை தம் அபயகரத்தால் மெதுவாக பற்றிய வண்ணம், அவன் எந்த சோளக் கொல்லையில் காவல் இருந்தானோ அங்கேயே கொண்டு வந்து அவன் அந்த பரண் மீது எப்படி இருந்தானோ அதே நிலையில் அமரச் செய்து விட்டு மீண்டும் ஒருமுறை நமஸ்கரித்து விட்டு அந்த அம்பிகை அந்தர்த்யானம் ஆனாள்!

அறிவுருவே! ஆனந்த உருவே! திரு உருவே!

எம் ஸத்சித் ஆனந்தா!

"விதிப்படி நடந்தாலுமானால் அது வினையின்படி முடிவுறும். வினையும் விதியும் முடியாததாலும் ஓர் பக்தனையும், ஓர் ஞானியையும், அவர்கள் தவத்தை தேவதைகளும், தேவர்களும், தெய்வங்களும், திரிமூர்த்திகளும் அவர்கள் "கண்ணைக் காக்கும் இமைபோல்" காத்து வருகின்றார்கள். இதைத்தான் எம் தன்னலில் கீதையில் சொன்னேன். என்னவென்றால்: "எம் உண்மையான பக்தனுக்கும், தன்னை உணர்ந்த ஞானிக்கும் ஏதாவது விக்கினம் நேருமாயில் இவ்வுலகை அழித்தாவது அவனைக் காப்பாற்றுவோம்" என்று பிரதிக்ஞையாக சொன்னேன்!



# 9 ரகுகுணனுக்கு உபதேசம்! (ஒன்பதாவது அத்யாயம்)

பக்தோத்தமனையும், பாகவதோத்தமனையும், உத்தமோத்தமனையும், ஞானோத்தமனையும் அமைந்த எம்குழந்தாய்

## ஸத் ஸித் ஆனந்தா!

இந்த ஞானேந்திரனான ஜடபரதன் தான் இறந்த தலைவனில் கலந்து பித்தனைப்போலும், பேயனைப்போலும் பூமியில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தான்.

## ஓர் நாள்!!!

ஓர் வனத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் போது "**ரகுகுணன்**" என்ற ஓர் அரசன் சன்மார்க்கத்தைநாடி உபதேசம் பெறவேண்டுமென்று "**கபிலமகரிஷியை**" தேடிப் போய்க் கொண்டிருந்தான். அந்த ரகுகுணன் சிவிகையில் (பல்லக்கில்) ஏறி சில சேவகர்கள் புடைசூழ போய்க் கொண்டிருந்தான். வரும்வழியில் அவ்வனத்தில் ஓர் இடத்தில் இளைப்பாறிச் செல்லலாம் என்று அந்த பரிவாரங்களுடன் அரசனும் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். அது சமயம் சிவிகை சுமக்கும் ஒருவனுக்கு கடுமையான வயிற்று வலி உண்டாகிவிட்டது போலும்? அவன் அப்படியே சுருண்டு படுத்து விட்டான். இது மற்றவர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்தது. எப்படியாவது பல்லக்கை சுமந்தே தீர வேண்டும். அது சமயம் பிராப்தாதீனமாக நம் ஜடபரதன் அவ்வழியே போய்க்கொண்டிருந்தான். அவனை அந்த சிவிகை ஆட்கள் பார்த்தார்கள். நல்ல வாட்டசாட்டமாக இருந்த பரதனைக்கண்டதும் இவன் ஓர் அனாதை தானோ? ஓர் பரதேசி தானே? இவனை கேட்பார் யாரும் இல்லையே? நமக்கு கிடைக்கும் ஊதியத்தில் இவனுக்கும் கொஞ்சம் கொடுத்தால் போச்சு என பேசி முடிவெடுத்து ஜடபரதனை கூப்பிட்டார்கள்!

சிவிகையாள்:— ஏய்! இங்கேவா என்றான் ஒருவன். நம் பரதனும் சிரித்துக் கொண்டே வந்தான். இந்த பல்லக்கை எங்களுடன் தூக்கிக் கொண்டு வர வேண்டும். எங்களுக்கு கிடைக்கும் சம்பளத்தில் உனக்கும் ஏதாவது பார்த்துத் தருகிறோம் என்றான். நம் பரதனுக்கு இது ஒன்றும் புரியவில்லை. என்ன சொல்கிறான்? என்ன செய்ய வேண்டும்? எங்கே போக வேண்டும்? என்பதெல்லாம் இவனுக்குத் தெரியவில்லை. ஆட்களையும் ஏறஇறங்கப்பார்த்தான். அந்த பல்லக்கையும்



உ

பார்த்தான். பல்லக்கினுள் அரசன் இருப்பதைக் கவனிக்கவில்லை போலும்? தம் யதார்த்த சொரூபத்தில் லயித்தபடி ஓர் சிரிப்பு சிரித்தான் "**ஹூம்**" என்றான். அவன் சம்மதித்து விட்டான் என எண்ணி அனைவரும் பல்லக்கை தூக்கி நம் ஜடபரதன் தோளிலும் ஓர் பகுதியை (தண்டயக்கம்பை) வைத்தனர். ஒருவன் ஊம் நட என்றான். பரதனும் நடந்தான் அந்த பல்லக்குக் கம்பை இறுக பற்றிக்கொண்டான்.

"**பிராரப்தம் கழிகிறது**" என ஓர் எண்ணத்துடன் நடந்தான் நம் ஜடபரதன். இதில் ஓர் வேடிக்கை என்னவென்றால்? பல்லக்கை சுமக்கும் நம் பரதன் மற்றும் ஏழு பேருடன் இணைந்து பவ்யமாக நடக்கமாட்டான். பரதன் பார்வை எல்லாம் அக்கம் பக்கம், தன் ஆட்கள் பக்கம் இராது. நேராக பூமியின் மேல் நான்கு அடிக்குள்ளாகவே இருக்கும். காரணம்? புழு பூச்சி எறும்பு நத்தை இவைகளை மிதித்து விடலாகாது என பார்த்துப் பார்த்து அதிக கவனத்துடன் நடக்கிறான்!

"அக்கம் பக்கம் பார்த்தால் பார்வையும் சிதறும்! பூமியில் நம் பாதத்திலிருந்து நான்கு அடி தூரம் பார்த்து நடந்தால் உண்மையின் நிலையில் "**பாதம்**" மட்டும் தெரியும். மேலும் புழு, பூச்சி, எறும்பு, நத்தை மற்றும் ஜீவராசிகளை மிதித்து விடாமல் ஜீவகாருண்யம் அங்கு காக்கப்படும்!"

## "மனம் சிதறாது"
## "காரியம் பதறாது"

உலகின் நிலையிலும், தெய்வ நிலையிலும் "கூர்ந்த திருஷ்டி" உண்டாகும்!

"நீ வந்த காரியத்தை மட்டும் முடிப்பாய்"!

"சொந்த காரியத்தில் மயங்க மாட்டாய்"!

இது எம் சொந்த அனுபவமாகும். நீங்களும் உங்கள் வாழ்க்கை பாதையில் சற்று கவனமாக இருங்கள்! இதுவே நன்மை!



உ

## அன்பர்கள் சற்று சிந்திக்கவும்!

இந்த ஜடபரதன் மனதில் "மனம் மறைந்தான தன்மையில்"

நாம் ஒரு துறவியென்றோ? நாம் ஓர் பக்தன் என்றோ? நாம் ஓர் ஞானியென்றோ? நாம் இந்த காரியம் செய்யலாமா என்றோ? இவர்கள் பாமரர்கள் இவர்கள் இட்ட வேலையை நாம் செய்யலாமா என்றோ? நம் சாதனை மேலானதாக இருக்க, இப்படி கீழ்த்தரமான காரியம் நாம் செய்யலாமா என்றோ? இவர்களுக்கு உபதேசம் செய்து இவர்களை திருத்தலாமே என்றோ? எந்த எண்ணமும் இவனுக்கு எழவில்லை!

## இங்கு ஓர் கேள்வி எழலாம்?

இந்த பரதன் மூன்று ஜன்மா எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

1. பரதன் அரசன், ஓர் தபஸ்வி, ஓர் ராஜரிஷி, ஓர் சாதனையாளன்!
2. கவனக்குறைவால் வந்த ஜன்மா மான். இங்கு குருகிருபையும், குருஉபதேசமும், குருசேவையும் கிடைத்திருக்கிறது!
3. ஓர் பிராமண குமாரன். பூர்வ புண்ணியத்தால் முன் இரு ஜன்மாவும் இவனுக்கு தெரியும். முன் ஜன்ம அனுபவங்களால் "சுத்த ஞானியானான்". இச்ஜன்மாவில்தான் "ஜடபரதன்" என்ற நாமம் பெற்றான்!

1. முதல் ஜன்மாவில் ராஜரிஷியாக இருந்த காலத்தில் ஓர் இறந்து போன தாய்மானுக்காக வருந்தினான். பின் அம்மானின் குட்டியின் நிமித்தம் கருணையும், காருண்யமும் கொண்டு "**பாசத்தால்**" உழன்று அதன் காரணமாக "மனோ அவஸ்தை" கடுமையாக அனுபவித்து பின் அந்த அவஸ்தையின் காரணமாக ஓர் மான் ஜன்மா எடுக்கிறான்.

2. அதே பரதன் தன் மூன்றாவது ஜன்மாவாகிய ஜடபரதனாக பிறவி எடுத்து அதில் அனேக சோர படர்களை ஓர் அம்பாள் கைவேறு, கால் வேறு, தலை வேறு என கண்ட துண்டமாக துணிக்கிறாள். அதுசமயம் ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. அதையும் இந்த ஜடபரதன் காண்கின்றான். அங்கு பாசம் இல்லை. மனோ அசைவு கொஞ்சமும் இல்லை. அவன் பிரம்மானந்தத்தில் லயித்த வண்ணம் ஆனந்தபரனாக பார்த்துக் கொண்டிருக்கிறான். இங்கு பாசமும், மனோ அவஸ்தையும், கருணையும் காருண்யமும் என்ன வாயிற்று???



3. அதே ஜடபரதன் இங்கே பூ, பூச்சி, எறும்பு, நத்தை, ஆகிய ஜீவராசிகள் மிதித்து விடக்கூடாதென நாவிக் குறித்து அதிக கவனமுடன் நடக்கிறான். அன்று இறந்துபோன "மன அசைவு, கருணை, காருண்யம், பாசம்" இவைகள் எப்படி இன்று வந்தது? ஒரே ஜன்மாவில் முன்பு இருந்த நிலைக்கும், பின் இருக்கும் நிலைக்கும் "வித்தியாசம்" வரக் காரணம் என்ன?

இப்படி மூன்று நிலைகளிலும் அவஸ்யம் பார்க்கத் தோணும்!

இதற்கு மூன்று நிலைகளை உணர்த்தி சுட்டிக் காட்டுகிறோம் இதை உணர்வு பூர்வமாக உணரவும்!

1. "தூலநிலை"! 2. "சாட்சிநிலை"! "அகண்டநிலை"!

என்று மூன்று நிலைகளாகப் பிரித்து இந்த ஜடபரதனும் இம்மூன்று நிலைகளையும் வரிசைக் கிரமமாக அனுபவித்து அந்த "பரநிலை"யை பெற்று ஆனந்தமாக இருந்தான் விளக்கம் கீழே கவனிக்கவும்!!

1. "தூலநிலை":- "நான் என்றவ் என்னுடையது" என பந்தப்பட்ட இந்த ஜீவன் அனைத்து குண தோஷங்களாலும் பின்னிப் பிணைந்து இந்த "ஜீவ விளையாட்டு" விளையாடும்போது அங்கு "ராகத்துவேஷாதி" (விருப்பு வெறுப்பு) அவஸ்யம் உண்டு. "சத்வம், ரஜஸ், தமஸ்" என மூக்குணங்களும் விலக்கமுடியாமல் பின்னிப்பிணைந்திருக்கும். இம்மூன்று குணங்களும் "நிலைகண்டு, இடம் கண்டு, வினை கண்டு" வருவதால் அங்கு "பாசம், வெறுப்பு, கருணை காருண்யம்" அவஸ்யம் உண்டு. இவைகள் வினைகளுக்கு ஆதாரமாக இருப்பதால் இங்கு "ஜனனமரணம் உண்டு"

2. சாட்சிநிலை:- இங்கு "நான் என்றவ் என்னுடையது" என்ற அஹங்கார அபிமானம் மாறி அனைத்தும் "யாமே, எம்மால், எம்முடையது" என்ற சாட்சிநிலையில் இவை அனுபவிக்கப்படும் போது "ஒருமை மாறி அது பன்மையாக" வடிவெடுக்கிறது. இது பன்மையாக மாறும் போது மேலே கண்ட நிலையில் வாக்கு வந்தாலும் அது "நாமே, நம்மால், நம்முடையது" என்று பன்மையாக வடிவெடுப்பதால்



ஒரு ஜீவன் மீது குற்றம், குறைகள், நிறைவுகளை சாத்தாமல் அனைத்து "**மனித இனங்களையும்**" இணைந்து சகலத்திற்கும் (புண்ணிய பாபங்களுக்கும்) "**சாட்சி**" நாமே என "அன்பின் நிலையிலும் கருணையின் வடிவிலும்" ஏற்றுக்கொள்வதால் "சாட்சி நிலை ஆகிறது." இதுவே தெய்வ நிலையாகும்! இதைகவனிக்கவும்!

தெய்வ நிலை வேறு! தேவதைகள் (தேவர்கள்) நிலை வேறு!

1. தெய்வம் என்றால் கண்டிப்பு, தண்டிப்பு, கண்டுகொள்ளல் ஆக இந்த மூன்றும் அவசியம் இராது. ஆனால் அன்பு, கருணை, பொறுமை அருள்தல் ஆகிய நான்கும் உண்டு (அருள்தல் என்றால் நிலை கண்டு)
(கண்டு கொள்ளல்:— குற்றம், குறைகள் நிறைவுகளை கண்டு கொள்ளல்)

2. தேவதை என்றால் கண்டுகொள்ளல் கண்டிப்பு, தண்டிப்பு ஆகிய இந்த மூன்றும் அவசியம் உண்டு! ஆனால் அன்பு, கருணை, பொறுமை, அருள்தல் ஆகிய நான்கும் **வினையின் நிலை** கண்டு நடைபெறும்.

3. அகண்ட நிலை:— இங்கு முன்பு சாட்சி நிலையில் கூறிய "நாமே, நம்மால், நம்முடையது;" என்று பன்மையாக வடிவெடுத்து "எந்த ஜீவன் மீதும் குற்றம், குறைகள், நிறைவுகளை காணாமல்" "மனித இனத்தை மட்டுமல்லாமல்" "**அனைத்து ஜீவ கோடிகளையும்**" இணைந்து சகலத்திற்கும் "**சாட்சி**" நாமே என "அன்பின் நிலையிலும், கருணையின் வடிவிலும்;" ஏற்றுக் கொள்வதால் இது "**சர்வ சாட்சி**" யாகிய "அகண்ட நிலை" ஆகிறது!

"சாட்சி நிலை மனித இனத்தை மட்டும் குறிக்கும்"!

"சர்வ சாட்சியாகிய அகண்ட நிலை அனைத்து ஜீவகோடிகளையும் குறிக்கும்"!

" சாட்சி நிலையை "அந்தர் யாமி" எனவும் சொல்லுவோம்!"

"சர்வ சாட்சி நிலையை "சர்வாந்தர்யாமி" எனவும் சொல்லுவோம்!"



உ ஓம்

ஓம் ஆத்மானந்தமான!
ஸத்சிதானந்தா!

மேலே கூறிய இம்மூன்று நிலைகளையும் (தூலநிலை சாட்சிநிலை அகண்டநிலை) ஏன் இத்தனை விபரமாக சொன்னோமென்றால் இம்மூன்று நிலைகளையும் நம் ஜடபரதன் முறையோடு அனுபவித்து வந்து விட்டான். எப்படியென்றால்?

1. மன்னனாகிய ராஜரிஷி தூல நிலையாகும்!
2. அவனே மானாகப் பிறந்தது சாட்சிநிலையாகும்!
3. அவனே ஜடபரதனாக மாறியது அகண்ட நிலையாகும்!

ஆகவே?

ராஜரிஷியாக இருக்கும் போது தூலநிலை விதிமுறைகளை கையாண்டான். பின் மான் ஜன்மமாக இருக்கும் போது சர்வஜாக்ரதையாக நடந்து குருசேவையும் குருகிருபையும் குருதீட்சையும் பெற்றதால் "சாத்வீகமான" சாட்சிநிலை விதிமுறைகளை கையாண்டான்! பின் ஜடபரதனான நிலையில் "**சர்வாத்ம** பாவனை" சித்தியானதால் சர்வ சாட்சி நிலையாகிய அகண்ட பாவனை நிலை பெற்று விட்டான் "மேலும் உள்நோக்கி குவிந்தான்"!

சர்வாத்ம பாவனை சித்தியாகும் போது இவன் "மனமும் முடிவுற்றது" "இவன் வினையும் முடிவுற்றது" ஆனால்?

"**பரோபகார**" நிமித்தமாக காலாதீத அந்த ஒன்றின் கருணையால் "**பரகருணை**" என்ற நிலையில் தூலசஞ்சாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனாலும் வாசகர்கள் வாக்குக்காகவே இந்த பரதன் வாயிலாக அந்த ஒன்றே விளையாட்டார்த்தமாக அவன் "**பிராப்தம்**" என குறிப்பிட வைக்கிறது. இந்த பிராப்தமும் அதன் கருணையே. மேலும் எந்தெந்த புழு பூச்சி எறும்பு நத்தை முதலியவை இவன் பாதம்பட்டு ஜன்ம சாபல்யமடைய வேண்டுமோ அவைகள் ஜன்ம சாபல்யமடைகின்றன. அதன் மகத்துவம் இல்லாத ஜீவராசிகள் மீது இவன் பாதம் படவாகாது. ஆகவே அதன் நிலையில் "அவைகளை தாண்டிக்குதிக்க இருப்பதேயன்றி "**எண்ணத்தால்**" தாண்டிக்குதிக்கவில்லை!



உ



எண்ணம் இருந்தால் மனம் உண்டு; மனம் இருந்தால் வினை உண்டு; வினை இருந்தால் ஜன்ம அவஸ்யம் உண்டு. ஆகவே அவனுக ராகத்துவேஷ த்துடன் (விருப்பு வெறுப்புடன்) "தாண்டவும் இல்லை! மிதிக்கவும் இல்லை"!

"பரகருணை என்பது தெய்வ நிலையையும் கடந்ததாகும்". அது அகண்ட நிலையாகும் அதற்கு ஒரே செயல்பாடு மட்டும் தான் உண்டு! அது விசுதாச்சாரம், பாரபட்சம் பார்ப்பதில்லை!

அந்த பரகருணைக்கு பாத்தியப்பட்டதை மட்டும் அது கவனிக்கும்!

இங்கும் வித்தியாசம் தோன்றப்படுகிறதே என கேட்கலாம்? உண்மைதான்!

"சர்வ சாட்சி விருத்தியால் அதாவது அகண்டபாவனையால்"

**நிர்ணயிக்கப்பட்டதை"**

மட்டும் இது ஏற்றுக் கொள்ளும் இது தெய்வ நிலையையும் தாண்டியதால் ஓர் விஷயம்!

அதாவது புண்ணிய பாபம் இரண்டும் பிறவியின் வித்தாகும்! புண்ணியபாபம் வேறு, "**தர்மம் வேறு**" தர்மத்திற்கு அனேக இடங்களில் விளக்கம் கொடுத்திருக்கிறோம்! அதைப்போலவே புண்ணியபாபங்களுக்கும் விளக்கம் கொடுத்திருக்கிறோம்

1. புண்ணியம் செய்தால் அது தாவத்தை காக்கும்!
2. தர்மம் செய்தால் அது அறியாமையை போக்கும்!!

அறியாமை விலகினால் அறிவு பிரகாசிக்கும். அறிவு பிரகாசித்தால் ஜீவகளை நீங்கி ஆத்மா பிரகாசிக்கும்; ஆத்மா பிரகாசித்தால் அதுவே பரமாத்மா ஆகிவிடும்! நாமே பரமாத்மா ஆனால் சாதனை முற்றுப்பெறும். ஜீவகளை களைவது பரியந்தம் தான் உன் முயற்சி! ஜீவகளை களைந்து விட்டால் அதை அது ஆக்கிவிடும்!





உ

எம் உண்மையின் மைந்தா!

சத் சித் ஆனந்தா!

பரகருணையின் நிமித்தம் பிராப்தத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஜடபரதன் ரகுகுணனை பல்லக்கில் வைத்து சுமந்து செல்கின்றான். இவன் கவனம் பல்லக்கில் இல்லாமல் பர சொரூப கவனமாகவே சென்றாலும்;

"விதி முடிந்த ஜீவராசிகள் இவன் பாதம் பட்டு ஜன்ம சாபல்யம் அடைகிறதுகள்"

"விதி முடியாத ஜீவராசிகள் இவன் பாதம் படாமல் எகிறிக் குதித்து தாண்டி விடுகிறான்"

இத்தன்மையினால் பல்லக்கு அதிக ஆட்டம் கண்டது போலும்! பல்லக்கின் உள் இருந்த மன்னனுக்கு பிரயாணம் சுகம் கொடுக்கவில்லை. துன்பம் கொடுத்தது போலும்? பலநிலைகளிலும் பல இடங்களிலும் அடிபட்டு அரசன் நொந்து போனான் மன்னவன்.

உடனே பல்லக்கை நிறுத்துங்கள் என ஆணையிட்டான் மன்னவன். பல்லக்கும் உடனே நின்றது. ஆனால் இறக்கி வைக்கவில்லை. ரகுகுணன் வெளியே எட்டிப்பார்த்து சற்று கோபக்கனலைக் காட்டி அடேமடையர்களே!

இதுவரை ஒழுங்காக வந்த பல்லக்கு இப்போது இப்படி பேயாட்டம் ஆடக் காரணமென்ன? உங்கள் உள்ளத்தின் நான் அரசன் என்ற பயம் இல்லையா என்றான்?

சிவிகையாட்களில் ஒருவன் சொன்னான்:- அரசே!

நாங்கள் அனைவரும் ஒழுங்காகத்தான் நடக்கிறோம். புதிதாக வந்த இந்த மனிதன் ஒருவனே இந்த செயலுக்கு காரணம்? எங்கள் அனைவரின் மேலும் எந்த குற்றமும் இல்லை அரசே! இவனை விசாரியுங்கள் என சொன்னான்?

அரசனும் பரதனைப் பார்த்து அதட்டும் தொனியில்;

ஏண்டா தம்பி! உனக்கு என்ன ஆயிற்று? நன்றாகத்தானே இருக்கிறாய்? நான் யார் தெரியுமா? நான் அரசன் என்பது ஞாபகம் இருக்கட்டும் என எச்சரித்தான்?



நம்பரதனுக்கு எவர் சப்தமும் அவனுக்கு விளங்கவில்லை அனைவரையும் ஓர்முறை பார்த்தான் சிரித்தான், எந்த வார்த்தையும் பேசவில்லை! உடனே அரசனும் "ஹூம் ஹூம்" சீக்கிரம் போகவேண்டும் அனைவரும் ஜாக்கிரதையாக நடங்கள் என சொல்லி எச்சரித்தான். மறுபடியும் நடந்து செல்லும் போது அதே நிலை தான். மறுபடியும் பல்லக்கு ஆடி அரசனுக்கு உபாதை கொடுத்தது போலும்? அரசனுக்கு மீண்டும் உக்ரமான கோபாவேசம் ஏற்பட்டது "நிறுத்துங்கள் பல்லக்கை என்றான்." பல்லக்கு உடனே நிறுத்தப்பட்டது. வெளியே எட்டிப்பார்த்தான். அனைவரும் அரசன் கோபத்தைக் கண்டு பயந்து நடுநடுங்கி கூனிக்குறுகி நின்றனர் "ஜடபரதனைத் தவிர" ஜடபரதன் முகத்தில் எந்த உடல் உபாதை குறிகளும் தென்படவில்லை! அதற்கு மாறாக ஆனந்தமும் மந்தஹாச சிரிப்பு தான் தென்பட்டது! உடனே அரசனுக்கு கோபக்கனல் கொழுந்து விட்டு எரிந்தது!

அரசனின் வார்த்தை:- ஏண்டா முட்டாள்! ஏண்டா தடியா! நான் யாரெனத் தெரிந்தும் என் வார்த்தைகளை இப்படி அசட்டை செய்கிறாயா? உன்னை நான் என்ன செய்வேன் தெரியுமா? உன்னைப் பார்த்தால் நீ இளைத்திருக்கவில்லை. நன்றாக பருமனாகத்தான் இருக்கிறாய்? பின் ஏன் இவ்விதம் நடந்து கொள்கிறாய்? இனி உன்னை நான் தண்டிப்பேன்? ஏன் இப்படி ஒன்றும் பேசாமல் ஊமையைப் போலும் ஓர் பித்துப்பிடித்தவன் போலும் இருக்கிறாய்? உனக்கு மான அவமானம் ஒன்றும் இல்லையா? நீ ஓர் பிரேதமா? சொல்லடா என் கேள்விக்குப் பதில் என உக்ரமாக கேட்டான் அரசன்?

(10) ## ஜடபரதன் வாக்கியம்! (பத்தாவது அத்யாயம்)

ஏ ராகுகணா!

நேற்று நீ யாரோ! இன்று நீ அரசவேசம் அணிந்த ஓர் வேஷதாரி! நாளை நீ என்ன ஆவாயோ? நாளை உன்னை வேறொருவன் உன் பதவியை அகற்றி விட்டால் நாளை நீயும் இவர்களும் ஒன்றே! சற்று நேரம் போகும் இந்த வேஷத்திற்கு இந்த ஆர்ப்பாட்டமா? ஓர் ஞானி தரிசிக்கச் செல்லும் நீ இத்தனை ஆடம்பரம், இத்தனை அஹங்கார அபிமானம், செருக்கான வார்த்தை, தெய்வ அம்சமான இவர்களை உன் சிவிகை ஆட்களாக்கி இத்தனை

(ஓம்)



மமதையோடு சென்றால் அந்த ஞானந்தான்
நீ நசிக்கமுடியுமா? எம்மை நீ தண்டிக்கப்போகிறாயா?

## "யாமோ அரைத்த மாவு"!!!

("வினையை முடித்த நாவம்"!)

அரைத்த மாவையே திரும்ப அரைக்க நீ சமர்த்தனோ? அது உனக்கு தேவையும் இல்லை! அவசியமும் இல்லை! முடியாது! நீ இளைத்திருக்க இல்லை. பருமனாக இருக்கிறாய் என்றாய். உன்னைப் போல் இளைப்பதும் பருப்பதும் மண்ணால் கட்டியாகிய இம் மாமிச பிண்டமே

## "யாமோ அசங்கன்"!!!
## "யாமோ அசலன்"!!! ("யாம் அசைவற்றவன்"!)

நீ எம்மை "முட்டாளே" என்கிறாய்! யாமோ அறியாமை யென்னும் முட்டையை உடைத்து வெளியேறிய சுதந்திரப் பறவை! அந்த வார்த்தை உனக்கும் இவர்களுக்கும் பொருந்தும் ஏனென்றால் அஞ்ஞானமாகிய முட்டைக்குள்ளேயே இருந்து வெளியேறமுடியாமல் சிக்கித் தவிக்கும் முட்டாள்கள்! நீ எம்மை தண்டிக்கப்போகிறேன் என்கிறாய்?

## "இந்த க்ஷணத்தில்"!

நீ அரசன் வேடம் அணிந்த ஓர் பதுமை! மறுக்ஷணம் இன்னொரு பொம்மை உன் சிங்காசனத்தில் வந்து அமர்ந்து விட்டால்? "நீயே தண்டனை அடையப் போகிறவன்" எம்மை தண்டிப்பாயா? நீ எம்மை மூடன் என்றும் பித்தன் என்றும் ஓர் "**உண்மையை**" சொல்லிவிட்டாய்! உண்மைதான் உடல் உலக உறவு உணர்ச்சிகளை விட்டு **முழுமூடமாய்** (எந்த விசாரணையுமின்றி) அந்த ஒன்றையே பற்றி அதுவாகவே ஆகிவிட்டோம். ஆகவே யாம் "மூடம் தான்" பித்தன் என்றாய் அதுவும் ஸத்யமே **ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகள், பித்தம்**" நீங்கி அந்த தாவாத்த ஒன்றைப் பற்றி **அந்த பித்தம்** எம்மை ஆட்கொண்டதால் யாம் "பித்தனே"!



உ



உனக்கு "மான" "அவமானம்" இல்லையா என்றும்,
நீ ஓர் பிரேதமா என்றும் கேட்கிறாய்?
ஓ அரசே! மான அவமானம், சூடு, சுரணை, லஜ்ஜை,
வெட்கம் முதலியவை எதால் பற்றி இருக்கிறது தெரியுமா?

**என்னுடையது** என்ற "அபிமானத்திலும்"
**நான், என்றதில்** என்ற அகங்காரத்திலும்தான் இவைகள்
பற்றி நிற்க முடியும். அவைகள் எம்மை விட்டு "வெளியேறி பஸ்பமாகி"
"பல நூறு வருஷங்கள்" ஆகிவிட்டன!

"யாம் இந்த தாவத்தை "**பேய்போல்**" நடக்கச் செய்வோம்"!
"யாம் இந்த தாவத்தை "**பிணம் போல்**" கிடக்கச் செய்வோம்"!
"இப்படி தாவத்தால் மறந்தவனை, நடை உடை பாவனையில் இறந்தவனை"
எந்த வாக்கிலும் கட்டுப்படாதவனை, ஏதேதோ வார்த்தைகளைச் சொல்லி
மாயாஜாலம் செய்திடப் போறாயோ? அந்த அவித்தையோ அவைகளை ஆட்டி
வைக்கின்ற மாயையோ எம்மை விட்டு பலகாலம் ஆகிவிட்டது! சரி
சரி இவைகளையெல்லாம் உன்னிடம் பேசி பயன் என்ன?

இந்த தாவத்தின் பிராப்தம் இந்த மண்ணுவான மரக்கட்டை
யையும் அதனுள் ஓர் பொம்மையையும் சுமக்க வேண்டிய "**விதி**"
இருக்கிறது! அதை யாம் ஆனந்தமாக செய்து முடிக்கிறோம் என சொல்லிக்
கொண்டே ஜடபரதன் அப்பல்லக்கை சுமக்க முயன்றான்!

குறிப்பு:— பேய்க்கும் பிணத்திற்கும் "**உணர்ச்சி**" இல்லை
ஆனால் "**உணர்வு**" உண்டு! எப்படியென்றால்?

1. பேய்க்கு உடல் உலக உறவு "உணர்ச்சிகள்" இல்லவே இல்லை, ஆனால்
நாம் செய்த பாபம் இந்த வடிவம், இனி இப்பாவத்தை செய்ய லாகாது என்ற
"ஓர் உணர்வு உண்டு"
2. "பிணத்திற்கும்" உடல் உலக உறவு உணர்ச்சிகள் இல்லவே இல்லை! ஆனால்
"சகஜ சமாதி" கூடி இருப்பவன் உயிர் இருந்தும் பிணம் தானே? அங்கு
எந்த உணர்ச்சிகளும் இராது! ஆனால் "**மெய்யுணர்வு**"!
ஒன்று மட்டும் உண்டு!



உ



மெய்யுணர்வு பெற்று ஸத்யமாகவே பிரகாசிக்கும் எம் செல்வ மைந்தனே!

ஸத் ஸித் ஆனந்தா!

இவ்வாசகங்களை ஓர் பதுமையாகவே பல்லக்கின் உள் இருந்தே "உணர்ச்சியற்ற கட்டையாய்" கேட்டுக் கொண்டிருந்த அந்த ரகுகணன் என்ற மன்னவன் மேலேயிருந்து டாலெனக் கீழே குதித்து ஓர் தண்டம் (கம்பு) எப்படி நிலையில்லாமல் சாயுமோ அதே நிலையில் அந்த ரகுகணன் ஸ்ரீ ஜடபரதனின் திருவடிகளில் வீழ்ந்து அத்திருவடிகளை கெட்டியாகப் பற்றிக்கொண்டு "அனலில் இட்ட புழுப்போல்" துடிதுடித்துக் கதறி கதறி அழுது புலம்பி இவ்வாறு முறையிடுகிறான். (தம் கண்ணீரால் அத்திருவடியை அலம்பி சுத்திகரித்தான். இவன் அழுது முறையிட்டதால் உள்ளம் தூய்மையான ஆலயம் ஆனது! அவன் அழுத கண்ணீர் ஸ்ரீ ஸத்குரு காணிக்கையாகி விட்டது!)

ஹே பிரபோ! ஹே தயாநிதி! ஹே தயா ஸாகரா! ஹே ஸத்குரு வார்யா! ஹே க்ருபா சமுத்ரமே! ஹே ஆனந்த ஸாகரமே! ஹே பிரம்மானந்த வாரிதியே! ஹே காலாதீதமானவனே! எமக்காகவே பரத்திலிருந்து இறங்கி வந்த அண்ணலே ஸத்குருதேவா!

(குறிப்பு:— இந்த ரகுகணன் தம் சபையில் பற்பல மஹான்களை அன்புடன் வரவேற்று அவர்களிடம் "தத்வ சாஸ்திரபாடம்" கேட்டு வந்ததையால் ஸ்ரீ கபிலரது பெருமையை கேள்விப்பட்டு அந்த ஸ்ரீ கபில மகரிஷியை தரிசிக்கக் கிளம்பியவன். ஆகவே தான் இவனுக்கு இப்பேறு கிடைத்தது) இந்த திக்கற்ற தீனனை ரட்சியும்! எம் ஐயனே! மஹா அபராதியான எம்மை க்ஷமியுங்கள்! அஞ்ஞான குருடனான எமக்கு அறிவுக் கண்ணை திறந்து வையுங்கள்! கருணையில்லா இக் கசடனுக்கு கருணை காட்டுங்கள்! நீதி, நெறி, நேர்மை தெரியாத இந்த நீசனின் மீது இரக்கம் கொள்ளுங்கள்! ஹே பிரபோ இவ் வெளியேனை ரட்சித்து அருள்பாலியுங்கள்! மஹா அபராதியான எம் குற்றத்தை மன்னித்தேன் என ஒருவார்த்தை சொல்லுங்கள்! தாங்கள் திருவாக்கிலிருந்து "மன்னித்தோம்" என்ற ஒருவார்த்தை வரும்பரியந்தம் தாங்கள் திருவடியை விடமாட்டோம் எம் ஐயனே! என ஸ்ரீ ஜடபரதன் திருவடியைப் பிடித்துக் கொண்டு கதறி கதறி மன்றாடுகிறான் அந்த ரகுகணன்.



உ

ஓம் பாகவதோத்தமனும், உத்தமோத்தமனும்
ஆனவம் பச்சிளம் பாலகா! ஸத்சித் ஆனந்தா!

ஜடபரதன் வாக்கியம்!

அந்த அரசனை ரகுகணன் முறையீட்டை கேட்ட ஜடபரதன் சிரித்துக்கொண்டே ஹே அரசே! எந்த குற்றமும் செய்ய வில்லையே அப்படி இருக்க இங்கு மன்னிப்பு என்ற வார்த்தைக்கு இடமே இல்லை! அனைத்து உடல் உலகங்களும் அவரவர் பிராப்தியில் விதி என்னும் அரசாட்சியில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அப்படி இருக்க "குற்றம் குறை என்பதேது" அனைத்து ஜீவர்களும் பதுமைகளே! அவரவர் புண்ணிய பாபத்திற்கேற்ப அனைத்தும் விதாச்சாரப்படி ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. "மனதின் வசப்பட்ட இந்தமனிதன்மட்டும்" குறுதிசயங்களில் சிக்கி தம் கற்பனையை விரித்துக்கொண்டு, அனைத்து "புண்ணியபாப கணக்கைபோட்டு" ராகத்துவேஷாதி குணங்களுக்கு (விருப்பு வெறுப்புக்கு) ஆட்பட்டு பிரித்துக்கொண்டு நான் நல்லவன் இவன் கெட்டவன் என்ற கணக்கும் போட்டுக்கொள்கிறான். இந்த "மனம்படைத்தமனிதன்" நல்லதும் கெட்டதும் ஓர் நாணயத்தின் இருபக்கங்களாகும். நன்கு கவனி, இருபக்கங்கள் இல்லாமல் ஓர் நாணயம் இருக்கமுடியுமா? அதேபோல் நன்மையும் தீமையும் இன்பதுன்பமாகும்! இவை புண்ணியபாப செயற்கையாகும். ஓர்மனிதன் இந்த நன்மை தீமையாகிய இன்பதுன்பத்தை அடியோடு மறந்து **ஸத்யத்திலும், தர்மத்திலும்** நின்றால் அனைத்தும் **நலமாகவும் சுகமாகவும்** முடியும்!

இந்த விபரமான உண்மை எவருக்கும் தோற்றுவதில்லை காரணம் "விஷய (விஷம்) ஆசைகளும்" அதிலிருந்து விளையும் "பொறாமையான கோப குணதோஷங்களாகும்." இவ்விரண்டையும் விட்டாலே போதும் அனைத்து குணதோஷங்களும் ஒழிந்து போகும்!

உ



உலகமோ அதன் சிருஷ்டிகளோ அனைத்தும் இறைவனுடையதே! அவைகளை தொட்டு அனுபவிக்கும் இந்த மனிதன் அனைத்தும் இறைவனுடையதே ஆனால் அவை அனைத்தும் நமக்கு விளையாட கொடுத்தவைகளே தவிர, உரிமை கொண்டாட கொடுக்கவில்லை என மெய் அறிவினால் உணர்ந்து **"எல்லாம் நீ"** (எல்லாம் உனதே) என விளையாண்டாயானால் அங்கு விருப்பு வெறுப்பு தோன்றுவதில்லை இதை அவனுடையதேதான அவன் நாமாவைச் சொல்லி விளையாண்டால் **"நம் வாக்கு ஸத்யமாகிறது"** நாம் எதைச் செய்தாலும் **"தர்மம் செய்ததாகும்"**

இப்படி வாழத் தெரியாமல் சொந்த, பந்த, பாசப் பற்றுடன் சேமிப் போடும் விளையாடும் போது அது உலகமாகவும் அதன் நரகமாகவும் அது புண்ணிய பாப வினையினால் பிறப்பும் இறப்பும் உண்டாகி விடுகிறது "வாக்கு தெய்வீகமாக வந்தால் அது ஸத்யம் பேசும் நிலையாகிறது". "செய்கையும் தெய்வீகமாக இருந்தால் அது தர்மம் செய்த நிலையாகும்! நீயும் உன்னை தெய்வீக செய்கை உடையவனாகவும்; தெய்வ வாக்கு மூலமாக ஸத்யம் பேசும் நிலையிலும் உன்னை ஆக்கிக் கொண்டால் அதுவே உன் சாதனையாகும் அதுவே உன் மோட்ச வீட்டின் திறவுகோலாகும்!

மேலும் குழந்தாய்!

ரகுணை! இதுகால பரியந்தம் நடந்த அனைத்தையும் கெட்ட சொப்பனமாகவோ; நீ காளி உமிழ்ந்த எச்சிலாகவோ எண்ணி உடனே மறந்து விடு! வரும் காலத்தையும் உன் மனமைய கற்பனையின்படி விதிக்க எண்ணாதே. தற்காலிகமாக நடைபெறுவதையும் இது இறைவன் செயலே என்றும், இது இறைவன் பொருளே என்றும், அனைத்தும் இறைவனே என்றும் மாற்றி பார்க்கப் பழகிக் கொள்வாயாக நலம் பெறுவாய். சுகம் பெறுவாய் என ஆசி கூறி விட்டு தன் வழியே செல்லத் துவங்கினான் ஜடபரதன்









## (11) கேள்வி பதில் (பதினோராவது அத்யாயம்)



உடனே ரகுகுணனும் பிரபோ! தயாநிதி!
தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள் என யாம் தெரிந்து கொள்ளலாமா?

பரதன்:- எம்மைப் பற்றி தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறாய்? உன்னைப் பற்றி நீ தெரிந்து கொண்டாயானாலும் ஆனந்தம் அடைவாய்! முக்தி பெறுவாய்!

அரசன்:- எம்பெருமானே! யாம் தேடிச் செல்லும் கபிலமஹரிஷியே தாங்கள்தானே? எம் சந்தேகம் தீர இரண்டொரு கேள்விக்கு பதில் கூறி விட்டுச் செல்லலாமே?

பரதன்:- யாம் கபிலருமல்ல! மஹரிஷியும் அல்ல! பிராப்தகர்மமான இந்த தேகத்தை இது விழும் பரியந்தம் சுமந்து திரியும் ஓர் பரதேசி!

அரசன்:- எம் பிரபுவே! இந்த பல்லக்கை நீர் ஒருவரே சுமந்து வந்ததாக அறிகிறேன்? அதனால் சுமை உமக்கு கடினமானதாக தோன்றவில்லையா?

பரதன்:- சுமையா? எமக்கா? மண்ணுக்கு மரம் பாரமா? அம்மரத்திற்கு கிளைகள் பாரமா? அக்கிளைகளுக்கு இலை, பூ, பிஞ்சு, காய், கனி இவைகள் பாரமா? நன்றாக யோசித்துப் பதில் சொல்?

அரசன்:- சற்று ஆழ்ந்து சிந்தித்தால் இல்லைதான் ஸ்வாமி! ஆனால் அது ஜடசொரூபம் அசையாதது ஆகவே அவை ஒன்றுக்கொன்று பாரம் எனச் சொல்ல முடியாதுதான்! ஆனால் மனிதன் அப்படி இல்லையே?

பரதன்:- அப்படி இல்லையென எதை ஆதாரமாகச் சொல்கிறாய்? அதற்கு உதாரணம் தரமுடியுமா?

அரசன்:- உதாரணமா? ஏன் இல்லை! அது நடமாடுகிறதா? ஜீவன் இருக்கிறதா? அது வளர்ச்சி என்ற ஓர் உயிர்தானே இருக்கிறது?

பரதன்:- மரம் செடி கொடிகளுக்கும் உயிர் இருக்கிறது பிராணன் இருக்கிறது அதுவும் சுவாசம் விடுகிறது சுவாசம் எடுக்கிறது! அதற்கு ஏன் ஜீவன் இல்லை?





உ

அரசன்:— அது புரிகிறது ஸ்வாமி அதற்கு வளர்ச்சி ஒன்றைத் தவிர வேறு ஒன்றும் இல்லையே! ஆனால் மனிதனுக்கே "பகுத்து அறியும் அறிவு" இருக்கிறதே! அது நம்மைப் போல் பேசுகிறதா? எதையும் கிரஹிக்கிறதா? நமக்கு உள்ள குணாதிசயங்கள் அதற்கு உண்டா? நல்லது கெட்டது அதற்குத் தெரியுமா? மரத்தையும் நம்மையும் ஒப்பிட்டுச் சொன்னால் அது பொருந்துமா ஸ்வாமி?

பரதன்:— பேஷ் பேஷ் நன்றாகச் சொன்னாய் சில உதாரணங்களை. அது வாஸ்தவம் தான். எதை பகுத்தறிய வேண்டுமோ அதை பகுத்து அறியாமல் (நான் யார்? உடல் யார்? உலகம் ஏது? என்பதை பகுத்தறியாமல்) உடலையும் உலகத்தையும் "பந்தபாச உணர்ச்சியுடன்" அவைகளை பகுத்தறிவது தான் பகுத்தறிவா? அதனால் வந்தது தானே இப்பிறவியின் கேடு? நன்மை தீமைகளை பிரித்து அறிந்து அவைகளை தள்ளாமல் உன் வாழ்க்கைக்கே அவைகளை சாதனையாக எடுத்துக் கொண்டது தானே கர்ம குணதோஷங்கள். அவைகளை தள்ளு பின் உன் ஆத்ம விசாரணையால் அவைகளைத் தெளிவாக அறிவாய். இப்போது "பாரம்" என ஒன்றை கேட்டாயே அதை எப்படி உணர்கிறாய்? எதனால் எதற்கும் பாரம்? அதன் விபரத்தைக் கொஞ்சம் கேட்பாப் போம்?

அரசன்: மகானே! கடின உழைப்பால் உடல் பாதிப்படைகிறது. யாமும் போர் புரியும் காலங்களில் அதிக தளர்ச்சி அடைந்துவிடுகிறோம். ஓர் பாரத்தை தூக்கும் போதும் அதிக சிரமப்படுகிறோம். அந்த சிரமம் இல்லை என்று சொல்கிறீர்களா? இது பாரம் இல்லையா?

பரதன்:— கடகடவென சிரித்தான் பின் சொன்னான்:— இது உன் மனதின் கோளாறு! "நான், என்னால், என்னுடையது" என நீயே இல்லாத ஒன்றை இருப்பது போல் பாவனை செய்து ஜடமாகிய உடலை நானாக பாவிப்பதால் வந்த குற்றம். நாம் உடலும் அல்ல, உலகம் எம்முடையதும் அல்ல என்ற மெய் உணர்வால் தான் இந்த களைப்பு, பாரம், கஷ்டம் இவைகளை ஒழிக்க முடியும்.

அரசன்:— என்ன நான் உடல் உலகை நான் இல்லை என்றும், என்னுடையது இல்லை என தள்ளினாலும், அந்த "மனோ அவஸ்தையை" இல்லாமல் செய்ய முடியுமா? ஆகவே பாரம் பாரம் தான், களைப்பு களைப்பு தான்!



பரதன்:— குழந்தாய்! சரீராதி இன்ப துன்பங்களை, (அபிமானத்தால் வரும் இன்ப துன்பங்களை) "நான் என்னுடையது" என ஆத்மாவின் மேல் ஏன் வீணே சுமத்தி அவஸ்தைப் படுகிறாய்? சரீர அபிமான அஹங்காரங்களைத் தள்ளாமல் இதற்கு தீர்வு காண முடியாது! "ஆத்மா அசங்கன்" அசலன் "தூலம் வினையில் அசையும் ஓர் கருவி" வினை முடிந்தால் தூலம் முடிந்து விடும். ஆத்மா வந்ததும் இல்லை! அது போவதும் இல்லை! அது ஸத்திய சொரூபம்!

அரசன்:— பாரம் இல்லை. கஷ்டம் இல்லை. சிரமம் இல்லை, உடல் உபாதையில்லையென்பதை உதாரணத்துடன் விளக்க முடியுமா?

பரதன்:— ஓ வேஷாக! இதை நன்றாக கவனி! நீ உன் கண்ணில் காணும் உலகமும், உலக வஸ்துக்களும், உயிரினங்களின் தூலங்களும், தாவர ஜங்கமங்களும், "**மண்ணுக்கு**" அன்னியமில்லை என்பதை ஒப்புக் கொள்கிறாயா? அல்லது அது வேறு என்ற உண்டு என்ற சந்தேகம் உனக்கு உண்டாகிறதா?

அரசன்:— முழுமையாக சிந்தித்தேன். ஆமாம் ஸ்வாமி! எந்த நாமரூபங்களும் மண்ணுக்கு அன்னியமில்லைதான்.

பரதன்:— இன்னும் வார்த்தை கவனி. "பிருதிவியாகிய பூமி. பிருதிவியாகிய பூமியின் மேல் பிருதிவியாகிய பாதம். பிருதிவியாகிய பாதத்தின் மேல் பிருதிவியாகிய கணுக்கால். பிருதிவியாகிய கணுக்கால்மேல் பிருதிவியாகிய முழங்கால். பிருதிவியாகிய முழங்கால்மேல் பிருதிவியாகிய தொடை. பிருதிவியாகிய தொடையின் மேல் பிருதிவியாகிய இடுப்பு; பிருதிவியாகிய இடுப்பின் மேல் பிருதிவியாகிய வயிறு. பிருதிவியாகிய வயிற்றின் மேல் பிருதிவியாகிய மார்பு; பிருதிவியாகிய மார்பின் மேல் பிருதிவியாகிய தோள். பிருதிவியாகிய தோளின் மேல் பிருதிவியாகிய தண்டயக்கம்பு; பிருதிவியாகிய தண்டயக்கம்பின் மேல் பிருதிவிமயமான பல்லக்கு. பிருதிவியாகிய பல்லக்கினுள் பிருதிவிமயமான **ரகுகணன் என்ற பொம்மை!**
மண்ணுக்கு மண் பாரமாகுமா? அங்கு எண்ணம் உண்டா? சொல் உண்டா? செயல்பாடுதான் உண்டா? இல்லையே.





ஏ குழந்தையான அரசே!

"இந்தவிதம் மண்பானைகளை" ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைப்பது போல் இந்த "சரீராதி கருவிகளும், பல்வகைகளும், அதனுள் ஓர் புதுமையும், "**மண்மயமாக**" அடுக்கி வைத்திருக்க, **எது எதைத்** தாங்குகிறது? எது எதற்கு பாரம்? எது எதுக்கு சிரமம் கொடுக்கிறது? எது எதை உபாதைஎன சொல்கிறது? நன்றாக கவனி! இங்கு ஒன்றை ஒன்று தாங்குவதோ, ஒன்றில் ஒன்றுக்கு பாரமோ, ஒன்றில் ஒன்றுக்கு சிரமமோ, ஒன்றில் ஒன்றுக்கு உபாதையோ **முக்காலங்களிலும்** இல்லவே இல்லை! ஏ அரசே!

இங்கு பாரம், தாங்குதல், சிரமம், உபாதை, கஷ்டம் எல்லாம் உன் "**மனோமய பிராந்தி**" (மயக்கமே)! இது **மனதின்** லீலையேயன்றி உண்மையில் அப்படி ஒரு பயப்பிராந்தி இல்லவே இல்லை!

"மனம் என்பது ஓர் குரங்கு" குரங்கானது ஒரு வினாடியும் சும்மா இராது. சர்வசதா ஆடிக்கொண்டும் பொருள்களை துவம்சம் செய்து கொண்டும் தான் இருக்கும். அதைப்போல் இந்த மனக்குரங்கும், "சூட்சுமமான எண்ணங்களைப் பற்றியே ஆடும்." அதையே வாக்காகவும் வம்பும்; அதையே செயலாகச் செய்து கர்மாவைப் பெருக்கும். இந்த கர்மாவே பிறவி வித்தாகும். யாம் இங்கு பிராந்தி (மயக்கம்) எனசொன்னது "நான் என்றல் என்னுடையது" என்ற "குணதோஷ வாஸனா பிராந்தியாகும்." இந்த வாஸனாமயமான பிராந்தியை "**மதுவை**" கொடுக்காமல் இருந்தால் குரங்கின் ஆட்டம் குறைந்து குறைந்து அவஸ்யம் நின்று விடும். குரங்கை அடக்குவதற்கு எந்த ஆயுதமோ சாதனைகளோ தேவை இல்லை. அதற்கு. அந்த குரங்கு அடங்கவும் செய்யாது. மன குரங்கை அடக்க ஒரே வழி, காய்ந்து போன குச்சியாகிய "ஓர் கம்பு" (குச்சி) போதுமானது. காய்ந்து போன (பட்ட) கம்பு என்பது "ஸத்குருதேவனாகும்"! ஸத்குரு வாக்கே "**அமிர்தம்**" என ஆகும். மனோமய பிராந்தியை கொடுக்காமல் ஸ்ரீகுரு தேவரின் அமுத வாக்கும் "அவர் சொல்லிய தர்மமும்" இருந்தால் மனம் ஆடாது! மனம் மறைந்ததாகும்!



உ

44

குழந்தாய்!

ரகுகுறு! ஆத்ம ஸாதனையென்பதே "லௌகீக குணதோஷங்களை விடுவதே சாதனையாகும்!"

லௌகீக குணதோஷங்களாகிய உடல் உலக "**உணர்ச்சிகளை**" முழுமையாக விட்டுவிட்டு தெய்வீக **உணர்வுகளை** பெற்று அமைதியும் சாந்தியும் பெறுவதே சாதனையாகும்!

"அனுப்பிரமாணமாவது" உடல் உலக குணதோஷ உணர்ச்சிகள் இருந்தாலும், சாதகன் பக்குவம் அடையவில்லை யென்பது திண்ணம். அவன் அருளால் சாதனை செய்து தெய்வீக உணர்வுகளைப் பெற்று விட்டால் அப்புறம் சாதனை தேவை இல்லை. அந்த தெய்வீக உணர்வானது தானே மேல் நோக்கிச் சென்று பரவுணர்வை அடைந்து "ஆத்மாதாம்" என்ற ஆத்ம ஞானம் பெற்று அதுவாகி விடுவான்.

"இதற்கு உதாரணம் என்னவென்றால்?"

மண்ணும் ஜலமும் முறையே பாபபுண்ணிய கர்மா சம்பந்தமாகும். அவை பிறவியின் விந்து ஆகும். அவை இரண்டுமே லௌகீக குணதோஷ சம்பந்தம் உள்ளதாகும். அவை பிறவிக்காக "கீழ் நோக்கு இழுப்பவையாகும்". இந்த மண்ணையும் ஜலத்தையும் எத்தனை உயரத்தில் இருந்து போட்டாலும் அவை மேல் நோக்கி செல்வதில்லை. அவை கீழ் நோக்கியே இழுக்கப்படும். ஆகவே தான் லௌகீக உடல் உலக உணர்ச்சிகளை நம் சாதனையின் மூலம் கீழே செல்லாமல் தடுத்தே ஆகவேண்டும்!

அக்கினி தெய்வ அம்சம் பெற்றதாகும். எரியும் அக்கினியை எத்தனை தலைகீழாக பிடித்தாலும் அவை மேல் நோக்கியே செல்லுமேயல்லாது கீழ் நோக்கிச் செல்வதில்லை. ஆகவே ஆரம்ப சாதனையில் "ரஜோ, தமோ" குணதோஷங்களை அவஸ்யம் விட்டே ஆகவேண்டும். ரஜோ, தமோ, குணதோஷங்கள் உடல் உலக உணர்ச்சிகள் சம்பந்தம் கொண்டதாகும். ஸத்வ குணம் ஒன்றுதான் தெய்வ உணர்வு சம்பந்தம் கொண்டதாகும்.





ஆகவே அரசே! நம் எண்ணங்களை சிதற விடாது
ஸத்வகுண சொரூபமாகவே வைக்க வேண்டும். அது
காலக்ரமத்தில் அந்த ஸத்வகுணமும் தானே மாறி
நிர்க்குணத்தில் மாறிவிடும். எண்ணத்தின் வடிவே
குணமாக இருப்பதால் குணங்கள் ரஜோ தமோ குண
சம்பந்த "நான், என்றல், என்னுடையது" அற்றிருந்தால்
ஸத்வ குணம் தானே நிலவும் அதுவே நிர்க்குணமா
கும். அதுவே முக்திக்கு வழியாகும்.

அரசன்:- ஓ மஹாத்மா! எண்ணம் அத்தனை வலு உடையதா?
அதனால்தான் ஸங்கல்பமே உலகம் என்றும் ஸங்கல்ப
ரஹிதமே மோக்ஷம் என்றும் சொன்னார்கள் போலும்?
ஓ எம்ஐயனே அந்த எண்ணம் எப்படி பலிதமாகிறதென்று
உதாரணத்துடன் விளக்க முடியுமா?

பரதன்:- ஓ முடியுமே! சற்று கவனமாக கேள். ஒருவன் ஓர் பாலைவ
னத்தில் சென்று கொண்டிருந்தான். கடும் வெய்யில் அதற்கு
பரிகாரத்திற்காக ஓர் நிழலை தேடினான். தெய்வாதீனமாக
ஓர் மரத்தைக் கண்டான். அதன் கீழ் சற்று அமர்ந்தான்.
தெய்வாதீனமாக காற்று குளுகுளுவென வந்தது போலும்! அவன்
அந்த குளுமையான காற்றை நன்கு அனுபவித்தான். இங்கு
"அவன் தன் ஸங்கல்பத்தை பலிக்கலானான்"!

எப்படியென்றால்:- இறைவா இங்கு காற்று குளுமையாக வருகிறது.
இங்கேயே வடை பாயாசத்தோடு சாப்பாடு கிடைத்தால் அழகாக சாப்பிட்
டுவிட்டு ஓய்வெடுக்கலாமே என எண்ணினான். "அவன் எண்ணத்தின்படி
யே சாப்பாடு வந்தது". நன்கு சாப்பிட்டு முடித்தான். சாப்பிட்டமயக்
கம் தூக்கம் வந்தது போலும்! மேலும் ஓர் எண்ணத்தினால் இங்கு கட்டில்
ஒன்று இருந்தால் படுத்து சற்று தூங்கலாமே என எண்ணினான்.
"அவன் எண்ணத்தின்படியே கட்டில் வந்தது"! மேலும் ஓர் எண்ணத்தினால்
"ஓர் மெத்தை வந்தால் நலமாக இருக்குமே என எண்ணினான்.
அவன் எண்ணத்தின்படியே மெத்தை வந்தது"! அதில் அமர்ந்து கொண்டான்
மேலும் ஓர் எண்ணத்தினால் இரண்டு தலையணை இருந்தால் படுத்துக்
கொள்ளலாமே என எண்ணினான். அவன் எண்ணத்தின்படியே
இரண்டு தலையணைகள் வந்தன! அதில் படுத்துக் கொண்டான்.



உ

மேலும் ஓர் எண்ணத்திறல் இங்கே இரண்டு அழகிய பெண்கள் இருந்தால் நம் கைகால்களை பிடித்துவிட்டு சுகம் கொடுப்பார்களே என எண்ணினான். "அவன் எண்ணத்தின்படியே இரண்டு இளம்பெண்கள் வந்தனர்.

"**அவனுக்கு ஆனந்தம்**" தாளவில்லை! இன்பமான சொர்க்கத்தின் உச்சிக்கே போய் விட்டான். இந்நிலை காலமும் "**இன்ப**" நுகர்ச்சியிலேயே சென்று அனுபவித்த அந்த கன மனமானது, "**துன்ப**" நுகர்ச்சியையும் கற்பனைபண்ண ஆரம்பித்தது!

("மனம் என்றால் இன்பம் துன்பம் இந்த இரண்டு எண்ணங்களை மாறிமாறி எண்ணும் இயல்புடையதாகும்")

இப்போது அந்த இன்பத்தின் உச்சிக்கு சென்றவனுக்கு "**ஓர் பயம்**" உண்டாயிற்று! எப்படியென்றால் "இங்கு நாம் கேட்பதெல்லாம் அப்படியே கிடைக்கிறது" இது ஏதோ ஓர் பூதத்தின் வேலையாயிருக்குமோ என்றெண்ணியவன், மேலும் ஓர் எண்ணத்திறல், "இங்கே ஓர் புலி வந்தால் நம்மை அடித்து சாப்பிட்டுவிடுமே என எண்ணினான்" "அவன் எண்ணத்தின்படியே ஓர் புலி வந்தது! அவனை அடித்துச் சாப்பிட்டு விட்டது!!

குழந்தாய்! ஸங்கல்பமான எண்ண விளைவுகளை உணர்ந்தாயா?? இதுவே இன்றைய உலகமாந்தரின்

"**எண்ணமும் வாழ்க்கையும்!**

இன்றைய அவசர உலகில் என்ன எண்ணுகிறோம்? என்ன பேசுகிறோம்? என்ன செய்கிறோம்? இதன் விளைவு என்ன என்பதை இன்றையவர்கள் கருதுவதேயில்லை. அதன் முடிவு என்ன ஆகிறதென்றால் இன்றைய உலகமும் வாழ்க்கையும் "**பயமே பலிதம்**" என ஆகிவிட்டது. ஆகவே ஸத்ய ஸங்கல்பத்தை அடைவது இறை உணர்வோடு கூடிய எண்ணங்களை எண்ணினால் அந்த எண்ணம் நன்மையை கொடுக்கும் சுதானந்தம் பெருகும்.



# 12 உபகதைகள்! (47)

(பன்னிரண்டாவது அத்யாயம்)

குழந்தாய்! ரகுணு! ஸத்ய ஸங்கல்ப வடிவமான எண்ணங்களின் நிலையை உணர்த்தும் ஓர் நிகழ்ச்சியை சித்தரிக்கும் ஓர் கதையையும் உன் உள் உணர்வுடன் கேட்டு அதுவான ஆகுவாயாக! உயர்ந்த எண்ணங்களின் வடிவம் எத்தகையது என்பதையும் உணர்வாயாக!

ஓர் மஹான் வேத சாஸ்திர புராண இதிகாசம் "கற்றுணர்ந்தவர்" தாம் கற்றுணர்ந்த அனுபவத்தை ஓர் உண்மையான பக்குவ ஆன்மாவுக்கு உணர்த்த வேண்டுமென்று உலகமெங்கும் தேடி அலைந்தாராம். அவர் "தத்துவார்த்த ராமாயணத்தை" தத்துவமாகவே உணர்ந்து அனுபவித்து அந்த பேரானந்தத்தை தன்னையொத்த ஓர் பக்குவ ஆன்மாவை தேடி அவருக்கு புகட்டிவிட்டாலே அவர் கடமை முடிந்து விடுமாம்? இவர் பல வருஷங்களாக அப்படி ஓர் பக்குவ ஆன்மாவை தேடி அலைகிறார்!

இவரைப் போலவே ஓர் பக்குவ ஆன்மா "உண்மையின் வேட்கையோடு" தத்துவார்த்த ராமாயணத்தை உண்மையின் உணர்வோடு தமக்கு போதிக்கும் "ஓர் உத்தம குருவை தேடி" அலைகிறார். இவரும் பல வருஷங்களாக உலகமெங்கும் அந்த உத்தம குருவை தேடி அலைகிறார்.

ஒழுக்கத்தின் வித்தகனே! ஞானப்பிழம்பே! ஆனந்த சாகரனே! எம் குழந்தாய்! ஸத்சித் ஆனந்தா! எம்முடைய ரதன் ரகுணனுக்கு அன்போடு போதிக்கும் இந்த சிறிய உதாரணத்தை பெரிய பொக்கிஷத்தை நீ கவனமுடன் கேட்பாயாக!

"இவ்விருவரும் உதாரபுருஷர்களாகும்"

**ஒருவர் போதிப்பவர்! ஒருவர் போதனையை ஏற்பவர்!**

அந்த பரம்பொருள் இவ்விருவர் கருத்தையும் உணர்ந்து அதற்குத் தக்க காலத்தையும் ஓர் உத்தமமான இடத்தையும் அது தேடிக் கொண்டிருந்தது போலும்? எப்படியோ அந்த ஒன்றின் கருணையினால் அவ்விருவரும் ஓர் இடத்தில் சந்தித்தனர்.



உ



இங்கே "**போதிப்பவரும்**" அதை அங்கே "**சாதிப்பவரும்**" சந்தித்த இடமோ ஓர் பாலை நிலத்தில் கடும் வெய்யிலில் ஓர் "**மூன்**" "**மரத்தின்**" (அடி பருத்த மரம்) அடியில் சந்திக்கிறார்கள். ஆனால் ஒருவரை ஒருவர் காணாமல் இருவரும் ஒருவர் அப்பக்கமும் ஒருவர் இப்பக்கமும் அமர்ந்து அதிகம் சோர்ந்த நிலையில் "இருவரும் தனித்தனியாக புலம்புகின்றனர்"

"அம் மூன்மரமோ பட்டுபோய் கருகிப்போன நிலையில் உள்ளது"

போதிப்பவர் :- ஹே பரம் பொருளே அடியோமும் பற்பல வருடமாக ஓர் உத்தம மாணவனை தேடிக்கொண்டிருக்கிறேமே. இது நீ அறியாததா? எம் மீது சற்று கருணை காட்டலாகாதா? எம்மிடம் இருப்பதை ஓர் உத்தம சீடனிடம் கொடுத்து விட்டால் எம் கடன் தீர்ந்து விடுமே! ஓ எம் ஐயனே சற்று கருணை காட்டுவாயாக.

சாதிப்பவர் :- ஹே பரம் பொருளே! தந்து வார்த்த ராமாயணத்தை உணர்வுபூர்வமாக உணர்ந்தும் ஓர் உத்தம குருதேவரை எத்தனை வருடமாக தேடி அலைகிறேம். இது நீ அறியாததா? போதும் ஐயனே போதும், ஓர் உத்தம குரு அதை உணர்த்த யாம் உணர்வுபூர்வமாக உணர்ந்து கொண்டால் அது போதும் ஐயனே! யாம் பிறந்த பிறவிப் பயனை எய்திவிடுவோம். ஓ எம் ஐயனே சற்று கருணை காட்டுவாயாக!

என இவ்விருவரும் புலம்பும் போது யாரோ மரத்திற்கு அந்தபக்கம் இருக்கிறாரே அவர் யார்? என இவர் பார்க்க, யாரோ மரத்திற்கு அந்தப்பக்கம் இருக்கிறாரே அவர் யார்? என அவர் பார்க்க, இருவரும் பரம்பொருள் கருணையால் சந்திக்கிறார்கள். சந்திக்கும் அவ்விருவர் "**மனநிலையும்**" இங்கு வரியடியில் எழுத முடியவில்லை!

"அவரை இவர் தம் குருவாக ஏற்றுக்கொண்டார்!"

"இவரை அவர் தம் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார்!!"

இருவருடைய மனமும் உருகி, மெய்யும் உருகி, ஆனந்தம் பெருகி, அதில் வரும் "இன்ப ஊற்றில்" கண்ணீராகிய "ஜீவ நதியில்" அப்பாலை நிலம் சோலையாக மாறியது. அம்...



என ஆகி விட்டதும் அந்த இடம் ஓர் நந்தவன
மாகி குளிர் சோலையென ஆகி அந்த சோலையில்
குயில்கள் பாடவும், மயில்கள் ஆடவும், மான்கள்
துள்ளி விளையாடவும், முயல்கள் குதித்துக் கூத்
தாடவும், மற்றும் இனிய பறவை இனங்கள் தம்
காறமிர்தந்தால் மகிழ்ந்து இன்னிசை பாடவும்,
அங்கு கோர இனங்களோ, கோர குணங்களோ, இவைகளை உடைய
எந்த ஜீவர்களும் இல்லவே இல்லையெனலாம்.

## "இவர் என்ன சொன்னார்?"

## "அவர் என்ன கேட்டார்?"

அது பரம ரகஸ்யம். ஒரே பேரானந்தமயம், அந்த பேரின்ப வெள்ளத்தில் இருவருமே மூழ்கி கரைந்து, கலந்துமயமானார்கள். குழந்தாய் (ஸத்ஸித் ஆனந்தா) ரகுகுணா! எனச் சொல்லி நம் ஜடபரதன் தம் ஞான உரையை முடித்துக் கொண்டு முடிவில்

## ஒன்று செய்! நன்று செய்! அன்றே செய்!!!

இதற்கு உன் சாதனை இதைச் செய்தாலே போதும் என்று மீண்டும் மட்டும் உரைத்தார்.

## நல்லதாகவே பார்! நல்லதாகவே கேள்! நன்மையாகவே பேசு!!!

குழந்தாய்! உலகம் என்றால் "குற்றம் குறைதான்." அதை மாற்றுவதே உன் சாதனை. அதாவது உன் பார்வையிலும், நீ கேட்கும் வார்த்தைகளிலும், தீமை குற்றம் குறை தென்தோற்றும். அதை யாம் சொன்ன நிலையில் நீ பழகி விட்டால் நீ பிறந்த பிறவிப் பயனை அடைவாய் அதுவே பிறவா நிலையாகிய "ஜீவன்முக்தி" என உரைத்த ஜடபரதன் ரகுகுணனுக்குள் ஆத்ம வித்தை ஊன்றி விட்டான். எம் குழந்தாய் ஸத்ஸித் ஆனந்தா! நம் குழந்தைகளுக்கு இதை ஸத்ஸங்கத்தில் உரைத்து வாயாக! யாம் அதுவே, நீயே அது, நாமம் அதுவே!!!

பாபா.



உ

உண்மையின் உணர்வாயும், கருணையின் வடிவாயும், அன்பின் சொரூபமாயும், எம் எண்ணத்தில் நிறைந்தவருயும் அமைந்த ஸத் ஸித் ஆனந்தா!

இந்த ஜடபரதனின் சரித்திரத்தை ஏன் இதனை தெளிவாகவும், கருத்துடனும் எழுதியிருக்கிறேன் என்றால் **அது எம் ஸ்வய அனுபவமாகும்!**

காரணம்

எம் ஸ்ரீ குருதேவருக்கு அவருடைய ஸ்ரீ குருதேவர் ஸ்ரீ ராமபிரானுக்கு ஸ்ரீ வஸிஷ்ட பிரான் அருளிய "ஸ்ரீ ஞானவாஸிஷ்டம்" எப்போது உனது கையில் கிடைக்கிறதோ அதை எப்போது உன் உணர்வுபூர்வமாக உணர்ந்து "ஸ்வய அனுபவம் பெறுகின்றாயோ", அப்போதுதான் உனக்கு ஆத்ம ஞானம் சாத்தியம் ஆகும் எனச் சொன்னார்களாம்.

அந்த ஞான வாஸிஷ்டத்தை அவராக ஐந்து வருஷம் தேடி அலைந்தார். பின் இந்த வைத்தியத்திடமும் இதன் அண்ணாவிடமும் சொல்லி நாங்கள் இருவரும் பல ஆலயங்களிலும் பல பெரிய பெரிய புராதன புஸ்தக கடைகளிலும் தேடிப்பார்த்தோம். அந்த முக்தி நூலாகிய ஞான வாஸிஷ்டம் கிடைக்கவில்லை. நாங்கள் இருவரும் பத்து வருஷமும் ஸ்ரீ குருதேவர் ஐந்து வருஷமும், ஆக பதினைந்து வருஷமும் தேடி கிடைக்காத ஸ்ரீ ஞான வாஸிஷ்டம், ஓர் வீட்டில் பழைய கந்தல் பேப்பர் வாங்கி அதை மிட்டாய் கடைக்கும் மளிகை கடைக்கும் போடும் நிமித்தம் அதை சரிபார்த்துக் கொண்டிருக்கும் போது அந்த "**குப்பையில்**" அந்த அரிய பொக்கிஷமாகிய ஸ்ரீ ஞான வாஸிஷ்டம் "இரண்டு பாகமும்" எந்த சேதாரமும் இன்றி ஆனால் "கைபட்டால் நொறுங்கும்" நிலையில் கிடைத்தது!

அந்த ஸ்ரீ ஞான வாஸிஷ்டம் ஸ்ரீ குருதேவருக்கு ஞான உணர்வை கொடுத்து "**அது**" ஆக்கி விட்டது. ஸ்ரீ குருதேவரும் அந்த நூலை இந்த வைத்தியத்திடம் கொடுத்து இதை படித்துப் பார் என்றார்கள். அதுவும் ஒரு வருஷம் நான்கு ஐந்து முறை வாசித்தது. ஸ்ரீ குருதேவர் என்ன உணர்ந்தாய் என்றார்? உணரும் நிலைக்கு அதில் ஒன்றும் தெரியவில்லை. ஆனாலும் தத்துவ விளக்கங்களும் அனேக சமஸ்கிருத வார்த்தைகளும் வருவதால் ஒன்றும் புரியவில்லை. ஆனால் நாலைந்து கதைகள் தான் இருக்கிறது கருத்துக்கள் இல்லையென்றது





உ

ஸ்ரீகுருதேவரும் சிரித்துக் கொண்டே **தத்வமோ**
**சமஸ்கிருத** பாஷைகளோ உனக்கு முக்கியம்
இல்லை. உனக்கு என வேண்டியது அதில் **ஒன்று**
தான் உண்டு. எம்மிடம் ஒன்றுமில்லை யென நினைக்
காதே. இம்முறை ஒருமுறை கடைசியாகப் பார் என்றார்.
அந்த வைத்தியம் அம்முறை உருகி அழுது வேண்டும் போது இரண்டாம்
பாகம் கைக்கு வந்தது. அதை விரிக்கும்போதே குருதேவா! இதற்கு
எது தேவையென உனக்குத் தான் தெரியும் இது ஓர் பொம்மை தானே
இதனிடம் உன் விளையாட்டை விளையாடினால் இது என்ன செய்ய முடியும்?
என உருகி அழுத வண்ணம் அந்நூலைப் பிரிக்கும் போது முதல் தர
மாக அந்த நூல் தானே விரிந்து எமக்குக் காட்டியது போல
"**கூடால் சகித்துவசன்**" கதை வந்தது. அதை
ஆறுமாதம் திரும்ப திரும்ப வாசித்தது. அந்த நூலை தேடவைக்க
இதால் முடியவில்லை! இதனுடைய பேரானந்தத்தை உணர்ந்து
ஸ்ரீகுருதேவர் "கூடாலை" கண்டு கொண்டாயா என்று அன்புருக
கேட்டார். அது ஆம் என்ற நிலையில் அவர் திருவடியில் சாஷ்டாங்க
மாக விழுந்து அழுது அவர் பாதத்தை கழுவியது. அவர் அன்பாக
அணைத்தூக்கி "கூடால் என அருக" என்றார் அதுதாங்கள் "ஆசி
என்றது." அந்த விஷயம் அத்துடன் முடிந்தது!

பின் ஒருசில வருஷம் கழிந்து ஸ்ரீமத் பாகவதம் ல பாகம்
கொண்டதை கொடுத்து ஏ திருவடி உனக்கு வேண்டியது இதில் ஏதேனும்
இருக்கிறதா பார் என்றார்கள். அதுவும் அதை பணிவுடன் வாங்கி அதை
இரண்டு ஆண்டுகள் கவனித்தது. அதைப்படிக்கும் போது எம்கிருஷ்ண
(கண்ணன்) லீலைகளே அதிகமாக இருந்ததால் அதை மனம் அதிகமாக
சுவைத்தது. ஓர்நாள் ஸ்ரீகுருதேவர் என்ன திருவடி!

**கருத்தை உணர் எனக்கொடுத்தால்,**
**கதை (லீலை) யில் மாட்டிக்கொண்டாயே?**

இந்த கதைகளை படிக்கவோ இதை உனக்கு யாம் கொடுத்தோம்? அதன்
நாயகனே நீ ஆகப் போகும் போது அது உனக்கெதற்கு? உள்ளே உன்
"**நாதன்**" இருக்கிறான் அவனை கண்டு உணர் என்றார்கள்.



உ



அன்றும் ஸ்ரீகுருதேவர் பாதங்களில் பணிந்து பிரபோ "அந்த நாதன் தாங்கள் தானே?" வேறு எந்த நாதன் அங்குள்ளான் என கசிந்து கேட்க ஏ திருவடி!

# அந்த நாதனை நீ உணர்ந்தால், இந்த நாதன் நீயென ஆகலாம்!

ம்ம் முயற்சிப்பாயாக. "முயற்சி உன்னுடையது அதன் பலன் எம்முடையது!" என ஆசிவழங்கினார்கள்.

அன்றுபோலவே இன்றும் தெய்வாதீனமாக ஸ்ரீமத் பாகவதத்தில் இரண்டாம் பாகமே வந்தது. எம்பெருமானே ஸ்ரீ குருதேவா நாதனாகிய உன்னைக் காட்டி அருள்வாய் என மனம் உருகி கண்ணருவி பெருகி பெருத்து ஓட அனந்த பிரித்தது அந்த வைத்தியம் (இல்லை இல்லை அது வாகவே பிரிந்து கொண்டது) அதில் "**ஸ்ரீஜடபரதன்**" சரித்திரம் என வந்தது அதை ஓர் 10 மாதங்களாவது திரும்ப திரும்ப உணர்ந்து ஒர்றிவிப்பட்டது.

ஞானக்குழந்தாய்! ஸத்ஸித் ஆனந்தா! அந்த ஜூடால் சரிதம் படித்த போதாவது "பேரானந்தம் சித்தித்தது" அந்த ஜடபரதனை உணர்ந்து நோக்கும் போது "**மௌனம்**" "மௌனானந்தம்" தான் சித்தித்தது. இந்நிலை ஸ்ரீகுருதேவர் உணர்த்தார் போலும். ஆலயத்தில் வைத்துக் கொண்டே நாதனாகிய ஜடபரதனை கண்டாயா? அறிந்தாயா? உணர்ந்தாயா?

**அவன்** (நாதன்) **நீயென** ஆகுக என ஆசிவழங்கினார் ஸ்ரீ குருதேவர் **அவர்** ஆக்கினார் **அது** ஆனது!

அன்று முதல் அந்த ஜடபரதனின் ஜகஉணர்வும் (காருண்யமும்) இறைஉணர்வும் (கருணையும்) பரஉணர்வும் (அகண்ட நிலையும்) மாறி மாறி இதை ஆட்கொண்டது. அவர் இருமையினால் 1982ல் ஜக உணர்வு நீங்கியது! 1988ல் இறைவுணர்வு எம் முன் ஆனது! 1994ல் யாம் வந்த கர்மாவும் முடிவுற்றது. 1994ல் இருந்தே பரஉணர்வு அந்த வைத்தியத்தை முழுமையாக ஆட்கொண்டது!

இந்நிலை பெற ஓர் முக்கிய காரணம்!



# 13 தந்தையின் சிறப்பு! (53)

(பதின்மூன்றாவது அத்தியாயம்)

அன்புக் குழந்தாய்!

ஸத் ஸித் ஆனந்தா!

1981ல் ஸ்ரீ குருதேவர் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டு அது சமயம் ஒரு நூறு நாட்களாவது அவர்கள் ஆஸ்பத்திரியில் "பெட்ரெஸ்டாக இருந்தார்கள்" இந்த வைத்தியமும் அவர்களை முழுமையாக "**தந்தை**" ஆகும் தானே உணரும் ஆறுதலும் தெய்வீக உணர்வால் அவர்கள் "**ஸ்ரீ குரு**" ஆகவும் ஸ்ரீ பரந்தாமனாகவும் "**விட்டு விட்டு**" உணரும் நிலை கூட்டி வைத்தார்கள் போலும்? 1982ல் இந்த வைத்தியம் அவர் திருப்பையிருவ் பண்டரிபுரம் சென்று "ஸ்ரீ குருதேவர் கருணையினால்" எம் ஸ்ரீ விட்டலனை (கண்ணனை) தரிசிக்கும் பாக்கியம் பெற்றது. எம் கண்ணன் அறிவுரையால் பண்டரியில் "**ஸ்ரீ காஞ்சி மஹான்**" தரிசிக்கும் பாக்கியம் பெற்றது!

ஸ்ரீ காஞ்சி மஹான் அருள் ஆசியினாலும் இறைவன் கருணையும் பெற்றோம். பின் அவன் ஆன தன்மையினால் மாயையும் எமக்குள் ஆனது. அங்கு "அவனே யாம் யாமே அவன்" என்ற நிலையும் பெற்று விட்டோம்.

"**இந்த கிருபை ஸ்ரீ காஞ்சி மஹா முனிவரால் தான்**" சித்தியானது!

ஸ்ரீ காஞ்சி மஹான் வாக்கியம்:- குழந்தாய் திருவடி உன் தந்தையாக இருக்கும் அந்த ஸ்ரீ மஹானை யார் என நினைத்தாய்? அவர் சாட்சாத் "வியாசர் அம்சமாகும்" இது தாவ பரியந்தம் அவரை ஸ்ரீ குருவாகவும் உன் தந்தையாகவும் பாவனை செய்து வந்தாய். அந்நிலையில் உன் 12 ஆண்டு "சர்வாங்க சேவை" முடிவுற்றது. இனி அவரை "**ஸ்ரீ ஸத்குருவாக**" பாவனை செய்து "**ஸத்பாவ சேவை**" ஓர் ஆறு ஆண்டுகள் முறையாக செய்து முடித்து விட்டாயானால் உன் ஸத்குரு சேவை முற்றுப் பெறும். இப்போது அந்த மாயக் கண்ணன் உனக்குள் "ஆவிர்பவம்" ஆகி விட்ட தன்மையினால் நீ வணங்கும் நிலையையும் தாண்டி விட்டாய். ஆசீர்வாதம் செய்யும் நிலையும் பெற்று விட்டாய். ஆனால் "**நிலை கண்டு**" வணங்கு "பணிவே உன் பாதையாக அமைய வேண்டும்"! நீ திருமந்திர நகர் செல்ல



உ

(54)

1982ல் திருமந்திர நகர் வந்து ஸ்ரீகுருதேவரை நமஸ்கரித்து நின்றது. அதுசமயம் ஸ்ரீ குருதேவர் சொன்னார்:- ஓரளவு நீ நிறைநிலை பெற்று வருகிறாய். பண்டரியில் உன் ஸ்ரீ காஞ்சிமஹான் வாக்குப்படி "ஓர் ஆறு ஆண்டுகள் 'ஸத்பாவசேவை' செய்து முடித்து விட்டால்" யாம் வந்த காரியமும் பூர்த்தி ஆகும்" என்றார்கள்

"ஸத்பாவசேவையின் காலம் 1982 To 1988"!

அதற்கு முன்பாகவே 1982ல் ஒருவார்த்தை ஸ்ரீகுருதேவர் சொன்னார்கள். ஹே திருவடி! எமக்கு ஸ்ரீ வஸிஷ்டரின் வாக்காகிய வாஸிஷ்டம் கிடைத்தது போல் உனக்கும் சுத்த அத்வைத நூலாகிய "ஸ்ரீமத் ரிபுகீதை" என்ற ஞானநூல் உனக்கு எப்போது கிடைக்குமோ அப்போது தான் உன் ஞானானுபவம் பூர்த்தியாகும். எப்படியென்றால்? நீ சூடாலையைப் பற்றியும் அவள் அனுபவத்தைப் பற்றியும் உணர்ந்தது "ஞானம்" ஆகும். அதன்பின் ஜடபரதனுடைய அனுபவ உணர்வைப் பற்றி நீ உணர்ந்தது "ஞானானுபவம்" ஆகும். இந்த [illegible] **ஸ்வயஞானானுபவம்** (அதுவாகவே நீ ஆவதற்கு) ஸ்ரீமத் ரிபு கீதையின் ஸாராம்சமே உனக்கு அந்நிலையைக் கூட்டி வைக்கும் என அருளுடன் கூறிவிட்டு அவர்களும் ஐந்து ஆண்டுகளாக தமிழ் நாட்டில் பல இடங்களிலும் தேடிப் பார்த்தார். அது அவருக்கு கிடைக்கவில்லை. எமக்கு எப்படி வாஸிஷ்டம் தாமாக தேடி வந்ததோ அதே நிலையில் அது உன்னை தேடி வரும் என சொல்லி விட்டு ஸ்ரீ குருதேவர் 1988ல் சமாதி கூடி விட்டார்கள்.

ஸ்ரீகுருதேவருக்குப் பின் இதுவும் பலரிடம் சொல்லியும் தாமாக தேடியும் கிடைக்காத ரிபுகீதை ஸ்ரீரமணாஸ்ரமத்தில் 1992ல் யதேச்சையாய் சென்று வரும் போது. அங்கு ஆயிரக்கணக்கில் புஸ்தகம் இருந்தாலும், ஸ்ரீ ஸத்குரு இருப்பையாலும், எமதண்ணல் கண்ணைக் கருணையினாலும், ஸ்ரீ அடியார்கள் ஆசீர்வாத பலத்தாலும். **பளிச்சென தோன்றி** எம்மை **வா. வா. வா.** என அழைப்பது போல் தோற்றத்தை உண்டு பண்ணி **அந்த ஒன்று** மட்டும் எம் நேத்திரத்தில் பட்டது.





அந்த ஸ்ரீமத் ரிபு கீதையை ஓர் அன்பர் வேகமாக வாங்கி
"அதை அதன் கருணையினால்"
கருத்துடன் உணர்ந்து ஓர்ந்தது!
முன்பு சொன்ன ஸ்ரீ குருதேவர் வாசகம்!
திருப்படி 1982 To 1988 வரை உனக்கு ஸத்பாவ சேவை
தொடர்ந்து வந்து அது பூர்த்தியாகும்.
பிறகு 1988 To 1994 வரை "ஆத்ம பாவ சேவை"
"யாம் நீயாக" இருந்து நடைபெறும். அது சமயம் ஸ்ரீ குரு கிருபை
யாலும் இறை அனுக்ரஹத்தினாலும் ஸ்ரீ அடியார்கள் ஆசியினாலும் உனக்கு
கிடைக்கும் ஸ்ரீமத் ரிபு கீதையை நீ உணர்வு பூர்வமாக உணர்ந்தால் எம்
வாக்குப்படி 1994ல் ஆத்ம பாவ சேவையின் முழு அனுபவத்தின் பயனாக
"ரிபு கீதையின் சாராம் ஸமே நீ ஆவாய்" என்றார்கள்!

ஸ்ரீ குருதேவர் வாக்குப்படி 1994ல் அனைத்தும் முற்றுப் பெற்றது!
"அத்துடன் இந்த பாவம் வினையும் முற்றுப் பெற்றது"!

ஓம் ஆத்மானந்த சொரூபமே!

"ஸத் சித் ஆனந்த சொரூபமே"!

"திரு என்றால் குரு"! "குரு என்றால் பரம்"! "பரம் என்றால் நாம்"!
முறைப்படி இம்மூன்றையும் லௌகீகத்திருந்து தெய்வீகத்தையும்; தெய்வீகத்
திலிருந்து பரமார்த்திகத்தையும், பரமார்த்திகத்திலிருந்து "அது நாமே"
என்ற "ஸ்வய ஞான சகஜானந்தானுபூதியை" நம் முன் நாமாக இருந்து
அருளும் "ஸ்ரீ ஸத்குரு தேவருக்கு நம் காணிக்கையாவது;
அக உணர்வில் நம் கண்ணீரே காணிக்கை. இதயமே அவர் கோவில்!
புற உணர்வில் "சேவை" என்ற நிலையில், நம் கர்மா பாவத்தை
அவர் பாதத்தின் கீழ் பாதுகையாக்கி" தேய்த்து! தேய்த்து! தேய்த்து!
அணு அணுவாக கரைத்து! கரைத்து! கரைத்து! மயமாக்கிறையும் அதுவும்
மிகையாகாது!



ஸ்ரீ குருதேவர் இந்த வைத்தியத்தை இந்நிலைக்கு கொண்டு வருவதற்கு என்ன பாடுபட்டிருக்கிறார் தெரியுமா????

அதைப் போலவே எம் அன்பு செல்வங்களை படிப்படியாக உயர்த்தி, உண்மையை உணர்த்தி, இல்லறத்தில் இருத்திக் கொண்டே உங்களை,

**இல்லாமல் ஆக்குவதற்கும்;**

**துறவு அறத்தை** காட்டி **தூய்மை** ஆக்குவதற்கும்

"அதுஆக்குவதற்கும்" **ஒருபாடும்** படவில்லை?

**ஆளை ஆக்கி விட்டோம்!!**

அந்தப் பெருமை ஸ்ரீ குருதேவரையே சாரும், இதுவன்றென்றும் ஓர் தூசியே!

"**அதுவும் உங்கள் பாத தூளியே!!**

இதன் சாதனை!

உருவத்தில் பணிவு; உள்ளத்தில் கனிவு, அன்பு, பொறுமை, கருணை, குற்றம் குறை தோஷம் காணாதிருத்தல், அப்படி விதிவசத்தாலும், வினை வசத்தாலும் நேர்ந்திடினும் "அந்த க்ஷணமே" அவைகளை மன்னித்தல், மறத்தல், எதிலும் விட்டுக் கொடுத்து தன்னை அழித்துக் கொள்ளுதல்; "நான் எனது என்னுடையது" இம்மூன்றையும் முழுமையாக அழித்து "இது இதாவ் இதனுடையது" என முழுமையாக ஆக்கிக் கொண்டு, அஹங்கார அபிமானத்தை நிர்மூலமாக்கி, எந்த வினையும் ஏதோ ஒரு ஸ்ரீ பகவந் நாமஸ்மரணையோடு இருத்தல்; சர்வார்ப்பண நிலையில் "**எல்லாம் நீயே**" என்ற தாரக மந்திரத்தை மட்டும் ஜபித்தல், உள்மூச்சின் அடி ஆழத்தில் "**ராம்**" ஸ்மரணை கெடாதிருத்தல் இவையே இப்பைத்தியத்தின் சாதனை!





# 14 முடிவுரை! (பதினான்காவது அத்யாயம்)

அன்பின் திருவுருவே! ஆனந்தத்தின் பிறப்பிடமே!
கருணையின் வடிவே! சேவையின் செம்மலே!
ஸத்குரு வாக்கியார்த்த சிரத்தையிலும் அவர்
**சேவையிலும்** முழுமையாக அர்ப்பணித்த
எம் செல்வமே!

ஸத்சித் ஆனந்தா! சாதனை செய்து ஆத்ம சம்பத்தை அடைவதற்கு ஸ்ரீஸத்குரு சேவையும் உபதேசமும் இல்லாமல் பெற முடியாது! அந்த வகையில் நீங்கள் இருவருமே

**அவதார சொரூபிகளாக**

("குரு சமர்த்த ராமதாஸ், சிஷ்யன் வால்மீகி மஹரிஷி")

இருந்த காரணத்தினால் அது நிறைவு பெற்றது! அது "**பரிபூரணமே**"

இங்கு ஸ்ரீ குருதேவரான ஸ்ரீ வியாசபகவான் கருணையினால் இந்த வைத்தியம்
ஸ்ரீ ஸத்குரு தேவருக்கு 1970 To 1982 வரை சர்வாங்க சேவை முடிவுற்றது!
ஸ்ரீ ஸத்குரு தேவருக்கு 1982 To 1988 வரை ஸத்பாவ சேவை முடிவுற்றது!
ஸ்ரீஸத்குருதேவருக்கு 1988 To 1994 வரை ஆத்மபாவ சேவை முடிவுற்றது!
இதில் ஓர் ரகஸ்யம் 1988ல் ஸ்ரீ குருதேவர் ஸமாதி ஆன பின்னும் இந்த ஆத்ம பாவ சேவை எப்படி நடைபெறும் என ஓர் கேள்வி எழலாம்? இது ஆத்மாவே ஆத்மாவுக்கு சேவை செய்ய வேண்டி இருப்பதால் கர்மாதூலத்துடன் இருக்கும் ஆத்மாவானது கர்மாதூலம் இல்லாத ஆன்மாவுக்கு (சூட்சுமத்திற்கு) சேவை செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. ஆகவே இந்த கர்மாதூலத்துடன் இருக்கும் ஆத்மாவானது "தம் கருவி கரணங்களை செயலற்றதாக்கி, தம் அந்தக் கரணங்களை மௌனமாக்கி" சமுத்திரத்தில் தோன்றி உப்பானது நாம ரூபத்தினால் (கர்மாவினால்) வேறாகத் தோன்றினாலும் அது (உப்பு) சமுத்திர ஜலத்திற்கு அன்னியமாகாதது போல, தம் கர்மாதூலம் இருந்தாலும் அதை முழுவதுமாக கெடுத்து நாசம் செய்து ஆத்ம பாவ சேவையிலேயே லயமாக முடியும். "இது அதிரகஸ்யமானது"! பெரும்பாலும் இந்த ஆத்ம பாவ சேவை செய்து விட்டால் அவன் அதீதமாகி விடுகிறான். அவன் கோடியிலும் கடைக்கோடி ஆகிவிடுகிறான். அந்த பாக்கியத்தை அதுவே அதற்கு கொடுத்து அது ஆக்கிக் கொண்டது! அதுவே அமிர்தம்

தாஸ பரம.



உ



ஓம் மௌனானந்த சொரூபமே!

ஸத் ஸித் ஆனந்தா!

1984ல் ஸ்ரீ குருதேவருடன் ஏதோ ஓர் முக்கியமான விஷயம் பற்றி பேசிக் கொண்டிருந்தது அந்த பைத்தியம். அதுசமயம் ஸ்ரீ குருதேவர் ஒரு வார்த்தை சொன்னார்.

திருவடி! இந்த தூலம் இன்னும் சில காலத்தில் மறையலாம். அதாவது இந்த ரூபம் மறையுமே தவிர யாம் உன்னுள் ஒடுங்கிவிடுவோம். அதை உன்னுலேயே உணர்வாக உணர முடியும். இப்போது இருக்கும் உன் அனுபவ நிலைக்கும் பின்னர் பெறும் அனுபவ நிலைக்கும் உள்ள "உணர்வின் வித்தியாசத்தை" நீயே உணர முடியும் என்றார்.

ஆனால் அந்த வினாடி முதற்கொண்டு உள்ளத்தை ஏதோ ஒன்று கௌவி இழுப்பது போல் தோன்றியது. உள்ளம் பிழியப்படுவது போன்று ஓர் உணர்வு; அதை இன்னதென எழுதத் தெரியவில்லை. கண்களிலிருந்து மாலைமாலையாக கண்ணீர் ஓடும். கேட்டால் விபரம் சொல்லத் தெரியாது! ஸ்ரீ குருதேவரும் எத்தனை விதமான சமாதான சாந்தி வாக்கியங்களும் அது சம்பந்த கதைகளும் சொல்லி இதைச் சமாதானப்படுத்திப் பார்ப்பார். அவர் சொல்லும் அந்த வினாடி ஆமாம் என சொல்லி தலையை அசைக்கும். மறு வினாடி அவரை விட்டுப் பிரிந்ததும் பழைய நிலை உண்டாகிவிடும் திரும்பவும் கண்ணீர் மாலைமாலையாக ஓடும். அப்போது வரும் எண்ணமாவது?

ஹே பிரபோ! ஸ்ரீ குருதேவர் மறைந்துவிட்டால் நம் கதி என்ன? உண்மைகளை விளக்குவது யார்? சந்தேகங்களை தெளிய வைப்பவர் யார்? இந்த உண்மையின் உணர்வான திவ்ய முகத்தை காண்பது எவ்வாறு? இந்த சேவைகள் எப்படி தொடரும்? நடுக்கடலில் கப்பல் பழுதானால் நம் நிலை என்ன? எத்தனை தூரம் நடந்திருக்கிறோம். இன்னமும் எத்தனை தூரம் செல்லவேண்டும் என வழிகாட்டுவது யார்? வெண்ணை திரண்டு வரும்போது தாளி உடைந்த கதையானால் நம் நிலைமைதான் என்ன? ஓர் ஊன்றுகோலுடன் செல்லும் ஓர் குருடன் செல்லும் யாத்திரையில் அவன் கைத்தடியை பிடுங்கிக் கொண்டால் அக்குருடன் நிலை என்ன? இலையைப் போட்டு சாதம் சாம்பார் கூட்டு எல்லாம் வைத்தபின் நீ சாப்பிட்டது போதும் என அவனை எழுப்பி வெளியில் அனுப்பினால் அப்பசியோடு





இருப்பவன் நிலை என்ன? அப்போதைக்கப்போது எழும் கேள்விகளுக்கு பதில் சொல்பவர் யார்? கோஷ்டியை விட்டு தனியாக போய் மேயப் போகும் கோழிக் குஞ்சு போல் மேய்ந்தால் பருந்திடம் (விஷய ஆசைகளிடம்) இருந்து நம்மை காப்பது யார்? என்னதான் தெய்வ பலம் இருந்தாலும் ஸ்ரீ குருகிருபை நிஷ்பலமானால் அச்சாதகனின் நிலை என்ன? - - - - - - - -

எம் அன்புச் செல்வமே!

ஸத் சித் ஆனந்தா! இப்படி கோடானு கோடி கேள்விகள் மேலும் மேலும் வந்து மனதை கசக்கி பிழிந்து கண்களில் கண்ணீர் அருவி கொட்டுவது தான் மிச்சம்?

# இதற்கு விடை தெரியவில்லை!!!

ஓ எம் ஐயனே ஸத்சிதானந்தா ஸ்ரீ குருதேவர் எந்த கலவரமோ, கலக்கமோ எந்த சலனமோ அடைந்ததாக தெரியவில்லை. எந்த விடையும் சிரிப்பு, புன்னகை ஸாந்தியான உபதேசங்கள்தான் சொல்லுவாரே தவிர வேறு எதுவும் அவரிடம் கிடையாது இப்படியாக சுமார் ஆறுமாத காலம் ஓடி இருக்கலாம்? **ஓர் நாள்?**

அவர் கேள்வி!!!

என் திருவடி! நீ ஸத்தான குழந்தையென்றல்லவா எதிர்பார்த்தோம் இப்படி அஸத்தையே பின்னிப் பின்னி உழல்கிறாயே தவிர அவைகளை உதறி விட்டு எப்போது "உன் ஸ்வய அனுபவத்தில்" நிற்கப் போகிறாய்?

யாம் யார்? நீ யார்? நம் இருவருக்குள்ளும் உறைந்து இயக்கும் அது யார்? இம் மூன்றும் ஒன்றே! இம் மூன்றையும் **"ஒன்றுக்கு"**!

வினையை தாங்கி வந்த தூலம் வினை முடிந்ததும் மறைவது தானே நியாயம்? கோடானு கோடி மஹான்களும் ஞானிகளும் என்ன காரணத்திற்காக இங்கு ஓர் வேஷம் தாங்கி வந்தார்களோ அந்த காரணத்தில் தாம் "ஸ்திரமாக இருந்து கொண்டு" வந்த காரியத்தை மட்டும் முடித்து விட்டு "காரிய தூலத்தை இங்கேயே போட்டுவிடுவது தானே முறை"? "யாம் உன் ஒருவனுக்காகவே வந்தோம்" நீயோ மற்றவருக்கும் (ஜாதி மொழி மதம் கடந்த பலருக்காகவும்) சில காலம் இந்த தூலம் தாங்கி இருந்தாக வேண்டும்!



ஏ திருவடி! "யாமே அவதார புருஷன் நீயே புருஷோத்தமன்!!
(எல்லாரிலும் ஓர்நிலை உயர்ந்தவன்)
உன்னால் அனேகர் மோட்சம் சுதந்திரம் பெறுவர். ஆனால் நீ எவரையும் உன் போன்று ஆக்கமாட்டாய்! உன்னை முழுமையாக நம்பியவர்கள் அனைவரும்,

"ஜீவன்முக்தர்களே" எம்மைப்பார்! உன்னில் எம்மை உணர்!!!"

மெய்அன்பர்களே!

அன்று ஏதோ நடந்தது. அதை வாக்கால் சொல்லவோ, வரிவடிவில் எழுதவோ, வேறு எந்த விளக்கத்தாலோ, அன்று நடந்ததை உணர்த்த முடியவில்லை! சிரமத்திற்கு மன்னிக்கவும்.

1984ல் நடந்த சம்பவம் இதாகும். பின்னர் 1988ல் வைகாசி மாதம் 6 தேதி வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு ஸ்ரீ குருதேவர் சமாதி கூடினார்கள். அன்று ஆனந்தம் ஒன்று தான் நிலவியது, எந்த சலன அசைவுகளும் இல்லவே இல்லை. ஸ்ரீ குரு கிருபையால் 1992ல் ஸ்ரீமத் ரிபு கீதை கிடைத்தது! அந்த ரிபுகீதையை ஓர் மூன்று ஆண்டு காலமாக திரு ஆலவாய் (மதுரை)யில் எம் தவசீலன் "அஃ. ரூரானின் ஸ்ரீ அபிராமி இல்லத்தில்" வைத்து பெரும் பாலும் உணரப்பட்டது. அந்த உணர்வுப் பெருக்கை முன் மூன்று யுகங்களிலும் வாழ்ந்து நமக்கு வழிகாட்டிகளான "அனேக மஹரிஷிகள்" வந்து கேட்டும் அனுபவித்தும் அறிவுணர்த்தியும் சென்றார்கள்.

அதே காலத்தில் மேட்டூரில் உள்ள "சாந்தா திருமலை" அவர்கள் கோட்டார்ஸ் இல்லமாகிய ஸ்ரீ அபிராமி இல்லத்தில் "சிட்டவும்" (சிறிய இடம்) அங்கும் ஸ்ரீ ரிபுகீதையை ஆராய்ந்து உணர்ந்ததில் முதலிடம் எம் திருடனாகிய கண்ணனாகவும் மற்றும் அனேக "சித்த புருஷர்கள்" முதலியவர்கள் வந்து அதை கேட்டும் சில உணர்த்தியும் லீலைகள் புரிந்தும் அவர்கள் போக்கு வரவு அதிகமாக இருந்தது.

"அதே காலத்தில் எமதண்ணல் கண்ணன் சொல்லுவான்:"

ஏ தாஸியாகிய சுகா! உன் ஸ்ரீ குருதேவர் உணர்த்த கிடைத்த ஸ்ரீமத் ரிபுகீதையின் சாராம்சத்தை மிகுந்த தெளிவான நிலையில் உணர்ந்து கொண்டாய் மேலும் இப்பூலோகத்தில் அரிய பெரிய பாக்கியமாகிய இருந்தால்



உ

இவ்வளவு நுட்பமாக உணர்ந்தவர் எவருமே இல்லையெனலாம். நீ உணர்ந்தது மட்டும் போதாது உன் ஸ்ரீ குருதேவர் வாக்குப்படி இந்த முழுமையான "அத்வைத நூலை" உன் போன்று உணரத் துடிக்கும் சிவ பக்குவ ஆன்மாக்களுக்கு இந்த "ஒன்றை" மட்டும் சுட்டிக்காட்டி அவர்களையும் சுட்டசுட்டி (வெந்த பானை திரும்ப உருப்பெறாது) ஆக்கி ஜீவன் முக்தர்களாக்குவாயாக!

ஓம் ஸ்ரீ அடியார்களின் திருவடித்தாளியே!

இவ்வுலகமெங்கும் சுற்றி அலைந்தாலும் இந்த "திருஅண்ணாமலை" போன்று அதற்கு வேறு பூமி இல்லையெனலாம். "இது ஞான பூமி! இது குருபீடமாகிய "அண்ணாமலை"! இது ஓர் அக்கினி க்ஷேத்திரம்! இது ஞானத்தின் இதயம்! கைலாயம் ஞானத்தின் சிகரம் (சிரசு) எம் அண்ணல் சொன்னதும், எம் ஸ்ரீ குருதேவர் உணர்த்தியதுமான

ஓர் சத்திய வாக்கியம்!

இந்த ஞான பூமியாகிய திருஅண்ணாமலை "அடிவாரையில்" (மலைச்சுற்றில்) எந்த ஓர் சாதகர் முழுமையாக அனைத்தையும் "விட்டநிலை"யில் சாதனையோ அரங்கேற்றமோ செய்தால் (காலஅளவு பலவருடமோ, அல்லது பலமாதமோ, அல்லது சிலவாரமோ, அல்லது சிலநாட்களோ, அல்லது "ஒருநாளோ") அவன் எதை உணர்ந்தானோ, எதை உணர்ந்ததை உணர்ந்து இருந்தானோ, அதை அப்படியே சிரவண, மனன, நிதித்யாசம் முதலியவைகளை "ஸ்ரீ ஸத்குரு" வாக்கியார்த்த நம்பிக்கையும் திடசித்த வைராக்கியத்தினும் முழுமையாக "ஈடுபடும் அன்பர்களுக்கு "ஸ்வயஞான அனுபவமாகும்". "வினையின் இடர்பாடுகள் மலினமாகும்! மனம் சாந்தியும் அமைதியும் ஆழ்ந்த மௌனநிலையும் அதன்முடிவாகிய பிரம்மானந்தமும் சாத்தியமாகும்!

உ

(62)

மீண்டும் எம் கண்ணன் சொல்லுவான்

ஏ சுகா!

நீ அறிந்த தெல்லாம் போதும்! ஓர் இடத்தில் அமைதி
யாக அமர். அப்படி அமர்வதற்கு தற்காலிகமாக
சிலகாலத்திற்கு இத்திருஅண்ணாமலையை தேர்ந்
தெடுத்துக் கொள். நீ இருப்பதோ, செல்வதோ,
உன் பாடத்தை உணர்ந்து வதோ, இது பற்றி



தெய்வமாகிய யாம் ஓர் முடிவுரை கூறக் கூடாது. நீ எம்மிலும்
அதிகமாகி இருப்பதால் ஒரு சிலவற்றை மட்டும் சுட்டிக் காட்டுவோம்.
மற்றும் அனைத்தும் உன் ஸ்ரீ குருதேவரும் அந்த காலாதீத பரமும்
தான் உன்னை வழிநடத்திச் செல்லும்.

அகண்ட ஞானம் = ஸ்ரீ குருதேவர் = இங்கு செயல்பாடு உண்டு!

அகண்டாகாரம் = பிரம்மானந்த சமுத்திரம் = காலாதீத பரம்!
இது செயல்பாடற்றது!

என அவன் ஆணையை மேற்கொண்டு ஸ்ரீ குருகிருபையுடன்
திருஅண்ணாமலையில் 1996 To 2000 இதில் கிட்டத்தட்ட ஓர் நாலரை
ஆண்டுகள் ஸ்ரீமத் பகவத் கீதையின் வாயிலாக "ஸ்வய ஞான அனுபவ
த்தை" உணரத் துடிக்கும் பக்குவ ஆன்மாக்களுக்கு மட்டும்
உணர்த்தி முடித்தோம். அங்கு போதும் என நிறைவு பெற்றோம்.

2000 லிருந்து 2001 க்குள் காவிரிக்கரையில் எமது அன்னை
காவிரி மாதா அனுமதியுடன் "அன்பின் குடில்"
என ஒன்றை ஸ்ரீ மெய்யன்பர்கள் நிறுவி இப்பைத்தியமாகிய
பதுமையை அமரச் செய்து அவன் / அதன் கிருபையினால்
ஆத்மஞான யாகம் நடந்து வருகிறது!

ஓம் அன்பின் திருவுருவே!
ஸத் சித் ஆனந்தா! இனி என்னென்ன
நடந்து போகிறதென்று அவன் அறிவான் / அது அறியும்!
இந்த பைத்தியம் அறியாது. இது உணர்ந்த தெல்லாம்
"அவன் அருள் அது யாமே"

[illegible] பாபா.

எல்லாம் நலமே, அது சுகமே அது யாமே அது நீயே!!!
இவ்விடம் முற்றுப் பெற்றது





(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. **ஓம்** தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

"ஸ்ரீராம்; ஜெயராம்; ஜெய ஜெய ராம்; ஓம்"!!!

அகம்பிரம்மம் ஜகம்பிரம்மம் அகமே எல்லாம்!

ஜகம், பரம், ஜீவர்களும் சிறிதும் இல்லை!!

# "பிறவி ரகஸ்யம்"

1. "**பரம்பூஜ்யபப்பா**" "ஸ்ரீராம்தாஸ்" அவர்கள்

௨. "**அன்னை கிருஷ்ணைபாய்**" "மாதாஜீ" அவர்கள்

௩. "**பூஜ்ய ஸ்ரீ ஸத் சித் ஆனந்தா**" அவர்கள்

அன்பும் பண்பும் கருணையும் சேவையும் நிறைந்த எம் குழந்தைகளே! ஸ்ரீமஹான்களாயும் அவதாரசொரூபிகளாயும் விளங்கும் **பரிபூரணர்கள்** திருவடிகளில் இந்த மலரை சமர்ப்பிக்கிறோம்!

[signature] பாபா.



உ



ஓம் அன்பும், பண்பும், கருணையும், சேவையும், நிறைந்த குழந்தைகளே!

அன்பு! சாந்தி! நீங்களும் அந்த ஸ்ரீ ஆனந்தாஸ்ரமமும், மற்றும் அன்பர்களும், ரொம்ப ரொம்ப கொடுத்துவைத்தவர்கள். மஹாபாக்கியவான்கள்.

ஸ்ரீ வால்மீகி மஹரிஷியையே உங்கள் ஸத்குருதேவராக அடைந்திருக்கிறீர்கள். அவர்தம் பாவனையும், கருணையின் பார்வையும், குழந்தை உள்ளமும் எம்மை மிக மிக மிக வாக கவர்ந்து விட்டன. அவருடைய ஸ்ரீகுருதேவரோ (பப்பா) நைஷ்டிக பிரம்மச்சாரியும், என்றும் சிரஞ்சீவி பட்டம் பெற்றவருமான, ஸ்ரீராமசேவா ஆஞ்சநேயனின் அம்சமான

"**மஹான் ஸ்ரீ சமர்த்த ராம்தாஸ்**" ஆகும்.

ஆகவேதான் உங்கள் ஸ்ரீ பப்பாவை ஆஞ்சநேயர் அம்சம் என்றோம்.

"அந்த ராம்தாஸே இந்த ராம்தாஸாகும்"!!

எம் அன்புக் குழந்தைகளே! ஸ்ரீ பக்த விஜயத்தில் வரும் ஸ்ரீ மஹான்களில் ஸ்ரீ ராம்தாஸ் என்னும் நாமம் பெற்றவர்கள் மூவராகும்.

பத்ராசல ராம்தாஸ், துவாரகை ராம்தாஸ், சமர்த்த ராம்தாஸ் என மூவராகும். இதில் ஸ்ரீ ஆஞ்சநேயர் அம்சம் பெற்றவர் "சமர்த்த ராம்தாஸாகும்". அந்த அம்சம் பெற்றவரே நம் "பூஜ்ய ஸ்ரீ ராம்தாஸ்" (பப்பா) அவர்களாகும். இந்த சமர்த்த ராம்தாஸ் அனேக அற்புதங்களை செய்தும் ஸ்ரீ ராம நாம பெருமையை உலகுக்கு உணர்த்தியவரும் ஆவர். இந்த சமர்த்த ராம்தாஸ் ஸ்ரீ ஆஞ்சநேயரின் அவதாரமாக இருந்தால் அவர் ராமநாம ஜெபமே "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம், ஓம்" என அன்றும் அமைந்திருந்தது. இன்றும் அவ்வாறே அமைந்திருக்கிறது என்றால் ஸ்ரீ ராமதாஸர்களின் பெருமையை தேவர் தேவராலும் அறியமுடியாது, சொல்லமுடியாது, எழுதமுடியாது.





உ



என்றால் இந்த வைத்தியத்தால் ஆகுமோ? இருப்பினும் உங்களுக்கு ஸ்ரீ ஸத்சித் ஆனந்த ஜீயின் வாழ்க்கை அம்ச கதையை சுருக்கமாக முன்பு சொன்னேன். இந்த இதழில் மகான் ஸ்ரீ பாபாவின் பூர்ணா அம்சமான ஸ்ரீ சமர்த்த ராமதாஸருடைய ஒரே ஒரு அம்ச சரித்திரம் சொல்லி முடிக்கிறேன்.

## ஸமர்த்த ராமதாஸ் வரலாறு!

இவர் ஓர் அந்தண குலத்தில் பிறந்தார். பால்யத்தில் படிப்பில் கவனம் செலுத்தாமல் தம் விளையாட்டான மரத்துக்கு மரம் அனாயசமாக தாண்டுவதும் மலைகளில் பெரிய பெரிய பாறைகளை தூக்கி வீசுவதும் இப்படியுமாக பால்ய பருவம் கழிந்தது.

வாலிப பருவத்தில் இவர் பெற்றோர்கள் இவருக்குத் திருமணம் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் இவர் இதை அறியார். இவர் வீட்டில் மணப்பெண் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது தான் வெளியே சென்றவர் வீட்டினுள் நுழைந்தார். அப்பெண்ணை நம் ராமதாஸ் கண்டார். இது யாரோ எவரோ என அப்பெண்ணை நோக்காமலேயே வீட்டினுள் நுழைந்தார் நம் ராமதாஸ்.

அம்மா பசிக்கிறது, ஏதாவது ஆகாரம் கொடு என கேட்டார். அம்மாவும் டேய் ராமு சற்று பொறு உனக்குத் திருமணம் இன்று நடக்கப் போகுது. அது முடிந்த பின்தான் உனக்கு சாப்பாடு என கூறி உன்னை அந்த அறையில் அழைத்து வந்த உன் நண்பர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீ சென்று உன் துணிமணிகளை மாற்றி புதுமாப்பிள்ளையாக மண அறைக்கு வா எனச் சொல்லி விட்டு அவர் காய் செய்ய விட்டாள். இவர் ஓர் கணம் சிந்தித்தார்.

ஓஹோ புதுப்பெண்ணை தாலி கட்டும் முன்பே நம் சாப்பாட்டுக்கு தடங்கல் வந்து சாப்பாடு கிடைக்கவில்லையென்றால் நாம் அந்த பெண் கழுத்தில் தாலி கட்டிவிட்டால் நம் (சாப்பாட்டு) நிலைமையென்ன ஆகும் என சிந்தித்தார் உடனே புறக்கடை





வழியாக ஒரே ஓட்டமாக வனத்திற்கு ஓடிவிட்டார் நம் ராம் தாஸ் ஸ்வாமிகள். இவர் கடும் சாதனையால் முதலில் இவர் அம்சமான ஸ்ரீ ஆஞ்சநேயனை தரிசித்தார். பின் தம் குருதேவர் (ஆஞ்சநேயர்) கருணையினால் "ஸ்ரீ ராம லக்ஷ்மண பரத சத்ருக்ன அனுமந் சமேத சீதா"வையும் தரிசித்தார். ஸ்ரீ ஆஞ்சநேயனை தம் சாமர்த்தியத்தால் தரிசித்ததாலும், அவரிடமே உபதேசமும் ("ஸ்ரீ ராம் ஜெயராம், ஜெய ஜெய ராம் ஓம்") பெற்றுக்கொண்டதாலும், வான சஞ்சாரம் முழுவதுமே "அவதாரத்தை" சஞ்சாரம் செய்ததாலும், ஸ்ரீ ஆஞ்சநேயரே "**ஜெய சமர்த்தா**" என அடைமொழியிட்டு அழைத்ததாலும், அவருக்கு ஸ்ரீ சமர்த்த ராம் தாஸ் என்னும் நாமம் வழங்கி வந்தது. இவர் பெரும்பாலும் நகரங்களுக்குள் வரமாட்டார் வந்தாலும் ஒரு சில மணி நேரமே இருப்பார் உடனே எவரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் வனத்திற்கு ஓடிவிடுவார்

எம் கண்மணிகளான!

அன்பு. சாந்தி. நம் ராம் தாஸ் ஸ்வாமிகள் காலத்திலேதான் மராட்டிய மன்னன் வீர சிவாஜியும் வாழ்ந்தான். இந்த வீர சிவாஜிக்கு ஸ்ரீ ராம் தாஸ் சத்குருவானர். அதே காலத்தில் தான் ஸ்ரீமான் பாண்டுரங்கபக்தராயும், உத்தவரே நாமதேவராக அவதாரம் செய்து ஓர் காரியசித்தமாக அந்த நாமதேவரே மஹாஞானி துகாராம் ஸ்வாமிகளாக அவதரித்திருந்தார். இதில் ஓர் ஒற்றுமை என்னவென்றால் காட்டில் வாழ்ந்தவர் ஸ்ரீ சமர்த்த ராம் தாஸ் ஸ்வாமிகள். தேவநகரம் என்னும் கிராமத்தில் (நாட்டில்) வாழ்ந்தவர் ஸ்ரீ துகாராம் ஸ்வாமிகள்.

ஸ்ரீ துகாராம் ஸ்வாமிகள் இல்லற துறவியாயிருந்தார்!

ஸ்ரீ சமர்த்த ராம் தாஸ் ஸ்வாமிகள் நைஷ்டிக பிரம்மச்சாரியாயும் சித்தபுருஷராயும், ஆத்மஞானியாகவும் இருந்தார்.



உ

(68)

எம் ஞானச்செல்வங்களே!

ஓர்நாள் மராட்டிய மன்னன் சிவாஜி ஆரண்யத்தில் வசித்துவந்த தம் ஸ்ரீகுருதேவரை வனத்தில் சந்தித்தான். ஸ்ரீகுருதேவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து பவ்யமாக பணிந்துநின்றான் சிவாஜி.

குருதேவர்:— அரசே! இன்று என்ன விசேஷம் படையோடு திரண்டு வந்திருக்கிறாய்?

அரசன்:— குருதேவா விசேஷம் ஒன்றுமில்லை. வேட்டைக்கு கிளம்பினேன். நம் வீரர்கள் அனைவரும் என்னுடன் கிளம்பிவிட்டனர். மொத்தம் 400 பேர் குதிரைகளுடன் வந்திருக்கிறோம். இன்னமும் நாங்கள் நாட்டிற்கு செல்ல இன்று இருட்டிவிடும். கொண்டு வந்த ஆகாரமும் தீர்ந்து விட்டது. வழியில் எங்காவது தங்கி இளைப்பாறி விட்டு நாளை காலையில் ஊருக்கு போகிறோம். வந்த இடத்தில் தாங்களையும் தரிசித்துவிட்டுபோகலாம். இதுவே எங்களுக்கு பரமதிருப்தி விடைதாருங்கள்!!!

குருதேவர்:— எம்மை நாடி வந்தவனை வெறும் கையினாக அனுப்புவது முறையன்று. இன்றுமாலை இரவுணவை முடித்துவிட்டு நாளை காலையில் நீங்கள் அனைவரும் உற்சாகமாக செல்லலாமே என பரிவோடு கேட்டார் ஸ்ரீகுருதேவர்.

அரசன்:— (திகைத்தான்) வந்து, வந்து, என வார்த்தையால் இழுத்தான்.

குருதேவர்:— ஏன் திகைக்கிறாய்? வந்து வந்து என ஏன் வார்த்தையை இழுக்கிறாய்?

அரசன்:— ஒன்றுமில்லை குருதேவா! நான்மட்டும் தனியாக வந்தால் பரவாயில்லை. அல்லது என்னுடன் ஒருவரை மட்டும் அழைத்துவந்தாலும் பரவாயில்லை. வீரர்கள் 400, குதிரைகள் 400, நானும் குதிரையும் 2, ஆகமொத்தம் 802 ஜீவர்கள் இருக்கிறோமே?





உ

குருதேவர்:— அதனாலென்ன? எல்லோருமே ஆகாரம் அருந்தியின் அமைதியாக ஓய்வெடுத்து விட்டு நாளை நாம் செல்லலாமே?

அரசன்:— நாங்கள் மூவருமே உணவருந்துவதா? இங்கேயா? புரியவில்லையே குருதேவா? என திகைத்தான்.

குருதேவர் புன்முறுவலுடன் தம் சிஷ்யன் ஒருவனை அழைத்தார். அந்த உத்தமமானவனும் ஓடிவந்து ஸ்ரீ குருதேவரை பணிந்து பவ்யமாக நின்றான். ஸ்ரீ குருதேவர் பணித்தார்

சிஷ்யா! இந்த அரசனுக்கு "ஒரு பக்கா" (படி) மாவு கொடுப்பாயாக! என பணித்தார். அந்த உத்தம சிஷ்யனும் அந்த குடிலிலிருந்து ஓர் பெரிய பாத்திரத்தில் "ஓர் படி மாவை" கொணர்ந்து அதனை ஸ்ரீ குருதேவர் திருவடிகளில் வைத்து வணங்கிவிட்டு போய்விட்டான். ஸ்ரீ குருதேவரும் அப்பாத்திரத்தை கைகளில் தாங்கி அரசன் கைகளில் கொடுத்தார். கொடுக்கும் போது அவர் உரைத்தது இதுதான் "ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம்" அந்த வீர சிவாஜியும் அதை பணிந்து பவ்யமாக வாங்கும் போதும் "ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம், ஓம்" என உரக்க கனிவுடன் கண்ணருவி பெருக்கெடுத்து ஓட வாங்கினான்

அங்கு!

அந்த அரசன் பாத்திரத்தையும் நோக்கவில்லை, அதன் உள் இருந்த அந்த ஒருபடி மாவையும் நோக்கவில்லை. ஸ்ரீ குருதேவர் சொன்ன அந்த "**அட்சரத்தை**" உணர்ந்தான் உருகினான், கரைந்தான் அந்த ஆனந்தத்திலேயே தன் நாவும் "தழு தழுக்க" அதாவது "குளறும் நிலையில்" "**ஊறிக் கொண்டே**" வாங்கினான். அந்த "**ஸ்ரீராம்**" கருணையால் அந்த மாவு அனைவர் பசியையும் போக்கும் சக்தியும் இருந்தது. நடந்த சம்பவம்:— அதை ரொட்டி தட்டினான்





உ

அரசனும் வீரர்களும் குதிரைகளும் உண்டு களித்தார்கள்
இரவு முழுவதும் "ஸ்ரீராம்" பஜனைதான் உருக்கம்தான். அன்பு
பெருக்குதான், ஆனந்தம்தான்; ஒரே கொண்டாட்டம்தான்

**"அந்த அன்பின் பெருக்கத்தையும்"**
**"அந்த அருளின் பிரவாகத்தையும்"**

கண்டானிருந்தப் பதால் தான் தனில் கண்ணீர் கொட்டுவதை அடக்காதிலை

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

உணர்ந்து அனுபவிப்பதால் எழுதுகோல் எதை எழுதுகிறது சந்தர்ப்பமாகச்சேயும்
"மெய் உணர்வால் உணர்ந்தால் நீங்களும் அனுபவிக்கலாம்."

மறுநாள் அதிகாலையில் நம் அரசன் ஸ்ரீ குருதேவரைப் பணிந்து செல்ல விடை கேட்டான். ஸ்ரீ குருதேவரும் அன்புடன் செல்ல பணித்தார். அரசன் சற்று திகைத்து நின்றான்!

குருதேவர்:— என்ன குழந்தே என்னாயிற்று? இன்னமும் ஏதேனும் வேணுமா?

அரசன்:— ஒண்ணுமில்லே ஒண்ணுமில்லே ------?

குருதேவர்:— பின் ஏன் தயக்கம்?

அரசன்:— **ஒருபடி மாவு** ---------???

குருதேவர்:— **ஓ அந்த ரொட்டி விஷயமா???**

அரசன்:— ஆமாம் பிரபோ?

குருதேவர்:— கடகடகடகடகடகட கடகட வெனச் சிரித்தார்.

**குழந்தே அது ராமன் காரியம்!!**

ஒன்று செய். தேவநகரத்தில் இந்திராணி நதிக்கரையில் ஸ்ரீ துகாராம் என்ற ஒர் மஹான் இருக்கிறார். அவரிடம் இதைப் பற்றி கேள். அவர் உனக்கு பதில் சொல்வார் என சொல்லி அனுப்பிவிட்டார்.

**அந்த ஸ்ரீ மஹான் சமர்த்த ராம் தாஸரே**
**உங்கள் பரம் பூஜ்ய ஸ்ரீ பப்பா ராம் தாஸாகும்.**



2

(71)

எம் ஆனந்தத்தின் திருஉருவங்களே!

"அன்பு/சாந்தி!

இது கதையல்ல உண்மையின் கருத்து. அன்பின் பெருக்கம், ஆனந்தத்தின் பிரவாகம். இன்னும் இக்கதைகளையும் கேட்டு மகிழுங்கள்.

ஓர் நாள் அந்த ஸ்வாமி தேவநகரம் செல்ல வாய்ப்பு கிடைத்தது. அன்றும் ஓர் அரசனை சந்தித்து விட்டு தன் நகரம் நோக்கி புறப்பட்டான். இன்று படைகளின் பெருக்கம் சற்று அதிகம். மன்னனுக்கு மேல் இருக்கும் அத்தனையும் குறைவிலார்கள் வரும் வழியில் தேவநகரம் என்ற சிற்றூர். ஊர் கோடியில் நம் ஸ்ரீ பாண்டுரங்கன் ருக்மாயி சமேதனாய் நின்ற கோலத்தில் இருக்கிறான். அங்கு ஊரை ஒதுக்கி புறமாக ஓர் மர நிழலில் ஓர் குடிசை போட்டு அமர்ந்திருக்கிறார். (ஸ்ரீ துகாராம்) இங்கு அரசன் வரும் போது ஓர் ஸ்ரீ மஹானைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆனந்தத்தில் வீரர்களையும் குதிரையும் ஊருக்கு வெளியே நிறுத்தி விட்டு தான் மட்டும் பாதசாரியாய் நடந்து வந்து ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு தெண்டனிட்டு நமஸ்காரம் செய்தான்.

ஸ்வாமி:— மஹாராஜ் இந்த ஏழையுடைய நமஸ்காரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஸ்வாமிகள்:— ஓர் கந்தல் வேட்டியை ஓர் ஊசி கொண்டு தைத்துக் கொண்டிருந்தவர், அரசனின் நமஸ்காரம், அவன் தெரிவேமாக கேட்டு நிமிர்ந்து, ஓ ஸ்வாமியா! நலம் பெறுவாய்! என்ன இத்தனை தூரம்?

அரசன்:— ஸ்வாமிஜி தாங்கள் ஊருக்கு அடுத்துள்ள ஓர் நகரத்தில் ஓர் அரசனை சந்தித்தேன். அங்கிருந்து புறப்படும் போது அந்த அரசன் தேவநகரம் என்ற கிராமம் அருகில் தானே உள்ளது, அதன் அருகே தான் இந்திராணி என்ற நதி ஓடுகிறது, அதன் கரையில் தான் ஸ்ரீ மஹான் துகாராம் ஸ்வாமிகள் இருக்கிறார். செல்லும் போது அவரையும் தரிசித்துச் செல் என சொல்லி அனுப்பினான்.





உ

ஸ்வாமிகள்:— ஓ ஓ அவரா அவன் ஓர் ராமனி வைத்தியம். அடியேன்
விட்டல் வைத்தியம். அதனால்தான் எம்மை சுட்டிக்
காட்டியிருக்கிறான். சரிசரி உன்னிடம் பேசநேரம்
பிடிக்க வேண்டாம் அனைவரும் நதியில் நீராடிவிட்டு
சீக்கிரம் வாருங்கள் இங்கு ரொட்டி தட்டி சாப்பிட்டு
விட்டு போகலாம் எனத் துரிதப்படுத்தினார்;
நம: ஸ்வாமிகள்.

அரசன்:— முதலில் திகைத்தவன் சுற்றும் முற்றும் பார்த்தான்
அந்த உபரோ வெளிச்சோடிக் கிடந்தது. தயங்கினான்.

ஸ்வாமிகள்:— என்ன தயக்கம்? ரொம்ப பசியோடு வந்திருக்கிறீர்
கள் சாப்பிடாமல் நீங்கள் யாரும் போகக்கூடாது.

அரசன்:— ஸ்வாமி அடியேன் தனி நபரல்ல முன்னூறு பேருக்கு
மேல் குதிரைகளுடன் வந்திருக்கிறோம். நான் தனியாக
சாப்பிட முடியாதே அதனால்தான் தயக்கம்?

ஸ்வாமிகள்:— சிரித்துக் கொண்டே முன்னூறு பேர் என்ன? மேவாயி
ரம் பேர் வந்தாலும் எம் விட்டலன் பசியோடு அனுப்ப
மாட்டான். அவன் அன்னதான ப்ரபு!!!

அரசன்:— செய்வதறியாது மனதில் திகைத்தான் இருந்தும்
"ஸ்ரீ குருதேவர் கிருபையே" என உணர்ந்தான் பரிவாரங்
களுடன் நதியில் நீராடினான் நெற்றியில் சந்தனை
கோபி இட்டுக் கொண்டான். வந்து ஸ்வாமிகளை தண்
டனிட்டு நமஸ்கரித்தான்.

ஸ்வாமிகள்:— கைத்துக் கொண்டிருந்த துணியை ஓர் ஓரமாக வைத்
தார். "அடே கோபாவா" என தம் சிஷ்யனை அழைத்தார்.
எங்கேயோ நின்றிருந்தவன் போல் ஒரு பையன் கட்டுக்
குடுமியுடன் ஸ்வாமிகள் எதிரில் வந்து நமஸ்கரித்தான்.
ஸ்வாமி என்ன ஆக்ஞையோ என்றான் அந்த கோபாலன்.?
இவனுக்கு "ஒருபடி ஆட்டா (மாவு)"
அந்த பெரிய பாத்திரத்தில் போட்டுக் கொள்ளென்றார்.





அரசனுக்கு ஒரே ஆச்சரியம். அந்த கோபாலனும் ஓர் பெரிய பாத்திரத்தில் "ஒருபடி ஆட்டா(மாவு)" போட்டு, ஐயா! இந்தாருங்கள் என்று பணிந்த குரலில். ஸ்வாமிகள் அப்பாத்திரத்தை தம் கைகளால் வாங்கி அதை அரசனிடம் கொடுக்கும்போது

**"ஜெய ஜெய விட்டல், ஹர ஹர விட்டல்"**

என ஸ்ரீ விட்டலின் நாமத்தை சொல்லி கொடுத்தார். அதை வாங்கும் அரசனும் "ஜெய ஜெய விட்டல் ஹர ஹர விட்டல்" என ஸ்ரீ பகவன் நாமாவை சொல்லியே வாங்கினான்.

அந்த மாவில் வந்த ரொட்டிகளும் அரசனும் மற்றும் வீரர்களும் குதிரைகளும் உண்டது போக மீதி இருந்தது. அரசனுக்கு ஒரே ஆச்சரியமே புரியவில்லை. ஸ்வாமிகளும் இனி நீங்கள் ஆனந்தமாகச் செல்லலாம் என்றார். அரசன் சற்று தயங்கினான்?

என்ன தயக்கம் என்றார் ஸ்வாமிகள்? அரசனுக்கு பேச்சு வரவில்லை, கண்களில் கண்ணீர் தாரை தாரையாக ஓடியது.

இன்னும் ஏதேனும் தேவையா? என்றார் ஆனந்த சிரிப்புடன்.

அரசன்:- ஒன்றுமில்லை! வேறொன்றுமில்லை -----?

ஸ்வாமிகள்:- பின் ஏன் தயக்கம்?

அரசன்:- **"அந்த ஒருபடி மாவு"** -----???

ஸ்வாமிகள்:- ஓஹோஹோ **அந்த ரொட்டி விஷயமா?**

அரசன்:- ஆமாம் பிரபோ?

ஸ்வாமிகள்:- முதலில் கலகலவென சிரித்தார் பின்

**"குழந்தாய்! அது விட்டல் காரியம்"!!**

இதன் ரகஸ்யம் உனக்கு தெரிய வேண்டுமாயின் தண்டகாரண்யம் வனத்திலே சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் ஸ்ரீமான் ஸ்ரீராம் தாஸைப் போய் கேள். இதன் பொருளை தெரிந்து கொள்வாய் என்றார். குழந்தைகளே! அந்த அரசன் தெரிந்தானா? தெரியவில்லையா? அந்த நினைப்பு உங்களுக்கு வேண்டாம் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்





## 2

## ஒரு உண்மையை உணரவும்.

அன்பின் அம்ச ஸ்வரூபங்களான எம்

**அன்பு ஸ்வாந்தி!**

எல்லோருக்குமே இதன் ரகஸ்யத்தை அறிய ஆவல் அதிகமாகத் தான் இருக்கும்; ஓர் அரிய விஷயம்.

1 ———————————— 2

இது ஓர் நீளமான கயிறு என வைத்துக் கொள்ளுங்கள். இக் கயிறுக்கு இரண்டு நுனி உண்டு என்பதுவும் உங்களுக்குத் தெரியும். இந்த இரு முனைகளும் இணைந்தால் தான் அதை முடிச்சு போட முடியும். இரு முனைகளும் இரு துருவங்கள். இரண்டும் ஒன்று சேராது. இது மனிதப் பிணைப்பாலோ இணைப்பாலோ, ஒன்று சேரக் கூடாது. இது தெய்வ இணைப்பு அல்ல பிணைப்பு அல்ல 'தெய்வ கருணையால்' ஒன்று சேர வேண்டும். இந்த இரு முனைகளையும் இரு நபராக வைத்துக் கொள்ளுங்கள். ஒன்று பகவான் - பக்தன்! மற்றொன்று ஸத்குரு - ஸத்சிஷ்யன்! இந்த ஸ்ரீ பகவானையும், ஸ்ரீ ஸத்குருவையும் பற்றிய கேள்வி இல்லை, பக்தனையும் சிஷ்யனையும் பற்றிய கேள்வி தான் உண்டு. இங்கு கேள்வியென்பதும் இது தான் அதாவது.

### பக்தன் அல்லது சிஷ்யன்.

1. உடல் உலக சம்பந்த 'குண தோஷம்' இல்லாதிருக்க வேண்டும்.
2. தன் தெய்வ நம்பிக்கையிலும் குரு நம்பிக்கையிலும் அசைக்க முடியாத 'திட வைராக்யமாக' இருக்க வேண்டும்.
3. தெய்வீக சங்கல்பத்தையோ? குருதேவருடைய சேவா மகிமையால் பெற்ற அனுபவத்தை வெளி 'இரந்தை குறையாய்' இருக்க வேண்டும்.
4. 'உலகம் நிலை பெயர்ந்தாலும், தன் உடல் இளைத்து போனாலும், தன்னாட்டத்திலே' திடமும் உறுதியும் உடையவராக இருக்க வேண்டும்.
5. இறை இருமையும், குரு இருமையும் பரிபூரணமாக இருக்க வேண்டும்.

ஆக இந்த ஐந்தும் மராட்டிய மன்னன் சிவாஜியிடம் பூரணமாக இருந்த தென்றே யாம் பிரமாணமாகச் சொல்லிடுவோம்.





உ

ஓம் அன்பு ஞானச் செல்வங்களே!

**அன்பு! சாந்தி!**

நம்முடைய ஆனந்தாஸ்ரமத்தில் சர்வசதா ஒலித்துக் கொண்டிருக்கும் "ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்" என்னும் மூலமந்திரத்திற்கு எம்பிரபு ஆஞ்சநேயர் கொடுத்த விளக்கம் அனைவரும் அறிந்ததே! அதே ஸ்மரணையில் தான் எம்பிரபு சமர்த்த ராம்தாஸ் இருந்தார். அவர் அம்சம் பெற்ற பூஜ்ய ஸ்ரீ பப்பா ராம்தாஸ் அவர்களும் இருந்தார். ஸ்ரீ வால்மீகி அம்சபூதரான ஸ்ரீமஹானாகிய உங்கள் ஸ்ரீகுருதேவராகிய ஸ்ரீ ஸச்சிதானந்த ஸ்வாமிஜியும் இருக்கிறார். அவர் அன்புக்குழந்தையான ஸ்ரீவ ஸ்ரீ மஹான் ஸ்ரீ முக்தானந்த ஜீ மஹராஜ் அவர்களும் இருக்கிறார். இவர்களுடைய அன்புமழலைகளாகிய நீங்கள் அனைவரும் இந்த உதவாக்கரைபைத்தியமும் இணைந்து அதே ஸ்மரணையில் தான் இருக்கிறோம். இந்த மந்திரமானது சக்தி வாய்ந்த மந்திரம் எனசொல்லக்கூடாது. சக்தி வாய்ந்த மந்திரம் என சொன்னால் "வந்த சக்தி போய்விடும்" ஆனால் இந்த "ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்" என்ற மந்திரமானது **மூலமந்திரமாக** இருப்பதால் இது அனைத்து சக்திகளையும் தனக்குள் **தாமே அடக்கி தாம் தாமாக பிரகாசிக்கும் "தாரக" மந்திரமாகும்!!!**

இதைப் போலவே ஸ்ரீ துகாராம் ஸ்வாமிகளும் உச்சரித்த மந்திரமானது "ஜெய ஜெய விட்டல், ஹர ஹர விட்டல்" என அமைந்ததும் ஓர் சக்தி வாய்ந்த மந்திரமே. பெரும்பாலும் இந்த "விட்டல்" நாமத்தை அனேக பக்தர்கள் மூலமந்திரமாகவே "விட்டல் விட்டல்" என ஜபிக்கிறார்கள்.





உ

அவர்கள் உணர்ந்தார்களோ உணரவில்லையோ நீங்கள் அவசியம் உணர வேண்டும்.

விட்டல்:- விட்டல் என்றால் "விட்டு அகல்" என பொருள்படும். (அதாவது விட்டு + அகல் = விட்டல்) அப்படியானால் எது அகல வேண்டும்? எனக் கேட்டால்; உடல் உலகத்தை விட்டு அகல்; நாம ரூபங்களை தோற்றத்தை விட்டு அகல்; சொந்த பந்த பாசம் பிணைப்புகளை விட்டு அகல் என "அஞ்ஞானத்தை விட்டு அகல்" என உணர்த்துகிறது

அப்படியானால் அஞ்ஞானம் நம்மை விட்டு அகன்று விட்டால் அனைத்தும் "மெய்ஞானமே" அந்த மெய்ஞானமே "இறைவன் இருமை" அதைப் பெற்று விட்டால் வேறு பெறுவதற்கு என்ன இருக்கிறது? மேலும் இரண்டு சேர்ந்து பேதம் இல்லாமல் ஹரியையும் ஹரனையும் இணைத்தே "ஜெய ஜெய" என்றும் "ஹர ஹர" என்றும் அறுதியிட்டு கூறுகிறது இந்த மந்திரம்.

அம்மா!

அன்பு, சாந்தி! உலகின் விலையுள்ள பொருள் (1 படிமாவு) முக்கியமல்ல.

அதை கொடுக்கும் உள்ளம் எப்படி இருந்திருக்க வேண்டும்?
அதை அன்போடு வாங்கும் உள்ளம் எப்படி இருந்திருக்கும்??

இதைப்போலவே

உங்களுடைய ஸ்ரீ பரம குருதேவர் "பூஜ்ய ஸ்ரீ ராம் தாஸ்" (பப்பா) உங்களுக்கு உபதேசித்த "ஸ்ரீ ராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம் ஓம்" சர்வ சதா தைலதாரை போல் ஓடிக்கொண்டிருக்க வேண்டும் மேலும் நடந்தாலும், இருந்தாலும், நின்றாலும் கிடந்தாலும், தும்மினாலும் இருமினாலும், ஒரு வஸ்துவை கொடுத்தாலும் வாங்கினாலும் எக்காரியங்களிலும் "**ஸ்ரீ ராம்**" என்ற மந்திரோச்சாரணத்துடன் செய்யுங்கள். உங்கள் உயிர் மூச்சுடன் ஸ்ரீ ராம் இரண்டறக் கலந்து விட வேண்டும்.

உங்கள் மூச்சு நின்று போனாலும் "ஸ்ரீ ராம்" ஸ்மரணை நிற்கக் கூடாது!!



உ

(77)

எம் அன்பின் பெருக்கங்களே!

அன்பு! ஸாந்தி!!

அன்பு, உள்ளம் என்றும், பார்வை, ஸாந்தி என்றும் சொன்னோம்.
ஆகவே "நல்லதையே பார்க்கவேண்டும்" என்பதை
"நல்லதாக மாற்றிப் பார்க்கப் பழகிக் கொள்ளுங்கள்"!
"நல்லதையே கேட்க வேண்டும்" என்பதையும்
"நல்லதாகவே மாற்றிக் கேட்டுப் பழகிக்கொள்ளுங்கள்"!!
இவை மட்டும் முக்கியமல்ல!
காண்பதையும் கேட்பதையும் "அப்படியே" நம்ப வேண்டாம்.
அதை "அப்படியே" பேசிவிடவேண்டாம்.
"ஸ்ரீ ராம்" என்ற சிந்தனையுடன் நீங்கள் பார்க்கவோ கேட்கவோ
பழகிவிட்டீர்களானால் அந்த நாமரூபமோ அதன் ஸப்தார்த்தமோ
அவசியம் உங்களுக்கு "நலமாக" மாற்றி அமைக்கப்படும்.
இங்கு உங்கள் வாக்கு முக்கிய இடம் பெறுகிறது! இனிமையாக,
அமிர்தமான, மிதமாக (குறைவான) வாக்கு அவன் அருளால்
நிலை கொண்டு வரும். தேவை இல்லையானால் அந்த வாக்கு உங்களுக்
குள்ளேயே அடங்கி இல்லாமல் மறைந்து விடும். ஆகவே?
எம் செல்வங்களே! அன்பு! ஸாந்தி!
பார்ப்பதை அவன் அருளால் நலமாக மாற்றுங்கள்!
கேட்பதை அவன் அருளால் நலமாக மாற்றுங்கள்!!
பேசுவதையும் அவன் அருளால் அடங்கி இருந்து
**நலமாக பேசுங்கள்!** உங்களால் முடியும்.
முடியாததை இந்த பைத்தியம் புலம்பாது!

பாபா

பிரம்மஸ்ரீ கிருஷ்ணபாய் மாதாஜி





(ஸத்யவாக்கை)

ஸத்யம் பேசு. ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலைபெறும்.

# ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓ

ஓம் அன்பில் பிறந்து, அறிவில் வளர்ந்து, கருணையோடு இருந்து, உண்மையை உணர்ந்து, பக்தியில் ஆழ்ந்து, ஸ்ரீ ஸத்குரு சேவையில் கனிந்து, ஆஸ்ரம பணியில் நிமிர்ந்து, தன் நலத்தை அழித்து, பரோபகாரத்தை வளர்த்து, அபிமான அஹங்காரங்களை தொலைத்து, தான் இறந்து, தவவனில் கலந்து நேர்மையில் நிறைந்து, தன்னலமற்ற தியாகப் பெருஞ்சுடரே! தனக்கு நிகரெங்கில்லாத தியாக செம்மலே! "ஆனந்தாஸ்ரம **வழிகாட்டியே**"!

**"ஸத்சித் ஆனந்த" "ஸொரூப எம் தவக் குழந்தையே"!!!!**

உலகமும் ஜீவர்களும் நலமாகவே இருக்கிறார்கள்.

ஆனால்?

மனதின் வசம் அகப்பட்டுக் கொண்ட தன்மையினால் நான் என்றும், என்னால் முடியும் என்றும், என்னுடையது என்றும் அஹங்கார அபிமானத்தில் மாட்டிக் கொண்டு சர்வசதா சஞ்சல மனதுடையவர்களாய் துன்பத்தையே இன்பமாக கருதி அவதியுறுகிறார்கள். எங்கோ ஒன்றிரண்டு ஜீவர்களும் சாதனை செய்கிறோம் எனச் சொல்லி "**மனை**" வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம், ஆகிய அதி உயரமான இடத்துக்குப் போய், ஓர் நாள் அங்கிருந்து தலைகீழாக விழுந்து





உ

கெட்டழிந்து போகிறார்கள். இவர்கள் தங்களை
வழிகாட்டிகளென்று (குருமார்களென்று)
சொல்லிக் கொண்டு "குருடனுக்கு ஓர் குருடன்
வழி காட்டுவது போல" வழிகாட்டிக் கொண்டி
ருக்கிறார்கள்." இதுதான்
இன்றைய "**கலியுக தோஷ**"
தர்மமாகும்.

இவைகளை சரியென்றோ தவறு என்றோ சொல்வது,
"நம் போன்றவர்களுக்குப்"
"**பொருந்தாது**"!!!

அன்பின் சொரூபமான குழந்தாய்!

யாதெனில் சுருக்கமாக சொல்கிறேன். ஸத் ஸித் ஆனந்தா விஷயம்

1 சில நாட்களுக்கு முன் ஓர் மெய்யன்பர் இந்த வைத்தியத்தை சந்தித்து சில கேள்வி கேட்டார் அவைகளே!

கேள்வி:— ஐயா தாங்கள் ஆனந்தாஸ்ரமம் அதிகமாக போய் வருவதாக அறிகிறேன். தாங்களோ "சுத்த அத்வைதி" அங்கு அப்படி வேத வேதாந்தம் சாஸ்திர பாடம் ஒன்றும் இருப்பதாக காணோம். அந்த ஆஸ்ரமம் எப்படி உங்களுக்குப் பிடித்தது?

பதில்:— ஐயா! அங்கு வேத வேதாந்த சாஸ்திர பாடம் இல்லையென்று சொல்கிறீர்கள்? எப்படி அறிந்தீர்?

கேள்வி:— யானும் பலமுறை போய் இருக்கிறேன். அங்கு "ஸ்ரீ ராம நாமா" வைத்து வேறு எதுவும் இருப்பதாக தெரியவில்லையே?

பதில்:— இருந்துக் கொண்டே ஸ்ரீராமநாமாவை என்னவென்று கருதுகிறீர்கள். அதன் தன்மை என்னவென்பதாவது தெரியுமா உங்களுக்கு?

கேள்வி:— ஏன் தெரியாது? இந்த ராம நாமா தான் உலகமெங்கும் பரவி இருக்கிறதே? ஏன் நம் தமிழ்நாட்டிலும் தான் பல ஆயிரக் கணக்கில் "எழுதியும் ஜபித்தும்" வருகிறார்களே!

பதில்:— இந்த எழுதியும் ஜபித்தும் வருகிறார்கள் என்கிறீர்களே, அது எந்த முறையில் நடந்து வருகிறதென்பதை தாங்கள் அறியவில்லையா?

கேள்வி:— எந்த முறையில் நடந்து வருகிறது?

பதில்:— எங்கும் நடைபெறும் ஸ்ரீராமநாமா எப்படி நடந்து வருகிறதென்றால்?



உ

வியாபாரமாகவும், விளம்பரமாகவும், ஆடம்பரமாகவும் தான் நடைபெறுகிறது என்பதை தாங்கள் அறியாததா?

கேள்வி:— ஏன் அங்கும் தான் "ராம நாமா பேங்க்" என ஒன்று வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் ராம நாமா வியாபாரம் செய்யப்படுவதை தாங்கள் அறியவில்லையா?

பதில்:— அனைத்தும் அறிவோம். ஆனால் மற்ற இடங்களைப் போல் அல்ல. அங்கு உள்ள நேர்மை! ஒழுக்கம்! தெளிவு! "நம்பிக்கை" இவைகள் வேறு எந்த இடங்களிலும் இல்லை என்றே சொல்லுவோம்.

கேள்வி:— நன்றாக அனுபவித்திருக்கிறீர்கள் என உணர்கிறோம். யாரும் "ஆனந்தாஸ்ரம அன்பன் தான்" இருந்தாலும் ஓர் அத்வைதி இப்படி நாமஜபத்திலும் நாமபஜனையிலும் கலந்து கொண்டவர்கள் உலகமெங்கும் தேடிப்பார்த்தாலும் ஒருவரும் இரார்.

பதில்:— ஐயா வேதாந்தம் மற்றும் உபநிஷதங்களை கற்றுக் கொண்டாலும் "நாம் ஆத்மா! நாம் பிரம்மம்" என்ற "வறட்டு" வேதாந்தம் நிறைநிலை தராது! "கனிவும் பணிவும்" இல்லையானால் அவன் எத்தனை சாஸ்திர பண்டிதனாக இருந்தாலும், "வித்வான், கத்துவான்" என்ற நிலை தான் பெற முடியுமே தவிர அவன் "உணர்ந்த ஞானியாக மாட்டான்" "அவன் விளக்கம் கோடானுகோடி கொடுக்கலாம். ஆனால் அனுபவ ஞானம் பெற முடியாது"! அனுபவ ஞானம் என்பது அடங்கி இருக்க வேண்டும்! அடக்க நினைப்பது மகா தவறாகும்! ஸ்ரீராம நாமத்தின் தெய்வ நிலையை பெறாமல், பரம் நாம் என்ற "சத்தியபர நிலையை பெற முடியாது"!

கேள்வி:— ஐயா! எம்மை மன்னியுங்கள். ஓர் அத்வைதி இந்த அளவுக்கு பணிவும் கனிவும் வைத்திருக்கிறார் என்றால் அவர் பெருமையை உரைக்க எம்மால் ஆகாது. ஐயா! ஓர் கேள்வி! உலகமெங்கும் ஸ்ரீராம நாமா வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம் என சொன்னீர்கள், அந்த ஆனந்தாஸ்ரமம் ஒன்றே உண்மையின் நிலையில் இயங்குகிறது என்றும் சொன்னீர்கள். இதற்கு உண்மையின்





உ

நீவியில் ஓர் விளக்கம் கொடுக்கமுடியுமா?

பதில்:— ஐயா! "ஸ்ரீராம" என்பதை மந்திரமாகவோ நாமாவாகவோ "தெரிந்தோ தெரியாமலோ" சொன்னாலும் அவசியம் பலன் தந்தே தீரும்.

"உணராமல் சொன்னால்":— அரை லிட்டர் பசும் பாலில் சக்கரை மட்டும் போட்டு அதை காய்ச்சி சாப்பிட்டால் "என்ன பலன்" கிடைக்குமோ அது மட்டும் கிடைக்கும்.

"உணர்ந்து சொன்னால்":— அரை லிட்டர் பாலை சுண்ட காய்ச்சி கால் லிட்டர் ஆக்கி, அதில் பாதாம் பருப்பு, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் ஏலம், லவங்கம் இப்படி "சத்துள்ளவைகளை" அளவாகப் போட்டு சாப்பிட்டால் "என்ன பலன்" கிடைக்குமோ அது கிடைக்கும்!

கேள்வி:— ஐயா! உங்களிடம் பேசிக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஓர் கேள்வி? மற்றும் இடங்களில் ஸ்ரீராம நாமா சொல்வதிலும், ஆனந்தாஸ்ரம அன்பர்கள் ஸ்ரீராம நாமா சொல்வதிலும், அப்படி என்ன சிறப்பு இருக்கிறது என்பதை சற்று சொல்லமுடியுமா?

பதில்:— நல்ல ஆளையா நீங்கள்? இதற்கு வேறென்ன விளக்கம் கொடுக்கமுடியும்? சரி உங்கள் கேள்விக்காக இதை கொடுக்கிறேன் நன்றாக கவனிக்கவும்.

உலகமெங்கும் நடைபெறும் ஸ்ரீராமநாமா பசுவின் உடல் முழுவதும் பரவி இருக்கும் பால் போன்றதாகும்! (ஆனால் அந்த பால் உபயோகப்படுத்த முடியாது)

ஆனந்தாஸ்ரம பீடத்தில் நடைபெறும் ஸ்ரீராமநாமா பசுவின் மடியிலிருந்து சுரக்கும் பாலுக்கு ஒப்பாகும்.

அந்த பால் **உபயோகத்திற்கு** உரியதாகும்!!

கேள்வி:— ஐயா போதும் போதும்! ஐயா ஓர் சிறிய சந்தேகம். ஐயா நாங்கள் பெண் தெய்வங்களை விரும்புவதில்லை (வெறுப்பதும் இல்லை) என்றும், அதேபோல் பெண்களாக தோன்றிய எந்த மகான்களையும் விரும்புவதும் வெறுப்பதும் இல்லையென்றும், கண்டும் காணாமல் சென்று விடுபவராக கேள்விப்பட்டதுண்டு உண்மையா?





உ

பதில்:- இது என்ன கேள்வி ஐயா? பெண்கள் என்றால் சக்தி யென்றும், ஆண்கள் என்றால் சிவம் என்றும், ஓர் கொள்கையை உடையவன் யாம். எமக்கு "சிவம் ஒன்றே போதும்" என்றும் அசைவு வேண்டாம் என்றும். சும்மா சிவமே என இருக்கலாமே என ஓர் அடிப்படை கொள்கை உடையோம். அது எதற்காக இப்படி ஓர் கேள்வி கேட்கிறீர்கள்?

கேள்வி:- ஐயா எம்மை மன்னிக்கவும்! ஐயா யாம் சென்ற சில முறை ஆனந்தாஸ்ரமம் சென்றிருந்தபோது தாங்கள் எங்கள் ஸ்வாமிஜி ஸச்சிதானந்தாவுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் எழுதிய தபால் பற்றி கேள்விப்பட்டோம். "அதில் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி" எங்கள் பூஜ்யஸ்ரீ பப்பா ராம்தாஸ் அவர்கள் "சமர்த்த ராம்தாஸ்" என்றும், எங்கள் பிரியஸ்ரீ ஸச்சிதானந்த மஹாராஜ் அவர்கள் "வால்மீகி" என்றும் தாங்கள் உணர்வு பூர்வமாக உணர்ந்து அதை உணர்த்தி எழுதியிருப்பதாக யாம் அறிந்ததிலிருந்து எம் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லாமல் போய் விட்டது.

மேலும் ஓர் சிறிய வேண்டுகோள்!

உங்களை இப்படி சிரமப்படுத்தியதற்காக மன்னிப்பு வேண்டுகிறேன்.

காரணம்!

பரம்பூஜ்ய ஸ்ரீ பப்பா அவர்களின் ஸத்சிஷ்யையாயும், ஸ்ரீ பப்பாவுக்கு ஓர் அன்பு தாயாகவும். மேலும் சில சமயங்களில் ஸ்ரீ பப்பாவுக்கு முக்கிய ஆலோசனை சொல்லும் குருவாகவும், ஆனந்தாஸ்ரம முன்னேற்றத்திற்கே "**பெரும் தூணாக**" இருந்தவர் எங்கள் "**மாதாஜி கிருஷ்ணாபாய்**" அம்மையார் தான் என்றும், பூஜ்ய பப்பாஜியும் சொல்லி இருக்கிறார்கள். எங்கள் பூஜ்யஸ்ரீ ஸச்சிதானந்த ஜீ மஹாராஜ் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள் மேலும் எங்கள் பிரிய ஸ்வாமிஜியாயும் ஓர் கர்மயோகியாயும் அமைந்த ஸ்ரீ ஸ்ரீ முக்தானந்தஜியும் சொல்லி இருக்கிறார்கள்.



உ

அப்படிப்பட்ட லோகமாதாவான எங்கள்
அன்னை பிரம்மஸ்ரீ கிருஷ்ணபாய் அவர்கள் எப்படியும்
ஓர் மகத்தான அவதாரமாகத்தான் இருக்கவேண்டும்.
கிருபாவநாணியாகிய தாங்கள் தயவு செய்து இந்த
எளியேனுக்காகவும் மற்றும் ஆனந்தாஸ்ரம உத்தம
அன்பர்களுக்காகவும் இவ்வேண்டுகோளை ஏற்று அருள
வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். தயை செய்து இக்கேள்வியை மட்டும்
உதாசீனம் செய்ய வேண்டாம். இது தாங்கள் அறியாததல்ல? என
அன்பாகவும், பணிவாகவும் உள்ளக்கனிவாகவும் முறையிட்டார்.

எம் ஸத்யத்தின் சொரூபமே!

ஸத் சித் ஆனந்தா! அந்த
அன்பரின் இந்த கேள்விக்கு யாம் எந்த பதிலும் சொல்லவில்லை. ஐயா
அடுத்த முறை சந்திக்கும் போது இதற்கு விளக்கம் அவஸ்யம் பெறுவீர்
கள். "திரு அருள் நடத்தி வைக்கும்! குரு அருள் கூட்டி வைக்கும்"!!
என சொல்லி விடை பெற்றோம் இருவரும். அந்த அன்பர் கேள்வி கேட்ட
மறுநாள் எம தய்யன் (திருடன்) கண்ணனிடம் ஓர் முக்கியமான
சம்பவம் உரையாற்றும் போது இந்த கேள்வியும் தெய்வாதீனமாக
வெளிவந்து விட்டது. எம தய்யன் கலகலகல வென சிரித்தான்.
அவன் இந்த விளக்கம் கொடுத்தான்!

எம் அன்புருவே!

ஸத்சிதானந்தா! இவ்விளக்கத்திற்காக ஓர் சிறிய
கதை சுருக்கமாக சொல்கிறேன். கவனமாக கேட்பாயாக! இது ஓர்
பக்தவிஜயத்தின் ஸ்ரீ ஞானேஸ்வரர் வரலாறாகும் இந்த கதையில்தான்
அந்த பிரம்மஸ்ரீ கிருஷ்ணபாய் மாதாஜி அடங்கி இருக்கிறார்கள். இது
பற்றி எழுதுவதானால் பல வாரமாகும். ஏனெனில் இதில் "குரு சிஷ்ய
பாவனையில்" உபதேச கருத்துக்கள், பக்தியும் ஞானமும் பின்னிக்
கிடக்கிறது. அதுகாலப் போக்கில் எம தய்யன் உணர்த்தி அவன்
எழுதப் பணிக்கும் போது எழுதும் இந்த வைத்தியம். தற்சமயம் அந்த
அன்பர் உள்ளன்புடன் கேட்ட கேள்வி நிமித்தமாகவும் உங்களைப்
நம்குழந்தைகளுக்கும் அவஸ்யம் தேவைப்படுவதால், சுருக்கமாக
ஸ்ரீ கிருஷ்ணபாய் மாதாஜி எவர் அம்ஸம் என்பதை மட்டும்
சற்று சுருக்கமாக எழுதியிருக்கிறேன். ஸ்ரீ கிருஷ்ணபாய் மாதாஜி

அன்பின் பிறப்பிடம்; சேவையின் இருப்பிடம்.



உ

# "ஞானேஸ்வரர்"

## கதை சுருக்கம்!

மராட்டிய நாட்டில் ஓர் உயர்ந்த அந்தணகுலம்
பத்தில் வெகுகாலம் குழந்தை இல்லாமல் இருந்து
தெய்வ வரப்பிரசாதத்தால்" ஓர் ஆண் குழந்தை பிறந்தது
அதன் நாமம் "**விடோபா**" ஆகும்!
இந்த விடோபாவின் முன் அவதாரம் சொன்னால் தான்
கதை சுவாரஸ்யமாகும்.

திரேதாயுகத்தில் அயோத்தியில் தசரதனுக்கு ஸ்ரீராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்னன் என்ற நான்கு குழந்தைகள் திரு அவதரித்தார்கள். அச்சிறுவர் நால்வருக்கும் 3, 4, 5, 6, என வயதிருக்கலாம் (உதாரண வயது அது உண்மை அல்ல) அரண்மனை அந்தப்புரத்தில் குல குடும்ப குரு ஸ்ரீ வசிஷ்டருடன் அமர்ந்து தசரதன் ஏதோ ஓர் முக்கியமான விஷயம் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அது சமயம் அரசனின் குழந்தைகள் நால்வரும் அப்பா, அப்பா! என கூப்பிட்டுக் கொண்டே வந்தனர். வந்த நால்வரும் தந்தையான தசரதன் மடியில் அமர போட்டி போட்டனர். அந்த போட்டா போட்டி அமைந்ததென்றால்?

1. ராமன் தந்தையின் மடியில் அமர்ந்தவண்ணம் தம் இருகைகளாலும் தந்தையின் கழுத்தை சுற்றிப் பிடித்துக் கொண்டான்.
2. லட்சுமணன் தந்தையின் பின்புறம் தொங்கிய நிலையில் தம் இருகைகளாலும் தந்தையின் கழுத்தை சுற்றிப் பிடித்துக் கொண்டான்.
3. பரதனும் சத்ருக்னனும் தம் தந்தையின் இடப்பக்கமும் வலப்பக்கமும் தொங்கிய நிலையில் கழுத்தை சுற்றிப்பிடித்தவண்ணம் தொங்குகிறார்கள்.

எம் செல்வ மழலையே!

ஸத்ஸித்ஆனந்தா! இந்த நான்கு குழந்தைகளும் நான்கு திசைக்கும் தம் தந்தையின் கழுத்தைப் பிடித்து அங்கும் இங்குமாக இழுக்கின்றனர். இந்நிலையில் மன்னன் தசரதன்

"**இன்பமான அவஸ்தையில்**"

அதாவது "கடும் அவஸ்தையை இன்பமாக" அனுபவிக்கிறான்.



இக்காட்சியை முற்றும் துறந்த முனிவரும், ஓர் ராஜரிஷியும்
ஓர் பிரம்மரிஷியும், ஓர் ஞானியுமான நம் ஸத்குரு
“**வஸிஷ்டர்**” காண்கிறார். அந்நிலையில்
அவர் மனதில் “**ஓர் சபலமான**” எண்ணம்
உருவாகிறது. அது எப்படி என்றால்?

ஹே பரமாத்மா! “பெற்றால் இப்படிப்பட்ட பிள்ளை செல்வத்தை அல்லவோ
பெறவேண்டும்!” (விஷ்ணு, ஆதிசேஷன், சங்கு, சக்கரம்)
“அவஸ்தைப்பட்டால் இப்படி குழந்தை செல்வங்களால்
அல்லவோ அவஸ்தை இன்பத்தை அனுபவிக்கவேண்டும்”!

# “கடந்த ஞானியும், கடப்பரோ” (கும்)
# “மக்கள் மேல் காதல்”

என்ற ஓர் மஹான் பாடிய பாட்டுக்கிணங்க நம் ஸத்குருதேவரான
வஸிஷ்டரும் பாசவலையில் ஓர் “**நொடிதான்**”
(நிமிஷமல்ல, மணி அல்ல, ஓர் நாள் அல்ல) வீழ்ந்தார்.

அந்நிலையை எமதய்யன் உணர்ந்தான்!
“**ததாஸ்து**” என்றான்.

காட்சி மாறியது, நிகழ்ச்சி மாறியது பரமபதத்தில் எம்இறைவனும்
பிரம்மரிஷி வஸிஷ்டர் பிரானும் உரையாடிக்கொண்டிருக்கின்றார்கள்.
ஸ்ரீபகவான்:— ஓ மஹாத்மா! வஸிஷ்டர் பிரானே! நீர் உம் ஸங்கல்பத்தினால்
உமக்கு நான்கு குழந்தைகள் வேண்டுமென்றும் அதனால் இந்த
“இன்பமயமான அவஸ்தைபடவேண்டுமென்றும்” எண்ணம்
கொண்டது உத்தமமே! காரணம் நாங்கள் நால்வரும் அதாவது
விஷ்ணு, பிரம்மா, சிவன், ஆதிசக்தியாகிய நால்வரும் பூலோ
கம் சென்று “ஜீவ உத்தாரணம்” (ஸத்யத்தையும், தர்மத்தையும்,
பக்தி ஞானமார்க்கங்களையும்) செய்ய வேண்டுமென்று திருவுள்ளம்
கொண்டோம். அந்நிலையில் பூலோகத்தில்

உ



எங்கள் நால்வருக்கும் மாதா பிதாவாக யாரை
நியமிக்கலாம் என ஸங்கல்பம் செய்து பார்த்ததில்
"உம்மையும், உம் தர்மபத்தினியையும் தான்"
நியமிக்கலாம் என முடிவு செய்தோம். அந்த நாடகத்தின்
பலன் உமக்கு தசரதன் மூலமாக ஓர் நிகழ்ச்சியை உண்டு
பண்ணி உமக்கும் இந்த எண்ணத்தை வரவழைத்தோம்.
ஆகவே நீரும் உம் தர்மபத்தினியும் பூலோகம் சென்று
திருஅவதரியுங்கள் என அன்போடு ஆணையிட்டு ஸ்ரீவஸிஷ்டரை அனுப்பி
வைத்தான் எம்ஸ்ரீபரமாத்மா!

"அவன் ஆணையின்படி திருஅவதாரம் செய்தவர்தான்"
வஸிஷ்டர் என்ற **"விடோபா"!!!**

இனி கதையை கவனமுடன் கேட்பாயாக!

இந்த விடோபா திருமணம் வேண்டாம் என்று பிரம்மச்சாரியாகவே
இருந்தான். இவனுடைய 25 வயதில் மாதாபிதா இருவரும் இயற்கை எய்தினர்.
மாதாபிதா ஈமச்சடங்குகளை முடித்து அவர்கள் அஸ்தியை எடுத்துக்
கொண்டு காசிக்குப் புறப்பட்டான். காசியில் சென்று அஸ்தியை கரைத்து
விட்டு அங்கேயே ஓர் ஸத்குருவை தேடி அடைந்து அவர் மூலம் "ஜீவன்முக்தி
அடைய வேணுமென்று ஸங்கல்பித்து காசியை நோக்கி நடந்தான்.

செல்லும் வழியில் ஓர் அக்ரஹாரத்தில் தெருக்கோடியில்
உள்ள வீட்டின் வெளித் திண்ணையில் இரவு படுத்து காலையில் நடக்கலாம்
என எண்ணி படுத்து விட்டான் விடோபா. அந்த வீட்டில் சிதோபந்து"
என்ற ஓர் அந்தணர் (மனைவி இல்லை) தம் ஒரே மகளுடன் வசித்து வந்தார்.
அந்த பெண்ணின் நாமம் "ருக்மாபாய்" ஆகும் (வயது 20 ஆகும்).
ருக்மாபாய் வஸிஷ்டரின் மனைவி ஆகும்.

நடு இரவில் அந்த அந்தணர் சிதோபந்துவின் கனவிலும், அவர்
மகள் ருக்மாபாய் கனவிலும், ஸ்ரீ பகவான் பிரசன்னமாய்,
உங்கள் வீட்டு வெளித்திண்ணையில் படுத்திருக்கும் அந்த பிரம்மச்
சாரிக்கும், உன் மகளுக்கும், திருமணம் நடைபெற வேண்டும், இது எம் ஆணை
என்றும் அந்த பெண் ருக்மாபாயிடம் அவனே உன் கணவன் "இது உறுதி"
என்றும் ஆணையிட்டு விட்டு, விடோபாவின் கனவிலும் ஸ்ரீ பகவான் பிரசன்
னமாய், விடோபா! இவ்வீட்டில் உள்ள ஒரே பெண் பெயர் ருக்மாபாய்
அவளை திருமணம் செய்து சுகமாக வாழ்வாய் என சாதித்து விட்டு மறைந்தான்.
விடோபா பயந்து ஓட, சிதோபந்துவும் ருக்மாபாயும் இது இறைவன் ஆணையைச்
சொல்லி மறுக்காது திருமணம் செய்து வைக்கும்போது, விடோபா சொல்லுவான்;





ஐயா! பெரியவரே! வேண்டாம் என்ற இறைவனைப் பிடித்து இப்படி பலவந்தமாக உம்மகளை திருமணம் செய்து வைக்கிறீர். ஆனால் ஓர் நிபந்தனை! இந்தப் பெண்ணின் கழுத்தில் திருமாங்கல்யம் அணிவேன், அடுத்த விநாடியாம் காசிக்குச் சென்று விடுவோம். அப்புறம் இறைகருணை எப்படியோ காசியிலிருந்து திரும்பி வந்தால் உம் பெண்ணுடன் வாழ்வோம். இல்லையானால் எம்மை நம்ப வேண்டாம் சம்மதமா? என கேட்க? தந்தை தம் மகளை வினவ; ருக்மாபாயும் "இவரே எம் கணவர். இவர் எம் கழுத்தில் மாங்கல்யம் கட்டினால் போதும், வாழ்க்கை இறைவன் வசம்" என சம்மதித்துவிட்டாள். திருமணமும் முடிந்தது, மறு விநாடியே தம் அஸ்திகவசத்ராத நாங்கியவண்ணம் காசி சென்று விட்டான் விடோபா.

எம் தவக்கொழுந்தே! ஸத்ஸித் ஆனந்தா! இறைவன் திருவிளையாடல் அபூர்வமானது! ஆனந்தமயமானது! எப்படியெனில், பக்தியையும் ஞானத்தையும் போதிக்கும் நிமித்தம் திரிலோக சஞ்சாரியாகிய ஸ்ரீ **"நாரதர்"** காசியில் தோன்றி ஓர் மஹானாக அனேக சீடர்களோடு வசித்து வந்தார். இவ்வுருவம் நாரதரின் நாமா

**"ஸ்ரீபாதஸ்வாமிகள்"** என்பதாகும்!

காசிக்கு வந்த விடோபா செய்ய வேண்டிய சடங்குகளை எல்லாம் குறைவின்றி செய்துவிட்டு, "தம் ஞானகுருவாக ஓர் ஸத்குருவை தேடினார்", எம் ஸ்ரீபகவான் கருணையினால் ஸ்ரீ பாதஸ்வாமிகளே ஸ்ரீஸத்குருவாக வரித்துக் கொண்டான் எம் விடோபா! ஸ்ரீபாதஸ்வாமிகளிடம் மந்திரோபதேசமும் தீக்ஷையும் பெற்றுக்கொண்டான் விடோபா. ஓர் ஐந்தாண்டுகள் ஆகிவிட்டன. ஓர் நாள் ஸ்ரீபாதஸ்வாமிகள் விடோபாவை ஆஸ்ரமத்தை பார்க்கச் சொல்லி விட்டு தாம் ஸ்நான யாத்திரையாக கிளம்பியவர், விடோபாவின் மாமனார் ஊருக்கே தெய்வாதீனமாக வந்தார். ஓர் மடக்குடியில் தனியே அமர்ந்திருந்தார் ஸ்ரீபாதஸ்வாமிகள்.

விடோபாவின் மனைவியான ருக்மாபாயும் தம் கணவனை நினைக்காத கணம் இல்லாமல் இருந்து வந்தாள். அன்று நதியில் நீராடிவிட்டு வந்தவள் மரத்தடியில் அமர்ந்திருக்கும் ஸ்ரீபாதஸ்வாமிகளின் திருவடியில் நமஸ்காரம் செய்தாள்.





ஸ்ரீபாத ஸ்வாமிகளும் அவர் கழுத்தில் திருமாங்கல்யம் இருக்கக்கண்டு, இவள் "ஓர் சுமங்கலியே" என உணர்ந்து "ஓர் ஆசிவசனம் செய்தார்" அதாவது "நான்கு ஸத்புத்திரர்களைப் பெற்று சிரஞ்சீவியாக, தீர்க்க சுமங்கலியாக வாழக் கடவாய்"!! என ஆசீர்வதித்து விட்டார்!

"இந்த வாக்கு எமதையன் திருவிளையாட்டே!!

ருக்மாபாய் திகைத்தாள். இவள் திகைப்பை உணர்ந்தார் ஸ்ரீபாதஸ்வாமிகள். காரணம் கேட்டார் ஸ்ரீகுருதேவர். நடந்தவைகளை ஆதியோடு அந்தமாக விளக்கிக் கூறினள். சிதோபந்துவும் வந்து ஸ்ரீ ஸ்வாமிகளை வணங்கினர். நிலைமையை உணர்ந்து கொண்டார் ஸ்ரீபாதஸ்வாமிகள்.

ஸ்ரீபாதஸ்வாமிகள் வாக்யம்!

குழந்தைகளே! "கவலையை விடுங்கள்! பயத்தை விடுங்கள்! எம் வாக்கு பொய்யாகாது! அது ஸ்ரீ பகவான் வாக்காகும்". என சொல்லிவிட்டு நேராக காசிக்கே வந்து விட்டார்! வந்தவுடன் விடோபாவை அழைத்து விபரம் கேட்டார். விடோபா உடனே ஸ்ரீகுருதேவர் பாதங்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கதறி அழுது விபரம் சொன்னான். ஸ்ரீஸ்வாமிகளும் தம் உத்தம மாணவனாக்கி மார்போடு அணைத்துக்கொண்டு நீ ஆக்கியவான், நேராக ஊர் சென்று அப்பெண்குழந்தையுடன் வாழ்க்கை நடத்தி எம் வாக்குப்படி நான்கு குழந்தைகளை பெற்று, அதன் பிறகு "அக்குழந்தைகளால்" ஜீவன் முக்தி அடைவாய், என சொல்லி ஆசிர்வதித்து விடோபாவை அனுப்பி வைத்தார்.

எம் அன்பும் அருளும் ஆசியும் பெற்ற தெய்வ குழந்தாய்! ஸத்ஸித்தி ஆனந்தா!

ஸ்ரீ குருதேவரின் அருளாசியுடன் தன் மாமனாரான சிதோபந்துவை கண்டு வணங்கி அவர் ஆசியும் பெற்று, தம் அன்பு மனைவியான ருக்மாபாயுடன் குடும்பம் நடத்தி, ஸ்ரீ பகவான் இருவையாலும், ஸ்ரீ குருதேவர் அருள் ஆசியினாலும் ஸ்ரீவஸிஷ்டராயிருந்த காலத்தில் தாம் கேட்ட வரப்பிரசாதத்தினாலும் "மூன்று ஆணும் ஓர் பெண்ணுமாக" நான்கு குழந்தைகளை பெற்றெடுத்தாள் ருக்மாபாய்.





எம் ஆனந்தவடிவே! ஸத்ஸித் ஆனந்தா!

இந்த புத்திரர்களை பெறுவதற்கு காரணமாயிருந்த ஸ்ரீபாதஸ்வாமிகள், தம்பிரத்யேக அறையில் அமர்ந்து கொண்டு திரிமூர்த்திகளையும் ஆதிசக்தியையும் வேண்டி அழைக்க, இவர் அழைப்பிற்கிசைந்து

"விஷ்ணு, பிரம்மா, சிவன்" இவர்களுடன்

"ஸ்ரீ ஆதிசக்தியும்" பிரசன்னமாய்,

நாங்கள் நால்வரும் என்ன செய்ய வேண்டும்? எங்களை அழைத்த காரணம் என்ன? ஆணையிட்டால் பணி செய்ய காத்திருக்கிறோம் என பணிவுடன் நவில,

(ஸ்ரீ மஹான்களுக்குள் தெய்வம் அடங்கும்!)

ஸ்ரீபாதஸ்வாமிகள் சொல்வார்!

ஹே தேவாதி தேவர்களே! அம்மா யோகமாயா! நீங்கள் நால்வரும் எம் ஸத்புத்திரனையும், ஸத்சிஷ்யனையும், ஓர் பாகவதோத்தமனுமான, விடோபாவுக்கு நான்கு குழவிகளாக (குழந்தைகளாக) பிறக்க வேணுமென்று பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்கிறோம் என்றார் ஸ்ரீபாதஸ்வாமிகள்.

ஸ்ரீ குருதேவருடைய அருளாசியினால் இந்த நால்வரும் புத்திரர்களாகத் திரு அவதரித்தார்கள், அவர்கள் நாமமாவது:-

ஸ்ரீ விஷ்ணு :- ஞானேஸ்வரர்!

ஸ்ரீ பிரம்மா :- சோபானதேவ்!!

ஸ்ரீ சிவன் :- நிவர்த்திஸாது!!!

ஸ்ரீ ஆதிசக்தியாகிய ஸ்ரீ யோகமாயா :- முக்தாபாய்!!!!



எம் ஞானக்குழந்தாய்!

ஸத்ஸித் ஆனந்தா!

இந்த விதமாக நால்வரும் பூலோகத்தில் திரு அவதரித்து

நிஷ்காம்ய கர்மா! நிஷ்காம்ய பக்தி! யோகம்!

திடவைராக்யம்! வித்தைகளின் பல சாதனை!

முடிவில்!

# "ஆத்ம ஞானம்"!!!

இவைகளை முறையோடு போதித்து "ஜீவ உத்தாரணம்" செய்தார்கள். இவர்களுடைய திருவிளையாடல்களை எழுதுவதானால் பக்கம் 100 ஆனாலும் போதாது. இப்படிசாதித்தஇந்த மகோன்னத குழந்தைகள் தம் தந்தையான விடோபாவை ஓர் சமயம் தடும் கானகத்தில் ஓர் குகையில் சந்திக்கிறார்கள். அக்குகையில்வைத்து ஸ்ரீஞானேஸ்வரர்! சோபானதேவ்! நிவர்த்தி ஸாது! ஸ்ரீ முக்தாபாய் ஆகியநால்வரும் சன்னியாசதர்மத்தையும், ஸாது தர்மத்தையும் விளக்கிக் கூறி முடிவில்

# "அதிவர்ணாஸ்ரம"

தர்மத்தையும் கூறி அபேத திருஷ்டியைமேவச்செய்து,

# "சுத்தஅத்வைத"

நிலையையும் முறையோடு போதித்து, வஸிஷ்டராகிய விடோபாஎன்ன காரணத்திற்காக அவதரித்தாரோ அதைநிறைவேற்றும்படியாக.

தியானத்தில் அமர்ந்திருந்த விடோபாமுன் வந்து அவர் அறியா முன்பு தசரதனுக்கு "இன்ப அவஸ்தையை" கொடுத்த வஸிஷ்டரே! மகேசா! மஹிமைமிகு ஞானேஸ்வரர்! பின்புறமாக சோபானதேவ்! இருபக்கமும் நிவர்த்திஸாதுவும் ஸ்ரீமுக்தாபாயுமாக இருந்து கொண்டு நான்குபேரும் ஒட்டுகரங்களையும் விடோபாவின் கழுத்தைச்சுற்றி பின்னி இறுக்கு

# "பேரின்ப அவஸ்தையை"

முழுமையாக அனுபவிக்கும் நிலையில் திருஅருள் காட்டி வைத்தார்கள் கொழுந்தே! ஸத்ஸித் ஆனந்தா! அந்த பேரின்ப அவஸ்தையை யாரும் இந்த க்ஷணம் அனுபவிக்கிறோம். இதுபேரின்ப அவஸ்தையே! இதுவரை இருந்து மறையும் ஆனால் அந்த பிரம்மானந்த சமுத்திரத்தில் கரைந்துவிட்டால் எந்தஅவஸ்தைகளும் இல்லவேயில்லை தம்பா பாபா.



உ

(92)

ஓம் ஆனந்த சொரூப குழந்தாய்!

ஸத்சித் ஆனந்தா.

இந்த நால்வரும் அவதாரம் செய்த காலம் ஓர் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்தையதாகும். இவர்கள் திருவிளையாடல்களையும் அவர்கள் ஞானக் கருத்துக்களையும் அதிகம் சுவைத்து அனுபவித்ததுண்டு.

ஓர் சமயம் அஷ்டசித்திகளையும் கற்று 1400 சிஷ்யர்களோடு பிரக்யாதி பெற்று வாழ்ந்த "ஸ்ரீ சாங்கதேவர்" என்னும் மஹான் தம் சித்து வல்லமையால் 1400 ஆயிரம் ஆண்டுகள் வரை இருந்தார். இருந்தாலும் சாந்தி இல்லை அமைதியில்லை. ஓர் மரணபய உணர்வு உண்டு. இவர் இந்த மரணபயத்தைப் போக்குவது "ஆத்ம ஞானமே" எனத் தெரிந்து இந்த நால்வருடைய மஹத்வத்தைக் கேள்விப்பட்டு அவர்களிடம் உபதேசம் பெற எண்ணி இவர்கள் இருப்பிடத்தைத் தேடி வந்தார். வந்தவர் தம் சித்தின் மகிமையால் ஓர் புலியை வரவழைத்து அதன்மேல் அமர்ந்து கொண்டு கையில் ஓர் கருநாகத்தையும் ஆயுதமாக ஏந்திய வண்ணம் வந்தார். இப்படி வந்த இந்த யோகியை வரவேற்க நம் ஞானேஸ்வரர், சோபானதேவ், நிவர்த்திநாத், ஸ்ரீ முக்தாபாய் ஆகிய நால்வரும் ஓர் "கட்டமண் சுவர் மீதேறி" அதை ஊர்ந்து போகச் செய்து தம் இஷ்யன் சாங்கதேவரை வரவேற்றார்கள். அந்நிலையில் சாங்கதேவரின் அகம்பாவம் அழிந்தது. அவர் இந்த நால்வருக்கும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். பின் உபதேசமும் பெற்று ஆத்மஞானமும் பெற்றார். ஸ்ரீ முக்தாபாயிடம் சாங்கதேவர் கேட்டார். அம்மா மாதாஜீ! அடியேன் புலி மீது வந்தேனாம். ஆனால் தாங்களோ இடிந்து போன ஓர் கட்டமண் மீது (உயிரற்ற ஜடம் மீது) ஏறி வந்தீர்கள். இதுவும் சித்திகள் சம்பந்தப்பட்டது தானே எனக் கேட்டார்?

முக்தாபாய்:— குழந்தாய்! சாங்கா! இவை சித்திகள் ஆகாது இது "ஆத்ம சக்தி" ஆகும். இந்த ஆத்மசக்தி எப்போதும் அவர்கள் விரும்புவதும் இல்லை அதைப் பயன்படுத்துவதும் இல்லை. ஆனால் 3 வகைகளாகப் பிரிக்கலாம்

1. "தெய்வ சக்தி"!
2. "அஷ்ட சித்தி"!!
3. "ஆத்ம சக்தி"!!!

என மூன்றும்.





உ

1. தெய்வ சக்தியானது விஷ்ணுமாயை (மூலமாயை) சம்பந்தம் கொண்டது! இதை யோகமாயை எனச் சொல்வாரும்;

2. அஷ்டசித்திகளும் யோகத்தோடு கூடியதும் இந்த சக்தியானது நம் உடம்பில் 96 தேவர்கள் இருக்கிறார்கள் நம் "யோகபலத்தால்" இந்த 96 பேரையும் நம் வசப்படுத்தி அவர்கள் மூலமாக பெறும் சக்தியே "அஷ்டசித்திகளாகும்" இந்த அஷ்டசித்திகள் "**அடக்குமுறையில்**" செய்யப்படுவதால் இவை "**ஆத்ம பலத்தை**" மறைக்கும்! (அழிக்க முடியாது) ஆனால் "**அசுர பலத்தை**" கொடுக்கும். இவை ரஜோகுண முறையில் "நான் எனது என்னுடையது" என்ற அஹங்கார அபிமான பலத்தால் உருவாவதால் "சாந்தி, நிம்மதி, அமைதி, திருப்தியை தராது!" இவன் ஆத்மபலத்தை மறைத்து அஹங்காரத்தை உண்டுபண்ணி பின்னால் அழிவைத்தான் உண்டுபண்ணும்.

3. ஆத்ம சக்தியானது "தாம் அடங்கி" (மனதை அடக்கி அழித்து) அஹங்காரத்தையும் அபிமானத்தையும் அழித்து சாந்தி நிம்மதி, அமைதியையும் கொடுத்து அனைத்திலும் **போதும்** என்ற நிறைவைக் கொடுத்து அந்த 96 பேரையும் அடக்காமல் அவர்களையும் தம் (ஆத்ம) சொரூபமாக்கி **தாம்** (ஆத்மா) **தாமாகவே** (ஆத்மாவாகவே) இருப்பதால் இந்த 96 பேருடைய நட்பும் நமக்கு கிடைக்கிறது. ஆகவே இந்த "ஆத்ம சாதகனுக்கு" இவர்கள் மறைமுகமாகவே அனுக்ரஹம் பண்ணுகிறார்கள். இந்த ஆத்ம சாதகன் அனைத்திற்கும் அனைவருக்கும் பிரியமானவனாக இருப்பதாலும், இவனே "**அனைத்துக்கும் ஆத்மாவாக**" இருப்பதனாலும், ஸ்ரீபரம் பொருள் அம்சம் முழுமையாக பொருந்தி இருப்பதனாலும். மூலமாயையாகிய "**யோகமாயை**" (விஷ்ணுமாயை உலகிற்கு அது யோகமாயையாகும். மூலமாயை ஸ்ரீபரம் பொருளுக்குள் இருந்து கொண்டு அதன் அம்சம் கொண்ட சாதகர்களுக்கு அவர்கள் அறியாமலேயே உபகாரமாக இருக்கும் இது யோகமாயையாகும்) இந்த யோகமாயை ஞானிகளிடம் அவர்கள் அறியாமலேயே கண்ணை இமை காப்பது போல் காத்துக் கொண்டிருக்கும்.



உ



முக்தாபாய்:- ஆகவே குழந்தாய் சாங்கதேவா!
உன்னிடம் உள்ளது **அடக்குமுறை!**
எம்மிடம் உள்ளது **விட்டமுறை!!**
"அடக்குமுறையென்பது உன்னை அடக்கி ஆளும்."
"விட்டமுறையென்பது எமக்குள் அடங்கி இருக்கும்."

ஆகவேதான் உயிரற்ற ஜடசொரூபமான கட்டமண்சுவரை எம் யோகமாயை தாமே இயங்க வைத்தது!
ஆனால் நீ கற்ற அஷ்டசித்திகளும் உயிருள்ள ஓர் ஜீவனை உனக்கு கட்டுப்படுத்தி உனக்கு "அஹம்மமதையை" உண்டு பண்ணியது!

எம் சாங்கா!
இதைக் கவனி ஒருவன் 12 ஆண்டுகாலம் கடுமையாக யோகம் பயின்று "ஜலத்தின் மீது நடக்கும்" சக்தியை கற்றுக் கொண்டு ஓர் ஞானியிடம் தம் தவவலிமையை காட்டினான்
அதற்கு அந்த ஞானி என்ன சொன்னான் தெரியுமா?
அப்பனே 10 பைசா கொடுத்தால் ஓர் ஓடக்காரன் அக்கரையில் கொண்டு சேர்த்துவிடுவான். இதற்கு 12 ஆண்டுகள் வீணடித்துவிட்டாயே? உன் "சித்தியின் 12 ஆண்டு சக்தி" "**10 பைசாதான்**" என்றார்.

நீ பல நூற்றுக்கணக்கான வருஷம் கடும் பயிற்சி பண்ணி ஏதேதோ "கண்கட்டி வேலைகள்" கையாண்டு ஜெயங்கள் முன் ஓர் புலியின் மீது ஆரோகணித்து வந்துவிட்டதாக பெருமைப்படுகிறாய்?
"**ஓர் ஈ**" அதே புலியின் சிரசின் மீது எத்தனை கம்பீரமாக பவனி வந்தது தெரியுமா? அது எந்த சக்தியை பெற்றது? அப்படியானால் உன் அகந்தை சித்திகளும் மேலத்திலே அமரும் ஓர் **ஈ**க்கு சமம் தானே என்றாள் எம் அன்னையாகிய "ஸ்ரீ முக்தாபாய்"

சாங்கதேவர் வெட்கித்து தலை குனிந்தான். இதைப் போலவே எம் அன்னையாகிய ஸ்ரீ முக்தாபாய் அனேக ஜீவர்களின் அறியாமையை போக்கியும் அண்டியவர்களுக்கு "அரிய சேவை கொடுத்தும்" தாமும் ஞான அற்பணமான சேவைகள் பல புரிந்தும் "**ஓர் பெண்மை**" சாதித்திருக்கிறாள்.



உ

(95)

ஓ அன்பிலும், அறிவிலும், சேவையிலும், கடமையிலும் ஸ்ரீ ஸத்குரு வாக்கியார்த்த நிரந்தர சேவையிலும் எம் ஸ்ரீ அன்னை பிரம்மஸ்ரீ கிருஷ்ணபாய் மாதாஜீ அவர்கள் மனமுவந்த சேவையிலும் கரைந்து உருகிய எம் செல்வ **மகனே!**

ஸத்சித் ஆனந்தா!

அப்படிப் பெருமைமிக்க ஸ்ரீ அன்னையான **"பிரம்மஸ்ரீ முக்தாபாய்"** அவர்களே நம் அன்னையான **"பிரம்மஸ்ரீ கிருஷ்ணபாய்"** மாதாஜீ என பிரமாணமாக உரைக்கிறேன்.

எம் செல்வா! ஸத்சித் ஆனந்தா! காஞ்சன்காடு ஸ்ரீ ஆனந்தாஸ்ரமத்தின் பெருமையை அந்த ஆயிரம் சிரம் கொண்ட ஆதிசேஷனாலும் விரித்துரைக்க முடியாது!

1. ஆனந்தாஸ்ரம நிறுவனம் :- நைஷ்டிக பிரம்மச்சாரியான ஸ்ரீ ஆஞ்சநேயர் அம்சம் பெற்ற ஸ்ரீ சமர்த்த ராமதாசரே ஆகிய ஸ்ரீ **"பப்பா"** ராமதாசராக வந்தார்!

2. ஆனந்தாஸ்ரமத்தைக் கட்டிக்காத்து அதற்கு பெரும் **"தாயாக"** அமைந்தவர் ஸ்ரீ ஆதிசக்தியின் அம்சமான ஸ்ரீ அன்னை முக்தாபாயின் திருமறு உருவே பிரம்மஸ்ரீ **கிருஷ்ணபாய்** ஆகும்!

3. ஆனந்தாஸ்ரமத்தை கட்டிக்காத்தும், ஸ்ரீ ஸத்குரு வாக்கை அப்படியே ஏற்றுக்கொண்டு சேவையிலும் கடமையிலும் மாறாதவர் ராமாயண காவியத்தை ஸ்ரீ ராமன் அவதரிக்கும் முன்னரே அதை எழுதிய ஸ்ரீ வால்மீகி மகரிஷி அம்சம் பொருந்திய எம் உத்தமபுத்திரன் **ஸத்சித் ஆனந்தா** ஆகும்!

4. ஆனந்தாஸ்ரம முன்னேற்றத்திற்காகவும் அதைக் கட்டிக்காக்கவும் கங்கணம் கட்டிக் கொண்ட கர்மயோக வீரசன்னியாசி **"முக்தானந்தா"** ஆகும்!

இவர்களை கண்டு பேரானந்தம் கொள்வது ஓர் உதவாக்கரையான மைத்திரியம் ஸ்ரீ ... பாபா ஆகும்.



(ஸத்ய வாக்கு) 

ஸத்யம் பேசு. தர்மம் செய்

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலை பெறும்.

# தமிழ் புத்தாண்டு வாழ்த்து செய்தி

## அன்பான குழந்தாய்!

ஸச்சித் ஆனந்தா! நலமும், திடமும், சுகமும், பெற்று வாழ வாழ்த்துக் கூறி ஆசி கூறு கின்றோம்.


ஓம் ஐயனே!

உன்னை ராமாயண காவிய நாயகன் அம்சம் என எமதய்யன் திருடன் மூலமாக உணர்ந்து கொண்டோம். அந்த காவிய நாயகன் "வால்மீகி மஹரிஷி" ஆகும். அந்த வால்மீகி மஹரிஷியின் வாழ்க்கை வரலாற்றையும் சற்று கோடிட்டு காட்டுகிறோம். அதை உன் உள் உணர்வால் மட்டும் உணரவும். ராமன் ஜனனம் எடுக்கும் முன்பே "ராம காவியத்தை" அந்த வால்மீகி எழுதி முடித்து விட்டார். வால்மீகி ராமாயணம் எழுதி முடித்த பிறகுதான், வால்மீகியின் மூலமாக "ஓர் சாபம் பெற்ற" பிறகுதான் மஹாவிஷ்ணு ராமனாக திரு அவதாரம் எடுத்தார் என மஹான்களின் அனுபவ வாசகமாகும். எப்படி யென்றால்?

குழந்தாய்!

ஸச்சித் ஆனந்தா! வால்மீகி பாலியத்தில் ஓர் வேடுவனாகவும் ஓர் பெரிய கொள்ளைக்காரனாகவும் இருந்தான். கடுமையான வலிகளை பாலியத்திலேயே அனுபவித்து விட்டான் இந்த வால்மீகி. பின் பூர்வ புண்ணியம் கை கொடுத்தது. அதன் பயனாக இவன் ஸ்ரீ நாரதமஹரிஷியை சந்திக்க நேர்ந்தது. நாரதர் இவனைக் கேட்டார் :- அப்பா! இப்படி கொலை, களவு, கொள்ளையெனச் செய்கிறாயே இவை "பாபம்" என உணர்ந்து விட்டிலையெனக் கேட்டார்? இவன் சொன்னான் :- கொன்றால் பாபம் (அதை) தின்றால் தீரும் என்றான். அவர் கேட்டார் அப்பாபத்தை நீ ஒருவன் மட்டும் அனுபவிக்கிறாயா? அல்லது எல்லோரும் அதாவது இவ்


DLABS


DLABS







சம்பந்தப்பட்ட உன் மனைவி உன் அப்பா அம்மா உன் உறவினர்
கள் அனைவருக்கும் பங்கு உண்டா எனக் கேட்பார்? அவன்
சொன்னான் :- என் கொள்ளை சொத்தில் அவர்கள் பங்கு போடு
வதைப் போல் இந்த பாபத்திலும் அவர்களுக்கும் "சம பங்கு உண்டு"
என்றான் அது இல்லை என்றார் அவர். பங்கு உண்டு என்றான் அவன்.
சரி உன் வீட்டிற்கு சென்று அதற்கு உண்டா இல்லையா என
கேட்டு வா என அவனை அனுப்பி வைத்தார்.

இந்த வேடனை வால்மீகி உடனே வீட்டிற்கு வந்தான்
தன் அம்மா அப்பா மற்றும் உறவினர் அனைவரிடமும் என் கொள்
ளை சொத்தில் பங்கு கொள்கிறீர்கள். அந்த கொள்ளை பாபம் என
உணர்கிறேன். அந்த கொள்ளை சொத்தில் பங்கு கொள்ளும் உங்
கள் அனைவருக்கும் அந்த பாபத்திலும் சம பங்கு உண்டு தானே?
எனக் கேட்டான் அனைவரும் அப்படி இல்லையப்பா. உன் சொத்தில்
தான் பங்கே தவிர உன் பாபத்தில் எங்களுக்கும் பங்கு இல்லை என
அடித்துச் சொல்லி விட்டனர். தன் மனைவியிடமும் கேட்டான்
அதாவது என் உடம்பில் பாதி கொண்டவள் நீ உனக்கு நான்
செய்யும் பாபத்திலும் பங்கு உண்டு தானே எனக் கேட்டான்
அவள் ஓர் நீதி சொன்னாள் :- ஆண்கள் செய்யும் பாபத்தில்
பங்கு இல்லவே இல்லை ஆனால் சொத்தில் பங்குண்டு. ஆனால் ஆண்
கள் செய்யும் புண்ணியத்தில் பெண்களுக்கு சம பங்குண்டு
என்றும், அதேபோல் பெண்கள் செய்யும் பாபத்தில் ஆண்க
ளுக்குச் சம பங்குண்டு. ஆனால் பெண்கள் செய்யும் புண்ணியத்
தில் ஆண்களுக்கும் பங்கு இல்லை என்றும் அழுத்தமாக சொன்ன
அவள் பெண்களுக்கு மந்திர, தந்திர, வேள்வி, ஆசார, புனஸ்கா
ரம், அபிஷேகம், ஆராதனை, அர்ச்சனை, இவை எதுவும் வேண்டாம்
"**பதிசேவை**" ஒன்றுமட்டும் செய்தால் போதும் அவள்
கணவன் செய்யும் புண்ணிய காரியங்களின் சம பங்கு அவளுக்கு
வந்துவிடும் இதுவே சாஸ்திர ரகசியம் என்றாள். இந்த வேடன்
பயந்து போய் இனி கொலை களவு கொள்ளை செய்வதில்லை என சபதம்
ஏற்று இதுகால பரியந்தம் தான் செய்த பாபத்திற்கு பரிகாரம்



உ

(99)

என்னென ஸ்ரீநாரத மகரிஷியிடம் மிகவும் பணிந்து கேட்டான்
அவரும் இவன் கடைத்தேறும் காலம் வந்துவிட்டதென உணர்ந்து
"**ஸ்ரீராம்**" என்ற மூலமந்திரத்தை ஓதி இதை ஸ்மரித்து வந்தால்
உன்பாபம் அனைத்தும் பஸ்பமாகிவிடும் எனச் சொன்னார்.
அந்த வேடுவன் "ஸ்ரீ மஹா பாதகங்கள்" நிறையச் செய்திருந்த
தன்மையினால் "ராம நாமா" அவனால் உச்சரிக்க முடியவில்லை.
எவ்வளவோ முயன்றும் அவனால் முடியவில்லை. நம் நாரத
பகவானோ இவனை எப்படியாவது ஆட்கொள்ள (அவனை ஆண்டு
கொள்ள) முடிவு செய்தார். வேடுவனையடியால் காட்டில்
உள்ள மரம், செடி, கொடிகளின் நாமா அவனுக்குத் தெரியுமென
உணர்ந்து. அங்கு நின்ற மரங்களில் ஒவ்வொன்றை காட்டி இது
என்னமரம், இது என்னமரம்? எனக் கேட்டுக் கொண்டே வந்
தார். அதில் ஓர் மரத்தின் பெயர் "**மரா**" மரம் எனத் தெரிந்த
நாரதன் அதன் பெயரையும் கேட்டான். உடனே அந்த வேடுவனும்
இது "மராமரம்" என்றான். இப்போது மேலும் தபசுக்கு எனச்
சொல்லி இப்படி அமர்வாயாக இந்த மரத்தின் பெயரை மட்டும்
சொல். "மரம்" வேண்டாம், "மரா" வேண்டும், என அந்த "**மரா**"
என்னும் நாமாவையே மந்திரமாக்கி சென்று விட்டாரெம்
ஸ்ரீநாரதபகவான்.

எம் செல்வனே! பால்ய ஸந்தோஷானந்தா! அந்த
"மரா" என்ற இரண்டெழுத்தை அந்த வேடுவன் சர்வ சதா ஸ்ம
ரித்தான். அதுவே வேதாந்த மூலமந்திரமாகிய "**ராம்**" என
ஆகியது. பல ஆயிரம் வருஷம் தபஸ் செய்து உடலெல்லாம் புற்று
மூடியும் இவன் வைராக்யத்தினையும் முழு நம்பிக்கையினையும்
ஸ்ரீப்ரம்மதேவன் காட்சி கொடுத்து நீ சர்வ சதா ஸ்ரீராம நாமா
வை ஜபித்து வந்தாய் அறிந்தோ அறியாமலோ ஸ்ரீராம நாமாவை
ஸ்மரித்தால் அவர்கள் பஞ்ச மஹா பாப மெல்லாம் பஸ்பமாகும்
எனச் சொல்லி, உன்னுடைய பாபங்கள் அனைத்தும் பஸ்மமாயின.
இந்த ராம நாமாவுக்கு அதிபதியாக ஸ்ரீமஹாவிஷ்ணு ராமஜனனம்





எடுக்கப் போகிறார். அது புனிதமான ஜனனம். அவர் ஜனனம் எடுக்கும்முன் அந்த ராமகாவியத்தை எழுதி பூர்த்தி செய்வாயாக நீ ராமாயணம் எழுதி முடித்த பின் நான் ஸ்ரீராம ஜனனம் நடை பெறும் உன் காரியத்தை முடிப்பாயாக என ஆசி கூறி விட்டு எம் பிரம்மதேவர் அந்தர்த்யானமானார்.

இந்த வேடுவனை வால்மீகியும் அந்த புனிதமான, புண்ணியமான, அற்புதமான, அனுபவ நிதியான அந்த ஸ்ரீராம காவியத்தை எழுதி முடித்து "ஆத்மதிருப்தியுடன்" ஆஸ்ரமம் விட்டு வெளியே வந்தார். அப்போது ஓர் அதிசய சம்பவம் நடந்தது.

எம் செல்வக்குமாரா!

ஸத்சிதானந்தா! இவர் ஆஸ்ரமம் விட்டு வெளியே வரவும், ஓர் வேடன் ஓர் ஜோடி பறவைகளில் பெண் பறவையை தம் பாணத்தால் அடித்து வீழ்த்த; பெண்பறவை இறந்து விழ; ஆண் பறவை தம் பேடை இழந்த தனிமையினால் கத்தி கதறிக் கொண்டே அந்த பெண் பறவை சுற்றிச் சுற்றி வர இதை இந்த மகரிஷி கண்டார். பெண்பறவையை இழந்து ஆண்பறவை தவிப்பதைக் கண்டு பொறுக்க மாட்டாமல் ஆக்ரோஷமாக அந்த வேடுவனுக்கு ஓர் சாபம் கொடுத்தார்; சாபம் என்னவெனில்?

ஏ மானிடனே! இந்த பெண் பறவையை இழந்து ஆண்பறவை தவிப்பதைப் போல் நீயும் உன் பெண்ணை இழந்து தவிப்பாயாக!!! இதுவே அம்மகரிஷி சாபமாகும்.

எம் அருமை மைந்தா! ஸத்சிதானந்தா! வேடுவனாக வந்தவன் ஆனந்தமாக சிரித்துக்கொண்டே ஹே மஹானுபாவா! ஹே மஹரிஷே! உம் சாபத்தை உம் அனுக்ரஹமாக ஏற்றுக் கொள்கிறேன் என உரைத்துக்கொண்டே ஸ்ரீ மஹா விஷ்ணுவாக காட்சி தந்தார். பின்னர் தான் மஹா விஷ்ணு ஸ்ரீராமனாக அவதாரம் செய்த ராமாயணம் குறையின்றி நிறைவேறியது.

**அந்த மஹான் ஸ்ரீ வால்மீகி மஹரிஷியே**

**உங்கள் பூஜ்யஸ்ரீ ஸத்சித் ஆனந்தாவாகும்.**



(ஸத்ய வாக்கை)

ஸத்யம் பேசு. ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்யம் பேசினால் தர்மம் நிலை பெறும்.

ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்!!!

# "ஆனந்தாஸ்ரமம்"

# "ஆனந்தத்தின் ஓர் இருப்பிடம்"!

அன்புக் குழந்தைகளே! "ஆனந்தாஸ்ரமம்" என்ற ஓர் ஆன்மீகமையமானது, ஸ்ரீ ஸ்வாமி "ராம்தாஸ்", மற்றும், அன்னை பூஜ்ய ஸ்ரீ "மாதா கிருஷ்ணபாய்", அவர்களால் 1931 ம் ஆண்டு நிறுவப்பட்டது. அவர்கள் இருவரும் முறையாக "பப்பா" என்றும் "மாதாஜீ" என்றும் அன்பாக பக்தர்களால் அழைக்கப்படுவர். அவர்களுடைய பாதை "அன்பும், பக்தியுமாகும்" இறைவனுடைய இச்சைக்கு தம்மை முழுமையாக "அர்ப்பணித்து "சரண்" புகுவதாலும், அவன் நாமாவையே சர்வ சதா ஜபிப்பதினாலும், தைலதாரை போல் இடையறாது நினைப்பதினாலும், ஒருவன் எப்படியும் "வேகமாகவும், நிச்சயமாகவும்" இறைவனை உணர முடியும், என அவர்கள் தனது சொந்த வாழ்க்கை மூலமாக "வாழ்ந்து காட்டினார்கள்". எல்லா நிகழ்ச்சிகளிலும், எல்லா காட்சிகளிலும், எந்த நேரத்திலும், எல்லா வற்றிலும், கடவுள் "நம்மோடு" இருக்கிறார் என்பதைக் கண்டு உணர்ந்து அவர்கள் ஒவ்வொரு நிலையையும் உற்சாகமாக ஏற்றுக் கொண்டார்கள்.





Om Sri Ram Jai Ram Jai Jai Ram

Let your heart be ever filled with the sweetness of Ramnam.
All joy and peace to you.
Hearty Blessings
Ramdas
23.4.57

உ





ஸ்வாமி "பப்பா" ராம்தாஸ் அவர்களால் குறிப்பிடப்பட்ட ஆனந்தாஸ்ரமத்தின் பொது சேவை!

## "சேவை"

1. உலக சிருஷ்டியிலும், உயிரினங்களிலும், "இறை சொரூபம்" உள்ளது என்ற பார்வையின் அடிப்படையில் பிரபஞ்ச அன்பையும், சேவையையும், வளர்ப்பதே இந்த ஆஸ்ரமம் தமது குறிக்கோளாக முன்வைத்துள்ளது.
2. ஆணோ, பெண்ணோ, குழந்தையோ, எந்த இனமோ, எந்த ஜாதியோ எந்த நாடோ, எந்நிலையிலிருந்தாலும் இந்த ஆஸ்ரமத்தை "சுதந்திரமாக" அணுகலாம்.
3. இந்த இடத்தில் பரஸ்பர அன்பையும், சேவையையும், ஊக்குவிக்க ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்படும். இதனால் "நமக்குள் என்ன உணர்ந்தோமென்பதை" வெளி உலகில் உள்ள மனித வாழ்க்கை சரியான பாதையில் நடந்து செல்ல ஓர் உதாரணமாக நிரூபிக்கப்படும்.
4. எல்லாக் காலங்களிலும், எல்லா விஷயங்களிலும், ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் "இறைவன் நமக்கு உதவியாகவும், துணையாகவும்" இருக்கிறார் என்பதை உணர முடியும்.
5. "அன்பும்" அறிவொளியும் "ஆனந்தமான" இந்த ஆஸ்ரமம் செயலாக்க மேற்கொண்டுள்ள மாபெரும் சேவைக்கு இறைவன் தனது தயாளத்வத்தையும், கருணையையும், அருளையும், திருபா கடாக்ஷத்தையும், முழுமையான ஆசியையும், பொழிய "தலை வணங்கி" ஏற்றுக் கொள்கிறோம்.
6. மேலே கூறிய குறிக்கோளை நோக்கி முன்னேறிச் செல்ல ஒரு சாதகனுக்கு சாதகமான சூழ்நிலைகளையும், எல்லா வசதிகளையும், ஆனந்தாஸ்ரமம் செய்து கொடுக்கிறது.



உ

ஆனந்தாஸ்ரமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட

# “சாதனை”

1 இறைவனின் மஹிமையை பாடுவது!

2. இறைவனின் புனிதமானதும், சக்தி வாய்ந்ததுமான “ஸ்ரீ ராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம், ஓம்!” இந்த மந்திரத்தை முழுநம்பிக்கையுடனும், ஆழ்ந்த பக்தியுடனும் ஜபிப்பதுடன்; இறைவனின் கல்யாண குணங்களை “நிதித்யாசிப்பதுமாகும்!”

3. சர்வவியாபியான இறைவனிடம் தன்னை முழுமையாக “**அர்ப்பணம்**” செய்தல். அதாவது **சரண்புகுதல்**

4. எல்லாவற்றிலும், எல்லாரிடத்திலும், எல்லா உயிரினங்களிடத்திலும், எக்காலமும் “**இறைவனை காணல்!**”

5 எல்லோரிடத்திலும் இறைவனின் “சாக்ஷாத்கார சொரூபம்” நிறைந்திருக்கிறதென்று “**அன்பு**” செலுத்தி “**சேவை**” செய்தலும் முக்கியம்.

6. எல்லா காரண காரியங்களுக்கும் இறைவனின் தூயான ஆணைக்கு நம்மை ஆட்படுத்துதல்.

இவைகளே சாதனையாகும்.

“ஸ்வாமி “**பப்பா**” ராம் தாஸ் அவர்கள்”

**“பரிபூரண சமாதி 1963”.**

“ஸ்ரீ அன்னை கிருஷ்ணை பாய் “**மாதாஜீ**” அவர்கள்”

**பரிபூரண சமாதி 1989.**


आ नं दा श्र म



உ

(106)

ஸ்ரீ பப்பாவுக்கும் ஸ்ரீ மாதாஜீக்கும் பிறகு
ஆனந்தாஸ்ரம பணியை மேற் கொண்டவர்

## "ப்ரம்மஸ்ரீ ஸத்ஸித் ஆனந்த"

மஹராஜ் ஆகும். அவருடைய சிரேஷ்டமான குணங்களால், ஆஸ்ரமம் புதுப் பொலிவுடன் "அந்த ஸ்ரீ மஹான்களின் ஆசியாலும், சிறப்பாக நடைபெற்றுவருகிறது. ஸ்ரீ ஸத்ஸித் ஆனந்த ஜீ அவர்கள் உற்சாகமாக உழைக்கும் சாந்தமூர்த்தியாக திகழ்கிறார். எங்கள் அனைவர்க்கும் ஸ்ரீ ஸத்ஸித் ஆனந்த ஜீயைப் பார்க்கும் போதெல்லாம் ஸ்ரீ பப்பாவும், ஸ்ரீ மாதாஜீயும், இணைந்து "ஒருருவாய் வந்திருப்பது போல் தோற்றுகிறது". சாந்தியும், அமைதியும், ஆனந்தமும் இணைந்த, ஸ்வாமி ஸத் ஸித் ஆனந்த மஹராஜ், என எண்ணிலடங்கா ஆஸ்ரம பக்தர்கள் கருதுகிறார்கள்.

## "ஆஸ்ரமம் வரும் வழிகள்"!!!

1. தென்னக ரயில்வேயில் "மங்களூர் — சோரனூர்" பிரிவிலுள்ள "காஞ்சன் காடு" என்ற ஊரில் அமைந்துள்ளது. முக்கிய ரயில்கள் அனைத்தும் அங்கு நிற்கும்.
2. இந்த காஞ்சன் காடு" மங்களூர் ரயில் நிலயத்திலிருந்து 65 கி-மீட்டர் தெற்கேயும், கண்ணூர் ரயில் நிலயத்திலிருந்து 60 கி-மீட்டர் வடக்கேயும் உள்ளது.
3. காஞ்சன் காடு ரயில் நிலயத்திலிருந்து ஆட்டோ, டாக்ஸி மற்றும் பஸ் மூலமாகவும் ஆஸ்ரமம் வரலாம், இடைபட்ட தூரம் 5 கி-மீட்டர்.
4. சாலை வழியாக வருவதாக இருந்தால், "NH எண் 17ல்" ராம்நகர்" என்ற பகுதியில் இறங்க வேண்டும். அங்கிருந்து "பணத்தூர்" செல்லும் சாலையில் "அரை கி-மீட்டர்" வந்தால் "வலது பக்கத்தில்" இருக்கிறது.
5. ஆனந்தாஸ்ரமம் அருகில் உள்ள "விமான நிலயம்" மங்களூராகும். மங்களூருக்கும் காஞ்சன் காடுக்கும் இடைப்பட்ட தூரம் 100 கி-மீட்டர். "அங்கிருந்து எல்லா பெரிய நகரங்களுக்கும் விமானங்கள் உள்ளன.
6. "அன்பான குழந்தைகளே"! நீங்கள் இப்போது ஆனந்தத்தின் இருப்பிடமான "ஆனந்தாஸ்ரமத்தில்" தான் இருக்கிறீர்கள் இதுவே உண்மை.

[illegible] பாபா.



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. **ஓம்** தர்மம் செய்.
நாவை அடக்கு. கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால் தர்மம் நிலை பெறும்.”

“ஸ்ரீராம், ஜெய ராம், ஜெய ஜெய ராம், ஓம்”!!
“அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம், அகமே எல்லாம்”!
“ஜகம், பரம், ஜீவர்களும், சிறிதும் இல்லை”!!

# அன்பின் குடில்!!!

**ஓ** எம் ஞானக்குழந்தைகளே! இந்த உதவாக்கரை வைத்தியமானது **1970 To 1996** வரை இருபத்தி ஆறு ஆண்டுகள் ஊர் சுற்றியாகவே இருந்தது. எமதய்யன் திருடனும் (கண்ணனும்) ஸ்ரீ குரு தேவருமாக இணைந்து சொன்ன வாசகம்:- குழந்தாய்! அலைந்தது போதும் “சற்று அமர்வாயாக” என சொல்லி ஞானபூமியாம் திரு அண்ணாமலையில் ஓர் இடத்தை சுட்டிக் காட்டி அமர வைத்தார்கள்.

குரு அருளாலும் தெய்வ கிருபையாலும் “சுமார் ஓர் நாவலரை ஆண்டுகள் சிவ மெய்யன்பர்களுக்கு “**பாடம்**” அனுபவ நிலையில் நடத்தினோம். அங்கு “**போதும் என்ற நிறைவு**” அவன் அருளால் உண்டானது. வடக்கே கல்கத்தாவிலுள்ள எம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அழைப்பை மேற்கொண்டு அங்கு சென்று, அங்கிருந்து கோவாவில் பணிபுரிந்த எம் செல்வன் மகேசன் இல்லத்தில் சென்று சிவ காலம் தங்கி இருந்தோம்.









உ

அதுசமயம் நம் மெய்யன்பர்களுக்கு இந்த வைத்தியம் அமர ஓர் இடம் எம் அன்னை ஸ்ரீ காவிரிக் கரையில் கேட்டோம். அங்கு மலையும் நதியும் இருக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தோம். எம் ஸ்ரீ குருதேவர் அருளாலும், தெய்வ கிருபையாலும் "தற்காலிகமாக" அமர்வதற்கு மட்டும் எம் மெய் அன்பர்களால் ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓர் குடிசையை அமைத்துக் கொடுத்தார்கள். ஒன்றரை ஆண்டுகள் அங்கிருந்தோம். அந்த இடம் மேட்டூருக்கும் பவானிக்கும் இடையில் உள்ள "நெரிஞ்சி பேட்டை" என்னும் கிராமமாகும்.

அங்கிருந்து கொண்டே அதன் சமீபமான இடமாகிய **"கோம்பூர்"** கிராமத்தில் ஒன்றரை ஏக்கர் பூமியை வாங்கி அதில் இந்த வைத்தியம் அமர்வதற்கு ஓர் இடமும்; எம் பிரம்மச்சாரிகள் ஐவர் தங்குவதற்கு ஐந்து அறைகளும்; ஞானதீதமான சாதனையில் இருந்து வரும் மேல் நாட்டவர் நான்கு பேர் தங்குவதற்கு நான்கு அறைகளும்;

**"மட்டுமே அமைத்துக்கொண்டோம்".**

"மற்றும் தென்னங் கீற்று கொட்டகைகள் இரண்டுண்டு"; அதில் நம் மெய்யன்பர்கள் **"குடும்பிகள்"** மட்டுமே தங்க முடியும். வெறு சந்நியாசிகளோ சாதுக்களோ "நிரந்தரமாக" தங்குவதற்கு இடம் இல்லை" ஆனால் சாதுக்களும் சந்நியாசிகளும் "வந்து போவர், தங்குவதில்லை".

இந்த அன்பின் குடில் ஆனது மேற்கே சித்தேஸ்வரன் மலைக்கும், கிழக்கே காவேரி கரைக்கும் மத்தியில் அமைந்ததாகும். ஏன் அப்படி அமைந்திருக்கிறது என்றால்?

1. **"மலையை போல்"** உன் "ஞான வைராக்கியத்தில் உறுதியாக இரு"
2. **"நதியை போல்"** பிரபஞ்ச ஓட்டத்தில் முட்டாதே. மோதாதே. வளைந்து நெளிந்து பணிந்து செல்.



உ

2001 ல் நவம்பர் மாதத்தில் இந்த அன்பின் குடிலில் தங்க ஆரம்பித்தோம். இங்கு "சரணாகதியை" மட்டுமே மையமாகக் கொண்டு எம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரின் "ஆழ்ந்த பக்தியும்", எம் ஆதி சங்கரரின் அத்வைத வேதாந்த கருத்துக்களும், எம் ரிபு முனிவரின் "ரிபுகீதையாம்" சுத்த அத்வைத நூலும் நான் இங்கு இயங்கி வருகிறது.

மேலும் இங்கு வேதபாராயணமோ, சாஸ்திர பாடமோ, மந்திர சுலோகங்களோ, மற்றும் மந்திர, தந்திர, எந்திர, ஹோம, பூஜை புனஸ்காரம், அபிஷேக, ஆராதனை, பஜனை, நாமசங்கீர்த்தனம், மற்றும் ஆருடம், ஜாதகம், நவக்கிரஹ வழிபாடு, அருள்வாக்கு, செய்படுவித்தையாகிய குறளிவேலை மற்றும் எந்த "புறவிருத்தி"களும் இல்லவே இல்லை.

இங்குள்ள பயிற்சியாவது!

அதிகாலை 5 To 6 மணி வரை ரிபுகீதை பாராயணம்.
காலை 10 To 11 மணிவரை தியானமும், ஸத்ஸங்கமும், தரிஸனமும்.
மாலை 6-30 To 7-30 வரை " " " .

இந்த ஸத்ஸங்க காலங்களில் குடும்பம், தொழில், மற்றும் உடல் உலக பிரச்சனைகள் பற்றி கேட்கவும் கூடாது. கேட்டால் அவர்கள் வெளியில் அனுப்பப்படுவர்.
இந்த ஸத் ஸங்க காலங்களில் பக்தி, ஞானம், பக்திஞானானுபவ ஒழுக்கங்கள் கேட்பவர்களுக்கு பதில் தெளிவாக சொல்லப்படும். மற்றும் சிலசமயங்களில் பக்தி ஞான அனுபவ சம்பந்தமான சிறு சிறுகதைகள் சொல்லி "ஞானத்தெளிவை உண்டுபண்ணப்படும்". மேலும் "ஞான வேட்கையாக வரும் அன்பர்களுக்கு" இடம் அறிந்து, செயல் அறிந்து, பொருள் உணர்ந்து அவர்கள் ஞான வேட்கையை தீர்க்கப்படும்! "மந்திரபூர்வமாகவோ, தீட்சை மூலமாகவோ அல்ல, அனுபவ அமிர்த வார்த்தைகளில் மட்டும்".



உ

இந்த அன்பின் குடிலில் நடைபெறும் காரியம்
அனைத்தும் ஸ்ரீமெய்யன்பர்கள் "அவன் அருளால்"
அவன் திருவடியிலேயே அனைத்தையும் சமர்ப்பித்து
அதை "**சேவையாக**" ஏற்று பணிபுரிகின்றனர்.

# "அன்பின் குடில் அமைப்பு"!

1. எல்லோருக்கும் இறைவன் ஒருவனே. ஆனால் நீ எந்த நாம ரூபத்தையும் வைத்துக் கொள்! ஆனால் அது ஸத்வ குண மூர்த்தியாக இருக்க வேண்டும்! கண்டிக்கும் தண்டிக்கும் தெய்வ மூர்த்திகளை (தேவதைகளை) வழிபடாதே!

௨. ஆழ்ந்த பக்திக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவராகும். உயர்ந்த உணர்ந்த ஞானத்திற்கு மஹான் ஸ்ரீ ஆதிசங்கரராகும். ஸ்வய அனுபவ அத்வைத ஞானத்திற்கு ரிபு கீதையாகும்.

3. பிரவர்த்தி மார்க்கம் இல்லவே இல்லை. அது பிறவித் தொல்லை. நிவர்த்தி மார்க்கம் உண்டு. அது மோட்சத்தின் எல்லை.

௪. எந்த அபிவிருத்திப் பணிகளும் இல்லவே இல்லை. அதனால் ஆடம்பரம், வசதிகள், பொழுதுபோக்கு கொண்ட அறைகள் (ரூம்கள்) இல்லவே இல்லை; இரண்டு கீற்று கொட்டகைகள் (குடிசை) தான் உண்டு.

5. இங்கு தலைவர், உபதலைவர், பொருளாளர், செயலாளர், மற்றும் எந்த பதவி வகிப்பவர்களும் இல்லை. அதற்குரிய பொருள் சேமிப்பும் இல்லை ஆகவே பணியாளர்களும் தேவை இல்லை.

6. முக்கியமாக "**குரு சிஷ்ய**" பாவனையும் இல்லையெனலாம். ஓர் வயதில் பெரியவர் இருக்கிறார் என்றும்; அன்பினால் அனைவரையும் அரவணைத்துக் கொள்கிறார் என்றும் பொருள் கொள்ள வேண்டும். ஆகவே "**அதிகாரம், அஹங்காரம்**" இல்லையென்றே சொல்லலாம்.

7. இங்கு இருப்பவர்களும், வருபவர்களும் "மெய் அன்பர்களே"!

௮. இது ஓர் "**சுதந்திர பறவைகளின்**"

# சரணாலயம்!!!



உ

இந்த அன்பின் குடிலுக்கு **"அன்பைத் தேடி"**
வரும் மெய்யன்பர்களுக்கு எளிமையான இடமும்
எளிமையான உணவும் அவன் அருளால் கிடைக்கும்.
வசதி உள்ளவர்களோ (மேல்நாட்டவர்களோ)
வசதியாக தங்கலாம் என்றோ, வசதியான உணவு கிடைக்கும்
என்றோ, **"பலநாள்"** தங்கலாம் என்றோ வர வேண்டாம்.
அன்பர்கள் சாதனை நிலையை அனுசரித்து **"3"** தினங்கள்
அல்லது **"5"** தினங்கள் வரைதான் தங்கலாம். அதற்கு மேல்
தங்கினால் உங்களுக்கும் ஓர் **"பற்று"** ஏற்பட்டு விடும்,
இங்குள்ள அன்பர்களுக்கும் ஓர் பிடிப்பு ஏற்பட்டு விடும்!


## "பற்றை விடுவதே சாதனை"!!!

### உங்கள் சாதனையாவது?

1. இறைநாமாவையும் குருவாக்கியத்தையும் முழுமையாக நம்புங்கள்.
2. நான் என்றல் என்னுடையது இவைகளை முழுமையாக விலக்குங்கள்.
3. குற்றம் குறை வேண்டாம், விருப்பு வெறுப்பு வேண்டாம்; பேதபார்வை வேண்டாம்.
4. எதையும் தலைவணங்கி இறை அருளே என ஏற்றுக் கொள்ளுங்கள்.
5. வாழ்க்கை வாழ்வதற்கல்ல; வாழ்க்கை சாதனைக்கே என நம்புங்கள்.

எம் அன்புக் குழந்தைகளே!
இவையே எம் உபதேசமாகும்!
உங்கள் அனைவரையும் உள்ளும் புறமுமாய் வழி நடத்துவோம்.
அனைத்தும் அந்த காலாதீத ஒன்றே!
அது நலமே! அது சுகமே!
அது யாமே! அது நீங்களே!
இது சத்யம், சத்யம், சத்யம்!!!

பாபா.




Adobe of Love

You are Everything!